ஸ்ரீ தமிழ்
உண்மை நின்றிட வேண்டும்

**ஆசிரியர் – பதிப்பாளர் :**
இல. பத்மப்ரியா

**பொறுப்பாசிரியர் :**
வெ. ஜெயராமன்

**துணை ஆசிரியர்கள் :**
நா. பாஸ்கரன்
சி. பாண்டிக்குமார்

**வடிவமைப்பு :**
ஸ்ரீஸ்வயம்

**சட்ட ஆலோசகர்கள் :**
இல. ஸ்ரீராம்
த. பாஸ்கர்

**அலுவலக முகவரி:**
ஸ்ரீ தமிழ்
77/6, 10வது அவென்யூ,
அசோக்நகர்,
சென்னை –600 083

70102 81932

http://www.shreetv.tv
facebook.com/shreetv
x.com/Shreetv media
youtube com/ShreeTV
shreemedia.news@gmail.com

Press and Registration of Books Act-ன்படி எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டவை.

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு ஸ்ரீ தமிழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகளின் கருத்துகள் படைப்பாளர்களின் சொந்தக் கருத்துகளே!

**தனி பிரதி: ரூ 30/–**
**ஆண்டு சந்தா: ரூ 600/–**

# ராகுல் எம்பியாகத் தொடர்வது ஜனநாயகத்திற்கு ஆபத்து!

*ஐந்தறிவு ஜீவன்களுக்கு இருக்கும் தேசப்பற்று எதிர்கட்சித் தலைவருக்கு இல்லையே !*

உலகத்தின் முன்னணி ஐ.டி நிறுவனங்களின் தலைவர்கள் அனைவரும் கலந்து கொண்ட ஏ.ஐ உச்சி மாநாடு தில்லியில் சிறப்பாக நடந்து முடிந்தது. ஐ.டி நிறுவனங்கள் மட்டுமின்றி, பன்னாட்டுத் தலைவர்களும் கலந்து கொண்டனர். புதிய தொழில்நுட்பம், முதலீடுகளைக் கடந்து இந்த மாநாடு பலரையும் ஈர்த்த காரணம் என்ன? ஏ.ஐ தொழில் நுட்பத்தை சாமானிய மநிதனுக்கு பயனுள்ளதாக ஆக்கச் செய்த இந்தியாவின் சாதனையே இந்த ஈர்ப்புக்குக் காரணம். விலங்குகளுக்குத் தன் துயரத்தை வெளிப்படுத்தத் தெரியாதே, அதைக் கண்டறிந்து உதவ ஏ.ஐ பயன்படுத்தப்படலாமே என்று 2026 ஜனவரியில் தன் எண்ணத்தைப் பகிர்ந்தார் பிரதமர். 2026 பிப்ரவரியில், அதுவும் ஐந்து வாரங்களில், அமுல் சொசைடியின் வாயிலாக, விலங்குகளின் நலன் காக்கும் திட்டம் வடிவமைக்கப்பட்டு, செயல்பாட்டிற்கும் கொண்டு வரப்பட்டது என்று உலகத் தலைவர்கள் முன் பிரதமரின் வேகமான, முன்மாதிரியான செயல்பாட்டைக் குறிப்பிட்டார் திரு. நந்தன் நீலிக்கேணி. பல மொழி பேசும் நம் நாட்டில், பிரதான மொழிகள் மட்டுமல்ல, வட்டார மொழிகளை பாதுகாக்கவும், மேம்படுத்தவும் ஏ.ஐ பயன்படுத்தப்பட வேண்டும் என்ற பிரதமரின் ஆர்வத்தை சுட்டிக்காட்டினார் பெர்ப்லெக்ஸிட்டி தலைவர் அரவிந்த் ஸ்ரீநிவாஸ். ஏஐ என்ற மந்திரக் கோல், எத்துறைக்கும் பயனளிக்க வேண்டும் என்பது ஆசையாக மட்டுமில்லாமல், அதை நடைமுறைப்படுத்த முடியும் என்பதை உலகுக்கு உணர்த்தியதால், உலகம் இந்தியாவின் வழிகாட்டுதலை நாட வந்த மாநாடாக இந்த உச்சி மாநாடு அமைந்திருந்தது.

நவீனத் தொழில்நுட்பத்தால், உலகை ஆட்டிப்படைத்த மேற்கத்திய நாடுகளைப் பின் தள்ளி, உலகத்தை ஆளவிருக்கும் புதிய தொழில்நுட்பத்தின் தலைநகராக இந்தியா உருவெடுத்திருப்பதை அறிவித்த மாநாட்டில், அரை நிர்வாணப் போராட்டம் நடத்தி, இந்தியாவிற்கு அவப் பெயரை ஏற்படுத்தியது காங்கிரஸ் கட்சி. காங்கிரஸ் தலைவர்களான மார்க்ரெட் ஆல்வா, மணி சங்கர் மற்றும் காங்கிரஸின் கூட்டணிக்கட்சிகளும், இந்த அநாகரீக மற்றும் தேசத்தைப் பழிக்கும் செயலைக் கண்டித்தனர். இந்தச் செயலில் ஈடுபட்டவர்களுக்கு காங்கிரஸ் ஆளும் ஹிமாசல பிரதேச மாநிலம் அடைக்கலம் கொடுத்து தில்லிப் போலீசாரை கைது செய்தது. மக்கள் ஆதரவையும், ஆட்சி அதிகாரத்தையும் ஜனநாயக வழியில் அடைய முடியாது என்று உணர்ந்தாலும், பதவி வெறியின் உச்சத்தாலும், தனக்குப் பதவி இல்லையெனில், இந்நாட்டையே அழித்துவிடுவேன் என்று ராகுல் சூளுரைத்து செயல்படுகிறார். காஷ்மீரில், பயங்கரவாதிகளைப் பிடிக்கும் டைஸன் என்ற நாய், தன் மீது குண்டடிபட்டபின்னும், பயங்கரவாதிகளைக் கண்டுபிடித்துக் கொல்ல பாதுகாப்புப் படையினருக்கு உதவியது. இந்த நாய், இராணாபிரதாபின் சேதக் குதிரையைப் போல் செயல்பட்டது. இந்த ஐந்தறிவு ஜீவன்களுக்கு இருக்கும் தேசப்பற்று, நம் நாட்டு எதிர்கட்சித் தலைவருக்கு இல்லையே !

# வங்கதேச பயங்கரவாதிகளின் புகலிடமாகும் திருப்பூர்

-பால கௌதமன்

பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவாகவும், பாதுகாப்புப் படையினரை அச்சுறுத்தும் வகையிலும் தில்லியில் சுவரொட்டி ஒட்டப்பட்டது. இதில் தொடர்புடையவர்களுக்கு ஆதரவாக, திருப்பூரில் முறைகேடாக தங்கியிருக்கும் வங்கதேசத்தினர் சிலர் செயல்பட்டதாகக் கூறி தில்லி போலீஸார் 23 பிப்ரவரி 2026 அன்று அம்மாபாளையம், பல்லடம், ஊத்துக்குளியைச் சேர்ந்த 6 பேரை கைது செய்து, தில்லிக்கு அழைத்துச் சென்றனர்.

மிஜனூர் ரகுமான், முகமது ஷபாத், முகமது லிட்டன், முகமது ஜாகீத், முகமது உஜால் என கைது செய்யப்பட்ட இந்த நபர்கள் நாடு முழுவதும் பயங்கரவாதத் தாக்குதல் நடத்த சதித் திட்டம் தீட்டியிருந்தது தில்லி போலீஸார் நடத்திய விசாரணையில் அம்பலமாகியுள்ளது. மேலும் இவர்கள் பாகிஸ்தானில் இயங்கும் பயங்கரவாத அமைப்பான லஷ்கர்-இ-தொய்பாவுடன் தொடர்பில் இருந்தார்கள் என்பதும் தெரிய வந்துள்ளது. இவர்களிடமிருந்து 8 செல்போன்கள், 16 சிம்கார்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

**இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட 6 நபர்களில், 5 நபர்கள் முறையான ஆவணங்களில்லாமல் ஏறத்தாழ பத்து ஆண்டுகள் இந்தியாவில் தங்கியுள்ளனர்.**

இதில் கைது செய்யப்பட்ட மிஜனூர் ரகுமான், 2018ல் திருப்பூருக்கு வேலைக்கு வந்தார். கோவிட் பெருந்தொற்று வந்தவுடன் வங்க தேசத்திலுள்ள தனது சொந்த கிராமமான ஷஜன்பூருக்குச் சென்றார், மூன்று மாதங்களுக்கு முன் மீண்டும் இந்தியா வந்தார். வங்கதேசத்தின் ராய்பூர் கோர்தலா மாவட்டத்தைச் சார்ந்த முகமது ஷபாத், 2018 முதல் திருப்பூரில் பணியாற்றுகிறார். இவரின் மனைவி, அசாம் மாநிலத்தவர் என்கிறார். வங்கதேசத்தின் போகுரா மாவட்டம், நந்திகிராமவாசியான உமர், திருப்பூர் மற்றும் பெங்களூரில் சுமார் 14 ஆண்டுகளாக வேலை செய்து வருகிறார். இதே பாகுரா மாவட்டம், காவுலி கிராமத்தைச் சேர்ந்த முகமது லிட்டன், 15 ஆண்டுகளாக திருப்பூரில் வேலை செய்து வருகிறார். இவர் விசாகப்பட்டிணத்தைச் சார்ந்த பெண்ணைத் திருமணம் செய்துள்ளார். இதே பாகுரா மாவட்டத்தின் ஹுவாகுவா கிராமத்தைச் சார்ந்த முகமது உஜால் என்பவர் 2016 முதல் திருப்பூரில் பணியாற்றி வருகிறார். இவர்கள் அனைவரும் ஏஜெண்டுகள் மூலம் ஆதார் மற்றும் பான் கார்டுகள் பெற்றுள்ளனர். இவர்களுடன் போகுரா மாவட்டம் நந்திகிராம் கிராமத்தில் வசிக்கும் முகமது ஜாகித் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடம் முறையான பாஸ்போர்ட், விசா உள்ளதாகத் தெரிகிறது.

இந்தவழக்கில்கைது செய்யப்பட்ட 6 நபர்களில், 5 நபர்கள் முறையான ஆவணங்களில்லாமல் ஏறத்தாழ பத்து ஆண்டுகள், இந்தியாவில் தங்கியுள்ளனர். இதில் சிலர் இந்தியக் குடிமக்களைத் திருமணமும் செய்து கொண்டுள்ளனர். இவர்களிடம் இந்தியக் குடியுரிமை ஆவணங்களும் உள்ளன. மேலும் இவர்கள், இந்தியாவிற்கு வந்த பின் வங்கதேசம் சென்று வந்துள்ளதாகத் தெரிகிறது. இவ்வளவு சுலபமாக நம் நாட்டில் ஆதார், பான் கார்டு போன்ற ஆவணங்கள் தயாரிக்கிறார்கள், ஊடுருவுகிறார்கள், வங்கதேசம் சென்று மீண்டும் வருகிறார்கள், நம் நாட்டுப் பெண்களை மணக்கிறார்கள் என்றால் நம் நாடு எவ்வளவு பாதுகாப்பற்றதாக உள்ளது? நம் நாட்டிலிருந்து ஊடுருவல்காரர்களை வெளியேற்ற எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் தேசத் துரோகிகளே !

தில்லியில் பயங்கரவாத அமைப்பிற்கு சாதகமாகவும், பாதுகாப்புப் படையினருக்கு எதிராகவும் சுவரொட்டிய வழக்கில், இந்தத் திருப்பூரில் பணிபுரியும் வங்க தேசத்தினர் கைது செய்யப்பட்டனர். வட இந்தியாவில், சுமார் 2000 கிலோமீட்டருக்கு அப்பால் பயங்கரவாதச் செயலில் ஈடுபடும் அன்னிய நாட்டினரின் புகலிடம் தமிழகமாகவுள்ளது என்பது அபாயகரமான செய்தி.

பொதுவாக, ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகள், படிப்படியாக சின்னச் சின்ன சமூக விரோதச் செயல்களில் புதிதாக சேர்பவர்களை ஈடுபடுத்துவார்கள். அவர்களின் அர்ப்பணிப்பு,

சாதுர்யம், திறன் ஆகியவற்றை கணித்து, அடுத்தகட்ட சதிச் செயல்களுக்கு உத்தரவிடுவார்கள். போஸ்டர் ஒட்டுவது, சுவரில் எழுதுவது, பொது இடங்களில், அதுவும் குறிப்பாக சாலைகள், மால்கள் போன்ற இடங்களில் மக்களுக்கு இடையூறாகத் தொழுகை நடத்துதல் என்று தொடங்கி, ஆயுதப் பயிற்சி, வெடிகுண்டுத் தாக்குதல், தற்கொலை தாக்குதல் என்று வன்முறையின் வீரியத்தை அதிகரிப்பார்கள். இந்த வழிமுறையில் அமைந்ததே இந்த தில்லி சம்பவம். இங்கிலாந்திலுள்ள இந்திய தூதரகம், ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளில் ஹிந்துக் கோயில்களில் எழுதப்பட்டிருந்த வெறுப்பு வாசகங்களும் இத்தகைய பயங்கரவாதப் பயிற்சியின் அங்கமே !

நம் தமிழகத்தில், ஜல்லிக்கட்டுப் போராட்டத்தின் போது, மெரினா கடற்கரையில் எழுதப்பட்டிருந்த இந்திய எதிர்ப்பு வாசகத்தை இந்த தருணத்தில் நினைவுகூற வேண்டும். மேட்டுப்பாளையத்திலிருந்து, கோத்தகிரி செல்லும் மலைப் பாதையில் , 'இந்தியாவை விட்டு தமிழகம் வெளியேற வேண்டும்- இந்தியா ஒழிக' என்று சுவர் வாசகம் எழுதப்பட்டிருந்தது. இதன் மீது தமிழக காவல் துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஈரோடு மாவட்டம் தூக்கநாயக்கன் பாளையத்தில், ஹிந்து ஒருவரின் கடையின் முன் வங்க மொழி பேசுபவன் திடீரென்று தொழுகை நடத்தினான். எந்த நடவடிக்கையும் இல்லை. கோவையில் கார் குண்டு வெடிப்பு என்று திருப்பூரைச் சுற்றி நடந்த பல செயல்கள், ஐ.எஸ்.ஐ.எஸ்-ன் செயல்முறையை பிரதிபலிப்பதாகவே உள்ளது.

இன்று தில்லியில் ஒட்டப்பட்ட போஸ்டர் மீது தில்லி போலீஸார் வழக்குப் பதிவு செய்து, திருப்பூர் வந்து கைது செய்கின்றனர், ஆனால் தமிழகத்தில் நடந்த இது போன்ற சம்பவங்களைக் கண்டுகொள்ளாமல் இருக்கும் தமிழக காவல்துறையின் போக்கு, இன்று தமிழகத்தை பயங்கரவாதிகளின் புகலிடமாக மாற்றியுள்ளது. வெளி நாடுகளிலிருந்து சட்ட விரோதமாக ஊடுறுவும் வங்க தேசத்தினரை வெளியேற்றக்கூடாது என்று நடத்தப்பட்ட சி.ஏ.ஏ சட்ட திருத்த எதிர்ப்புப் போராட்டத்தை முதல் போராட்டம் என்று பெருமையுடன் சொல்லும் உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வர், அவர் தந்தை ஸ்டாலின் முதல்வராக இருக்கும் மாநிலம், இன்று சட்டவிரோத ஊடுறுவல்காரர்களின் பாதுகாப்பு அரணாகியுள்ளது.

இந்தியாவில் பயங்கரவாதச் செயல்களை நடத்தும் பாகிஸ்தான், இந்தியாவில் ஒரு லோக்கல் ஹாண்டிலர் வாயிலாக தன் கைவரிசையைக் காட்டும். இந்த தில்லி சம்பவத்தில், சற்று மாறாக, வங்கதேச ஊடுறுவல்காரர்களை ஹேண்டிலர்களாக பயன்படுத்தியுள்ளது. இந்தியாவிலுள்ள மதரஸாக்களில், அடிப்படைவாத பிரச்சாரத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை தொடங்கியவுடன், வங்கதேசத்தினரைக் கொண்டு பயங்கரவாதச் செயல்களை நிகழ்த்தும் யுக்தி வெளிப்பட்டுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன், வங்கதேசத்தைச் சார்ந்த ஒருவன், கிருஷ்ணகிரி பகுதியில், வெடிகுண்டு சோதனையில் ஈடுபட்ட பின்னும், வங்க தேசத்தினரை வெளியேற்றும் நடவடிக்கையில் தமிழக அரசு முனைப்பு காட்டவில்லை. இன்று மாநிலத்தின் பல இடங்களில், வங்காள மொழி மதரஸாக்கள் முளைத்துள்ளதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்தக் கைது நடவடிக்கைக்குப் பின், தமிழகம்- இலங்கை இடையிலான கடற்பகுதிகளில், பாதுகாப்பைப் பலப்படுத்த பாதுகாப்புத் துறையினர் உஷார்படுத்தப்பட்டுள்ளனர். இந்தக் கடற்பகுதி வழியாக போதைக் கடத்தல், ஆயுதக் கடத்தல் நடந்து வருவதை பலகாலமாக நாம் எச்சரித்து வருகிறோம். இன்று தில்லியில் போஸ்டர் ஒட்டிய வழக்கில், தில்லி போலீஸ் காட்டிய தீவிரத்தை, தமிழக காவல்துறை ஏன் காட்டவில்லை என்ற கேள்வியை நாம் கேட்டு ஆராய்ந்து பார்த்தால், தமிழக் காவல்துறையின் கைகள் கட்டப்பட்டுள்ளன அல்லது தமிழக காவல்துறையின் அடிப்படைப் பயிற்சியிலோ, சுதாகரிப்பிலோ கோளாறு இருப்பதாகத் தோன்றுகிறது. இந்த அடிப்படைப் பிரச்சினையை உணர்ந்து தமிழக காவல்துறை தன்னை சரி செய்ய வேண்டுமா , அரசியல் விலங்கை உடைத்து செயல்பட வேண்டுமா என்று முடிவெடுக்கும் தருணம் வந்துள்ளது. காவல்துறையை தன் கையில் வைத்துக் கொண்டிருக்கும் முதல்வர் ஸ்டாலின், இந்த ஆபத்தை உணர்ந்து செயல்படுவாரா? சுயநல ஓட்டு அரசியலுக்காக நாட்டின் பாதுகாப்பை சமரசம் செய்யும் மாநில அரசின் துரோகச் செயலைக் கட்டுப்படுத்தி நாட்டைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் மத்திய அரசு இறங்குமா ?



# செயற்கை நுண்ணறிவு மாநாட்டில் காங்கிரஸின் அரை நிர்வாண ஆட்டம்

அருண்பிரபு

செயற்கை நுண்ணறிவுத் தாக்க உச்சிமாநாடு - தில்லியில் இம்மாதம் 16ஆம் தேதி முதல் 21ஆம் தேதி வரை நடந்தது. முதலில் 5 நாட்களுக்குத் திட்டமிடப்பட்டு பிறகு பொதுமக்களின் பெருவாரியான ஆதரவு, பங்களிப்பு கண்டு 6 நாட்களாக நீட்டிக்கப்பட்டது. 30 நாடுகளில் இருந்து 300 காட்சியாளர்கள் பங்கெடுத்த இந்த மாநாட்டில் 10 விதங்களில் கருப்பொருள் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவை மருத்துவம், விவசாயம், கல்வி, நீண்டகாலப் பேணத்தக்க தொழில்கள் ஆகியவற்றில் செயற்கை நுண்ணறிவு ஆற்றும் பங்களிப்பு குறித்து பெரிதும் விவாதமும் காட்சிகளும் வைக்கப்பட்டிருந்தன. உலகநாடுகள் பலவற்றில் இருந்தும் தேசத்தலைவர்கள் 20 பேர், 60 அமைச்சர்கள் இந்த நிகழ்வில் கலந்துக் கொண்டனர். இப்படிச் சிறப்பாக நம் நாட்டில் ஒரு விஷயம் நடந்தால் ஒரு கும்பலுக்குப் பொறுக்காது. யாரது என்று சரியாகச் சொல்வோர்க்கு பரிசு ஏதும் கிடையாது. காங்கிரசும் காங்கிரஸ் சார்ந்த கும்பலும் என்று சொல்லாதவர்கள் இற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் 200₹ ஊப்பியாகப் பிறக்கக் கடவர்.

காங்கிரஸ் கட்சிக்காரர்கள் சிலர் தாங்களும் செயற்கை நுண்ணறிவுத் தயாரிப்புகள் வைத்திருக்கிறோம் அதைக் காட்சிப்படுத்தப் போகிறோம் என்று அனுமதி பெற்று பிப்ரவரி 20 அன்று உள்ளே வந்தனர்.

வந்த வேகத்தில் மேடையேறிச் சட்டையைக் கழற்றிவிட்டு அமெரிக்க - பாரத வர்த்தக ஒப்பந்தத்தை எதிர்க்கிறோம் என்று கோஷமிட்டனர். அதெல்லாம் இருக்கட்டும் உங்கள் செயற்கை நுண்ணறிவுத் தயாரிப்பு எங்கே என்று கேட்ட போது அப்படி ஏதுமில்லை. போராட்டம் செய்து நிகழ்வைச் சீர்குலைக்க இப்படி ஒரு வேலை செய்தனராம். அங்கிருந்த மாணவர்கள், பொதுமக்கள் சூழ்ந்துகொண்டு அவர்களை அடித்து உதைத்து வெளியேற்றினர். தில்லி போலீசார் அவர்களைக் காப்பாற்றிக் கைது செய்து விசாரித்த போது அவர்கள் காங்கிரஸ் இளைஞரணிக் கிழவர்கள் என்று தெரியவந்தது. அவர்களைப் போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மாநாட்டை நடத்தியவர்களுக்கு ஒரு அடிப்படை தெரிய வேண்டாமா? வருபவர்களின் பின்னணியைக் கண்டறியும் அடிப்படைச் சோதனைகள் செய்வார்கள் தானே? சர்வதேச அளவிலான நிகழ்வு எனும் போது கடுமையான சோதனைகள் இருந்திருக்குமே? அதில் வந்தவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்று தெரிந்திருக்குமே? ராகுலை விட அறிவுள்ளவர்கள் அந்தக் கட்சியில் இருக்க முடியாதே? சாதாரண அறிவே ததிங்கிணத்தோம் என்று இருப்பவர்கள் எப்படி செயற்கை நுண்ணறிவுச் செயலி எல்லாம் தயாரிப்பார்கள்? இதை யோசித்து "எங்கே ஒரு சோதனை ஓட்டம் காட்டு?" என்று கேட்டிருந்தால் அங்கேயே சோலி முடிந்திருக்குமே? இனியாவது உஷாராக இருக்க வேண்டும்.

இந்தப் போராட்டத்துக்கு ராகுல் காந்தி பனுயன் கழற்றும் திட்டம் என்று பெயர் வைத்தார் அர்னாப் கோஸ்வாமி. எண்டி டிவி இதை அரை நிர்வாணப் பக்கிரித்தனம் என்று சாடியது. காங்கிரசின் மூத்த தலைவர்கள் பலரும் இந்தப் போராட்டம் கண்ணியக் குறைவானது என்று கண்டித்தனர்..

கூட்டணிக்கட்சித் தலைவர்கள் அகிலேஷ் யாதவ் "நமக்குள்ளே ஆயிரம் பிரச்சனைகள் இருக்கலாம். ஆனால் காங்கிரஸ் செய்தது சரியில்லை." "நாட்டைக் கேவலப்படுத்தும் செயல்களைச் செய்யாமலிருப்பது நல்லது" என்று அகிலேஷ் தெரிவித்தார். ஜெகன் மோகன் ரெட்டி "நம் அனைவரையும் கேவலப்படுத்திவிட்டது காங்கிரஸ்" என்று விமர்சித்துள்ளார். லல்லு கட்சியின் எம்பி மனோஜ் குமார் ஜா "போராட வேறு இடமோ வழியோ கிடைக்கவில்லையா? கேவலமாக இருக்கிறது." என்று விமர்சித்துள்ளார். பிரதமர் மோடி கோபத்தின் உச்சிக்கே போய் "காங்கிரஸ்காரர்கள் ஏற்கனவே நிர்வாணமாகத்தானே இருக்கிறீர்கள். இதில் சட்டையைக் கழற்ற என்ன அவசியம் வந்தது?" என்று கடும் விமர்சனம் வைத்துள்ளார். ஆனால், காங்கிரஸோ எதற்கும் கவலைப்படாமல் இந்த செயலுக்கு ஆதரவு அளித்து வருகிறது.

சிறுபிள்ளைத்தனமான இப்படிப்பட்ட செயல்கள் தேசத்தின் பெருமையைச் சீர்குலைப்பதாக உள்ளன. காங்கிரசுக்கு தேசத்தின் பீடு பெருமை எல்லாம் பொருட்டில்லை. தன் கட்சி, தன் பெயர் திருடிக் குடும்பம், இவற்றுக்குப் புகழ் வரவேண்டும். இல்லை என்றால் கேவலப்படுத்த முயல்வோம் என்பதே லட்சியமாக இயங்கும் வரை காங்கிரஸ் உருப்பட வழியில்லை. அந்தக் குடும்பத்தினர் கட்சியில் இருக்கும் வரை இந்தக் குடும்ப முதன்மை என்ற நிலைப்பாடு மாற வாய்ப்பில்லை. நல்ல காலம் விரைவில் பிறக்கட்டும். தேசம் நிறைந்து செழிக்கட்டும். வந்தே மாதரம்.

# ஆயுத-போதை கும்பல் வலையில் தமிழகத்தை சிக்க வைக்கும் சதி

-மீரா

திருச்சியில் நடந்த நாம் தமிழர் கட்சி மாநாட்டில், இந்தியாவில் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மறைந்த தலைவர் பிரபாகரனின் படத்தை வைத்ததற்காக தமிழக காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது. மாநிலம் முழுவதும் மாநாட்டிற்காக வைக்கப்பட்ட விளம்பர பேனர்களிலும், பிரபாகரன் படம் இடம் பெற்றிருந்தது. அப்போதெல்லாம் கண்டுகொள்ளாத காவல்துறை, இதற்கு வழக்குப் பதிவு செய்துள்ளது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச் செயலாளர் வன்னியரசு, விடுதலைப் புலிகளுக்கு எப்படியெல்லாம் உதவினோம், ஆயுதக் கடத்தல், நிதி திரட்டுதல், விடுதலைப் புலிகள் அமைப்பினரை இந்தியா வழியாக அயல் நாடுகளுக்கு அனுப்புதல் போன்ற செயல்களில் ஈடுபட்டதாக பெருமைபடத் தெரிவித்தார். இந்தச் செயல்களுக்கு, திருமா உதவினார் என்றார். இந்தப் பேட்டி, சீமான் ஓர் வாய் உதார், விடுதலைச் சிறுத்தைகளும், சில திராவிட அமைப்புக்களுமே, சட்ட விரோதமான செயல்களை விடுதலைப் புலிகளுக்காகச் செய்தன என்பதுடன், இலங்கைத் தமிழர் பிரச்சினையை வைத்து சீமான் சம்பாதிக்கிறார் என்று தனது வயிற்றெரிச்சலைக் கொட்டித் தீர்த்தார். இவரைப் பேட்டி எடுத்தவரும், தனது புலிகள் ஆதரவுச் செயல்பாட்டை அவ்வப்போது உறுதிப்படுத்தி வந்தார். வன்னியரசின் மீதோ, அவரைப் பேட்டி கண்டவர் மீதோ எந்த நடவடிக்கையும் இல்லை.

சீமான் மாநாட்டிற்கு முன், வன்னியரசைப் பேட்டி கண்டு, உண்மையான புலிகள் ஆதரவாளர் தாங்கள் தான், சீமான் போலி என்று நிறுவ முயற்சித்தனர். சீமானின் திருச்சி மாநாட்டிற்கு நல்ல கூட்டம் வந்தவுடன், தடை செய்யப்பட்ட அமைப்பு என்ற நினைவு தமிழக அரசுக்கு வந்தது. நடவடிக்கை பாய்ந்தது. திமுகவோ, தி.மு.க வின் கூட்டணிக்கட்சிகளோ பிரிவினைவாதம் பேசினால் தவறில்லை, தி.மு.க வின் செயலை வேறு யாராவது செய்தால், இந்தியத் தண்டனைச் சட்டம் பாயும். தமிழகக் காவல்துறை, இந்தியச் சட்டத்தைப் பின்பற்றுவதைவிட, திமுக வின் ஏவலாளாகச் செயல்படுகிறது என்பதே உண்மை.

சமீபத்தில் இலங்கையில் தொடர் கொலைகள் நடந்து வருகிறது. இந்தக் கொலைகளில் தொடர்புடையவர்கள் போதைக் கடத்தில் ஈடுபடுபவர்கள். இவர்களில் பலர் தமிழகத்திலிருந்து அந்தக் குழுக்களை இயக்கி வருகிறார்கள். இலங்கைச் சட்டப்படி, போதைக் கடத்தல் குற்றத்திற்கு மரணதண்டனை என்பதால், பல கடத்தல்காரர்கள், தமிழகத்திலுள்ள திருச்சி சிறப்பு முகாமை கடத்தலுக்கான தளமாக மாற்றியுள்ளனர். இந்நிலையில், இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு அகதிகளாக வந்தவர்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின், மத்திய அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளார். தமிழகத்தில் பெருகிவரும் போதை பழக்கம், இந்திய - இலங்கைக் கடற்பகுதியில் கோலோச்சும் போதை கடத்தல்களையும் கருத்தில் கொண்டு பார்த்தால், ஸ்டாலினின் இந்தக் கோரிக்கை, பல சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு ஊக்கம் கொடுக்கும். சிறப்பு முகாம்களிலும், வெளியிலும், இருக்கும் இலங்கை நாட்டினர் இந்தியக் குடியுரிமை பெற்றால், அவர்கள் பாதுகாப்புத்துறையின் கண்காணிப்பிலிருந்து விலகிவிடுவர். இலங்கைத் தொடர்பு, ஈழ அமைப்புக்களின் சர்வதேசப் பணம், போதைக் கடத்தல் போன்றவை எந்தத் தடையுமின்றி நடக்க, இந்தியக் குடியுரிமை உதவும்.

தில்லியிலும், தமிழகத்திலும் ஆட்சி அதிகாரம் வேண்டும் என்பதற்காக, இலங்கைத் தமிழர்கள் இன அழிப்பிற்கு சாமரம் வீசி, இலங்கைத் தமிழருக்கு துரோகம் செய்தது. இதே இலங்கைப் புலிகள் ஆதரவு என்ற பெயரில், இந்தியாவில் பயங்கரவாத, பிரிவினைவாத சக்திகளை வளரவிட்டு இந்தியாவிற்குத் துரோகம் செய்தது. சுயநலத்திற்காக, யாருக்கு வேண்டுமென்றாலும் துரோகம் செய்யும் தி.மு.க ஆட்சியில், மீண்டும் தடை செய்யப்பட்ட எல்.டி.டி.இ அமைப்பின் ஆதரவுக் குழுக்கள் ஊக்கும் பெற்று வருகின்றன. இந்தப் போக்கு, தமிழகத்தை பிரிவினைவாத மற்றும் ஆயுத-போதை கும்பல் வலையில் சிக்கவைக்கும் சதியாகத் தெரிகிறது.



# மத்திய-மாநில உறவா ? உருக்குலைப்பா ?

-இராமகிருஷ்ணன்

மாநில உரிமைகளைப் பாதுகாக்கவும், மத்திய-மாநில அரசுகளின் உறவு குறித்து ஆராயவும் குழு ஒன்றைக் கடந்த 2025ம் ஆண்டு ஏப்ரல் 15ல் தமிழக அரசு நியமித்தது. இந்த குழுவிற்கு முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி குரியன் ஜோசப் தலைமை வகித்தார். குரியன் ஜோசப் குழு, பிப்ரவரி 17 2026 அன்று அறிக்கையின் முதல் பாகத்தை முதல்வரிடம் சமர்பித்தது.

ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையின் முதல் பாகம், பத்து இயல்களைக் கொண்டுள்ளது. இந்த அறிக்கையை மேலும் பல மொழிகளில் மொழி பெயர்க்க இருப்பதாகவும் அறிவித்துள்ளது தமிழக அரசு. அதிகாரப் பரவலாக்கத்திற்கும் மாநில சுயாட்சிக்குமான வாதம், அரசமைப்புச் சட்டத் திருத்தம், மாநிலங்களின் ஆட்சி நில ஒருமைப்பாடு, மொழி, ஆளுநர், தொகுதி மறுவரையறை, தேர்தல்கள், கல்வி, சுகாதாரம், சரக்கு மற்றும் சேவை வரி ஆகியவையாகும்.

> **இந்தியா "ஒரே நாடு, ஒரே மொழி" என்ற மாயையைக் கைவிட வேண்டும்" என்று குழு அறிக்கை கூறுகிறது.**

மொழி கொள்கையில் மாற்றம் கொண்டு வர வேண்டும் என்றும், "இந்தியா ஒரே நாடு, ஒரே மொழி என்ற மாயையைக் கைவிட வேண்டும்" என்று குழு அறிக்கை கூறுகிறது. விதி 343-ஐத் திருத்தி ஆங்கிலத்தை மத்திய அரசின் நிரந்தர ஆட்சி மொழியாக அரசியலமைப்பு ரீதியாக உறுதிப்படுத்த வேண்டும். விதி 345-ல் இந்தி குறித்த குறிப்புகளை நீக்கவேண்டும் என்றும் விதி 347-ஐ முழுமையாக அகற்றவும் குழு பரிந்துரைக்கிறது. எட்டாவது அட்டவணையில் உள்ள அனைத்து மொழிகளையும்




ஒன்றியத்தின் ஆட்சி மொழிகளாக அறிவிக்கவும் இது பரிந்துரைக்கிறது. இதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் பன்மொழிக் கட்டமைப்பை ஒரு உதாரணமாக இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. மேலும், சிறுபான்மை மொழிகளுக்கான சிறப்பு அதிகாரிக்குப் பதிலாக தேசிய மொழி ஆணையத்தை உருவாக்கவும் அழைப்பு விடுக்கிறது. கல்வி முறையில், மும்மொழித் திட்டத்தைக் கைவிட்டு, அதற்குப் பதிலாக ஆங்கிலம் மற்றும் அந்தந்தப் பிராந்திய மொழி ஆகியவற்றில் உயர் புலமை பெறும் இருமொழித் திட்டத்தைப் பின்பற்றுமாறு இது பரிந்துரைக்கிறது.

இந்தப் பரிந்துரை, இந்தியா ஒரே நாடு என்பது மாயை என்கிறது. இதுவே பிரிவினைவாதத்தின் அச்சாரம். ஈ.வே.ரா சொன்னது போல், நான் இந்தியை எதிர்ப்பது தமிழுக்காக இல்லை, ஆங்கிலத்திற்காக. கேடு கெட்ட தமிழில் என்ன இருக்கிறது என்று கேட்டார். தமிழை அழித்து ஆங்கிலத்தை நிலை நாட்ட வேண்டும், இந்திய மொழிகளை ஒழிக்க வேண்டும் என்பதே இந்த அறிக்கை வெளிப்படுத்தும் செய்தி. ஹிந்தி படித்தால் தமிழ் அழியும் என்றால், ஆங்கிலம் படித்தால் தமிழ் அழியாதா? இந்தியக் கல்வியை அழித்து ஆங்கிலக் கல்வியை புகுத்திய வெள்ளையனின் கல்வித் திட்டத்தில், இந்திய மொழிகளைச் சேர்க்க முயற்சி செய்தவர் இராஜாஜி அவர்கள். அன்றும், ஆங்கிலத்திற்கு வக்காலத்து வாங்கிய திராவிடக் கூட்டம், இன்றும் மாறாமல் இருக்கிறது. உலகம் முழுவதும் தன் ஆதிக்கத்தை நிலை நிறுத்த மொழியை ஆயுதமாக்கிய வெள்ளையனின் சதியை ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டதே இந்தக் கொள்கை. இந்த அறிக்கையை பிற இந்திய மொழிகளில் வெளியிடுவதின் நோக்கம், மொழியின் அடிப்படையிலும், பிராந்தியங்களின் அடிப்படையிலும் பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பதே !

விதி 3-ன் கீழ் மாநில எல்லைகளை மாற்ற நாடாளுமன்றத்திற்கு இருக்கும் அதிகாரத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும், அதற்கு மாநிலங்களின் ஒப்புதல் மற்றும் சில சந்தர்ப்பங்களில் பொது வாக்கெடுப்புத் தேவை என்றும் குழு வாதிடுகிறது. புதிய யூனியன் பிரதேசங்களை

உருவாக்குவதைத் தடுக்கவும், தற்போதுள்ள யூனியன் பிரதேசங்களுக்கு அவ்வப்போது பொது வாக்கெடுப்புகளை நடத்தவும் புதிய விதி 3A-வை உருவாக்கவும் முன்மொழிகிறது. அப்படியென்றால், தமிழ் பேசும் மக்கள் பெருவாரியாக வாழும் நம் பகுதியை தமிழ்நாடு என்ற மாநிலமாகத் தந்த இந்தப் பிரிவு தவறானதா? இந்தப் பரிந்துரை 1950களில் நடைமுறையிலிருந்தால், தமிழகம் இருந்திருக்காதே! எல்லாவற்றிற்கும் பொது வாக்கெடுப்பென்றால், சட்ட மன்றத்திற்கும், பாராளுமன்றத்திற்கும் என்ன வேலை? மக்கள் பிரதிநிதிகளாகச் சட்டம் இயற்றும் அதிகாரம் வழங்கப்பட்டவர்கள் தானே எம்.பிகளும், எம்.எல்.ஏக்களும்! இதைவிட மக்கள் தீர்ப்பையும், ஜனநாயகத்தையும் சிறுமைப்படுத்த முடியுமா?

ஆளுநர் பதவி குறித்துக் குறிப்பிடுகையில், மாநிலச் சட்டமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பெயர்களில் ஒருவரை மட்டுமே ஆளுநராக குடியரசுத் தலைவர் நியமிக்க வேண்டும் என்றும், விதி 156-ன் கீழ் ஆளுநருக்கு மீண்டும் புதுப்பிக்க முடியாத ஐந்தாண்டு காலப் பதவிக்காலத்தை உறுதி செய்யவும் பரிந்துரைக்கிறது. மேலும், ஆளுநரின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்த புதிய நடைமுறையைக் கொண்டுவரவும் கோருகிறது. அரசின் புதிய Instrument of Instructions, ஆளுநரின் தன்னிச்சையான அதிகாரங்களுக்கு, குறிப்பாக அரசாங்கத்தை அமைப்பதிலும் மாநில சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதிலும் உள்ள அதிகாரங்களுக்கு வரம்புகளை நிர்ணயிக்கும். 2025-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாடு ஆளுநருக்கு இடையேயான வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில், மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதற்கான கட்டாய காலக்கெடுவை நிர்ணயிக்கவும் இது பரிந்துரைக்கிறது. ஆளுனரோ மத்திய அரசின் பிரதிநிதி; இவரை மத்திய அரசு தானே நியமிக்க முடியும்? தி.மு.க தலைவரை தேர்தல் ஆணையம் நியமிக்கலாமா? என்பது போல் உள்ளது இந்த வாதம்!.

**வரும் சட்டசபைத் தேர்தலில், தி.மு.க வின் தேர்தல் அறிக்கையான நீட், ஹிந்தி எதிர்ப்பு, பிரிவினைவாத அரசியல், கவர்னர் எதிர்ப்பு போன்றவற்றை குரியன் ஜோசப் பரிந்துரையாக வழங்கியுள்ளார்.**

லோக்சபா தொகுதிகளின் எண்ணிக்கையைப் பகிர்ந்தளிப்பதற்கான தற்போதையத் தடையை 2126 வரை நீட்டிக்க வேண்டும் அல்லது மாநிலங்களின் பிறப்பு விகிதம் சமமாகும் வரை நீட்டிக்க வேண்டும் என்றும் குழு வலியுறுத்துகிறது. வாதத்திற்காக, இந்த நடைமுறை சரியென்று ஏற்றுக்கொண்டால், இந்த நடைமுறையை, மதத்தின் அடிப்படையிலும் செயல்படுத்தலாமா? பிறப்பு விகிதத்தின் அடிப்படையில் சமுதாயங்களின் ஓட்டின் மதிப்பு நிர்ணயம் செய்யப்படும் என்று அறிவிக்கும் துணிச்சல் இருக்கிறதா?

தேசியத் தேர்வு முகமையைக் (National Testing Agency) கலைக்கவும், நீட் (NEET) போன்ற தேசிய அளவிலான நுழைவுத் தேர்வுகளை ரத்து செய்யவும் இந்த அறிக்கை பரிந்துரைக்கிறது. இதன் மூலம், மாணவர் சேர்க்கைக்கான கட்டுப்பாட்டை மீண்டும் மாநிலங்களிடமும் பல்கலைக்கழகங்களிடமும் ஒப்படைக்க வேண்டும் என்று இந்த குழு பரிந்துரை செய்துள்ளது, திமு.க கூட்டணிக் கொண்டு வந்த நீட் தவறு என்கிறது தி.மு.க அரசின் அறிக்கை! தமிழகத்தின் கல்வி மட்டுமே உலகத் தரம் வாய்ந்தது என்று கூவி சுய இன்பம் காணும் அரசு, போட்டிக்கு ஏன் பயப்படுகிறது?. தமிழகக் கல்வியின் தரம் வெளிப்பட்டுவிடக்கூடாது, கல்வியை வியாபாரமாக்க முடியாமல் போய்விட்டதே என்ற எரிச்சலின் வெளிப்பாடே இந்தப் பரிந்துரை!

மத்திய மற்றும் மாநில தேர்தல் நிர்வாகத்தைப் பிரிக்க வேண்டும் என்றும், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அதிகாரத்தை தேசியத் தேர்தல்களுடன் மட்டுப்படுத்த வேண்டும் என்றும் இந்த குழு கோருகிறது. முன்மொழியப்பட்ட ஒரே நேரத் தேர்தல் சீர்திருத்தத்தை இது கடுமையாக எதிர்த்துள்ளது. நாடாளுமன்றத் தேர்தலையும், சட்டமன்றத் தேர்தலையும் ஒன்றாக நடத்த வேண்டும் என்று சொன்ன தி.மு.க தலைவர் கருணாநிதியை எதிர்க்கும் தி.மு.க வின் துணிவு பாராட்டத்தக்கது. திருமங்கலம் மாடலை உருவாக்கி, தமிழகம் முழுவதும் அதை அனைத்துக் கட்சி களும் வெற்றிகரமாக செயல்படுத்தும், ஓட்டுக்குப் பணம் என்ற ஜனநாயகப் படுகொலைத் தடையின்றி நடக்கவே இந்தப் பரிந்துரை!

வரும் சட்டசபைத் தேர்தலில், தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையான நீட், ஹிந்தி எதிர்ப்பு, பிரிவினைவாத அரசியல், கவர்னர் எதிர்ப்பு போன்றவற்றை குரியன் ஜோசப் பரிந்துரையாக வழங்கியுள்ளார். பாடத் திட்டத்தை கிறிஸ்தவமயமாக்கினார் ஜோய் அருண்! நாட்டைப் பிரிக்கும் கிறிஸ்தவ சதியை அரசால் அமைக்கப்பட்ட கமிஷனின் பரிந்துரையாக்கியுள்ளார் குரியன்! இதைவிட மேலான அவலம், இந்தியா ஒரு நாடு இல்லை என்ற பரிந்துரையை, இந்தியாவிலுள்ள ஒரு மாநில அரசு வெளியிட்டதே! தேசத் துரோகத்திற்கு தேசத்தின் பணம் !

# காரமடையில் நீதிமன்ற உத்தரவை மீறி நோன்பு கஞ்சி!
# இந்தியச் சட்டம் இஸ்லாமியருக்குச் செல்லாது..!

-ப்ரியா வெங்கட்

உயர்நீதிமன்ற உத்தரவை காற்றில் பறக்க விடும் அரசு அதிகாரிகள்!

காரமடை அடுத்துள்ள காளம்பாளையம் ஊராட்சி வேலாயுதபுரத்தில் அருள்மிகு அங்காளம்மன் திருக்கோவில் உள்ளது. வேலாயுதபுரம், காளம்பாளையம், புஜ்ஜங்கனூர் மற்றும் தோலம்பாளையம் வெள்ளியங்காடு உள்ளிட்ட கிராம மக்கள் இந்தக் கோயிலில் பல நூற்றாண்டுகளாக வழிபட்டு வருகின்றனர். 2023ம் ஆண்டு இந்த கோவிலுக்குச் செல்லும் பொதுப் பாதையை சுற்றி வளைத்து மதரஸா கட்ட முயன்றுள்ளனர். அது மட்டுமல்லாமல் இது வக்ஃப் சொத்து என்று கூறியுள்ளனர். இது குறித்து ஹிந்துக்கள் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். 04.01.2024 அன்று நீதிமன்றம், குறிப்பிட்ட இடத்தில் எந்த விதமான செயல்பாடுகளும் மேற்கொள்ளக் கூடாது என்று தடை உத்தரவு பிறப்பித்தது.




இந்நிலையில் 19.02.2026ம் தேதி முதல் இந்த இடத்தில் இஸ்லாமியர்கள் தொழுகை நடத்தி, நோன்பு காய்ச்ச முற்பட்டனர். இதற்கு காவல்துறை மற்றும் வருவாய் துறை அனுமதி வழங்கியுள்ளதாக குற்றம் சாட்டிய அப்பகுதி மக்கள் அதிகாரிகளின் இந்த செயலுக்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்புக்கொடி போராட்டம் நடத்தியுள்ளார்கள்.

கடந்த 2023ம் ஆண்டு இஸ்லாமியர்கள் அந்த பகுதியை ஆக்ரமிக்க முற்பட்ட போது அங்கிருந்த நாகர் சிலையை இஸ்லாமியர்கள் அகற்றி விட்டதாகவும், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து மீண்டும் அந்த இடத்திலேயே நாகர் சிலையை நிறுவ வேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் கலெக்டருக்கு மனு அளித்தனர். இதுவரை ஆட்சியர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அரசு புறம்போக்கு இடத்தில் தொழுகை செய்ய காவல்துறை மற்றும் வருவாய் துறை அனுமதி வழங்கிய பிறகு இந்துக்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்து அவர்களுக்கு அனுமதியே கொடுக்காதது போலவும் 30 நாட்களுக்கு நாங்கள் அனுமதி கொடுக்கிறோம் அதற்கு நீங்கள் தடை சொல்ல வேண்டாம் உங்கள் (இந்துக்கள்) வழிபாட்டு உரிமை தொடர்பான விஷயங்களை 30 நாட்கள் கழித்து பேசிக் கொள்ளலாம் என்று ஏளனமாக இந்துக்களை நடத்துகிறது வருவாய் துறை மற்றும் காவல்துறை என்று அப்பகுதி ஹிந்துக்கள் தெரிவிக்கின்றனர்.

நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்திருந்தும் தடையை மீறி செயல்படுகிறார்கள். நீதிமன்ற தீர்ப்புகளை ஒரு பொருட்டாக கூட மதிக்காத மாநிலமாக இன்று தமிழகம் மாறிவிட்டது. இது ஒரு புறம் இருந்தாலும், மற்றொரு முக்கியமான விஷயத்தை நாம் இதில் பார்க்க வேண்டும். மேட்டுப்பாளையம், இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது என்பதை ஸ்ரீ டிவி தொடர்ந்து எச்சரித்து வருகிறது.

மேட்டுபாளையத்திலிருந்து செல்லும் அனைத்து பிரதான சாலைகளிலும் சட்டவிரோதமாக மசூதிகளையும், மதரஸாக்களையும் கட்டி வருகின்றனர். கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் 18 முஸ்லீம் மத வழிபாடு அல்லது மத கல்வி நிறுவனங்கள் சட்டவிரோதமாக முளைத்துள்ளன. அதிலும், இந்த மசூதிகளும் மதரஸாக்களும் ஹிந்துக்கள் மட்டுமே இருக்கும் பகுதிகளிலும், ஹிந்துக்கள் பெரும்பான்மையாக இருக்கும் பகுதிகளிலும் திட்டமிட்டு அமைக்கப்படுகின்றன.

மேட்டுபாளையத்தில் மொத்த காய்கறி சந்தை அன்னூர் சாலையில் 2022 ஆம் ஆண்டு புதிதாக திறக்கப்பட்டது. புதிய மார்கெட்டுக்கு வெளியே 300 மீட்டர் தொலைவில் முஸ்லீம்கள் கூடாரம் அமைத்து தொழுகை நடத்த தொடங்கினர். ஹிந்துக்களும் விநாயகர் கோவில் கட்டினர். ஹிந்து கோவில் இடிக்கப்பட்டது. ஆனால் முஸ்லீம் தொழுகை மையம் இன்னும் செயல்பட்டு வருகிறது. இப்போது மார்க்கெட் அருகில் ஒரு இடம் வாங்கி புதிய மசூதி கட்டியுள்ளார்கள் முஸ்லீம்கள்.

மேட்டுபாளையத்திலிருந்து சிறுமுகை செல்லும் வழியில் அமைந்துள்ள குன்றுபகுதி கரட்டு மேடு. இந்த கோவிலுக்குச் செல்லும் பாதையில் புதியதாக இரண்டு இடங்களில் இஸ்லாமிய வழிபாட்டு தலங்களை ஏற்படுத்தியுள்ளனர் முஸ்லீம்கள்.

பாஜக நிர்வாகி கல்யாணராமன் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மேட்டுபாளையத்தில் போராட்டம் நடத்தினர். அப்போது மேட்டுபாளையத்தையே பல மணி நேரம் ஸ்தம்பிக்க வைத்துள்ளனர் முஸ்லீம்கள்.

மேட்டுபாளையத்திலிருந்து கோத்தகிரி செல்லும் மலைப்பாதையில் இந்தியாவை விட்டு தமிழகம் வெளியேற வேண்டும்; இந்தியா ஒழிக என்ற சுவர் வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன. இந்த வாசகங்களை காவல்துறையினர் அழித்தனரே தவிர எழுதியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

மேட்டுபாளையம் இரும்பு கடை பகுதியில் சிசிடிவி நிறுவுவதை போலீஸார் கட்டாயபடுத்துவதில்லை என்கின்றனர் உள்ளூர் மக்கள்.

மேட்டுபாளையத்திலிருந்து கேரளாவிற்கு செல்லும் அனைத்துப் பாதைகளையும் இஸ்லாமியர்கள் தொடர்ந்து ஆக்ரமித்து வருகின்றனர்.. இச்சமயத்தில், இஸ்லாமிய அடிப்படைவாதிகள் மற்றும் நக்ஸல்களின் கூட்டு நடவடிக்கை பேராபத்தாக மாறியுள்ளதாக கேரள மாநிலம் கோழிக்கோடு கம்யூனிஸ்ட் தலைவர் ஜெயராஜ் அவர்கள் குறிப்பிட்டிருந்த தை நினைவில் கொள்ளவேண்டும். இவர் குறிப்பிடும் மலைபகுதியின் தொடர்ச்சியில் தான் மேட்டுபாளையமும் அமைந்துள்ளது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்..

நீலகிரி மாவட்டத்தின் மேற்கு மற்றும் வடக்கு பகுதிகளில் பல ஊர்கள் இஸ்லாமிய பெரும்பான்மை ஊர்களாக மாறியுள்ளன.நீலகிரி மாவட்டத்தின் தெற்கு பகுதியுள்ள மேட்டுபாளையம் ஜிகாதி பிடிகளில் சிக்கினால் நீலகிரி மாவட்டம் முழுமையாக சூழப்பட்டு விடும். இதன் காரணமாகத்தான் வடக்கு கேரளத்தையும் நீலகிரி மாவட்டத்தையும் சேர்த்து தனி மாநிலம் வேண்டும் என்று முஸ்லீம் லீக் கோரிக்கை வைத்ததோ என்ற கேள்வி எழுகிறது.

மேட்டுபாளையத்தின் தொடர்பு கேரளாவுடன் மட்டும் அல்ல கர்நாடகத்துடனும் நெருக்கமாக உள்ளது. மேட்டுபாளையத்திலிருந்து மைசூர் செல்லும் பாதை சத்தியமங்கலம் வனப்பகுதி வழியாக செல்கிறது. கோவை கோட்டை ஈஸ்வரன் கோவிலை குண்டு வைத்து தகர்க்க முயற்சி செய்த ஜமேஷ் முபின் இந்த சத்தியமங்கலம் வனப்பகுதியில் தொழுகையை முடித்து விட்டு சென்றுள்ளான் என்பதை கவனிக்க வேண்டும். இதே சத்தியமங்கலம் வனப்பகுதியில் தமிழகம் கர்நாடகம் கேரளம் ஆகிய மாநிலங்கள் உள்ளடங்கிய பயங்கரவாத மையப் பகுதியை உருவாக்க இஸ்லாமிய அடிப்படைவாதிகள் திட்டமிட்டு இருந்தனர்.

**மேட்டுபாளையத்திலிருந்து செல்லும் அனைத்து பிரதான சாலைகளிலும் சட்டவிரோதமாக மசூதிகளையும், மதரஸாக்களையும் கட்டி வருகின்றனர். கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் 18 முஸ்லீம் மத வழிபாடு அல்லது மத கல்வி நிறுவனங்கள் சட்டவிரோதமாக முளைத்துள்ளன.**

கேரள கர்நாடக எல்லைப்பகுதிகளை அதுவும் மேட்டுபாளையத்தை பல ஆண்டுகளாக குறிவைத்து அடிப்படைவாத இஸ்லாமிய அமைப்புக்கள் கையகப்படுத்த முயற்சிப்பதின் நோக்கம் என்ன?

கேரளம், கர்நாடக, தமிழகம் ஆகிய மூன்று மாநிலங்களின் எல்லைப்பகுதிகளை இணைத்து ஒரு முச்சந்தியை தென்னகத்தில் ஏற்படுத்தவே மேட்டுபாளையத்தை ஒட்டியுள்ள பகுதிகளை ஜிகாதிகள் தங்கள் பிடிக்குள் கொண்டு வர திட்டமிட்டு வேலை செய்து வருகிறார்கள். இதற்கு மேட்டுபாளையம் அவர்கள் வசமாக வேண்டும். அது மட்டுமில்லாமல் தமிழகத்திலுள்ள நீலகிரி, கோவை, ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் அடிப்படைவாத இஸ்லாமிய அமைப்புகளின் செயல்பாடுகள், குறிப்பாக ஊடுருவல்காரர்களை குடியமர்த்துவது போன்ற செயல்கள் பெருகி வருகின்றன.

இந்த செயல்பாடுகள் உத்தரபிரதேசம், ஹரியானா. ராஜஸ்தான் மாநிலங்களின் முக்கூட்டு பகுதியில் அரங்கேறிய சதியை பிரதிபலிப்பது போல் உள்ளது.

இடதுசாரி அடிப்படைவாத அமைப்புகளுடன் இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகள் கைகோர்த்து செயல்படும் நடைமுறையும் வடமாநிலங்களில் செயல்படுவது போல் இங்கும் காணப்படுகிறது.

மேட்டுபாளையம் ஜிகாதிகள் வசமானல் இந்த சதி செயல் விரைவாக நடந்தேறும்.

இன்னொரு டிரை ஜங்கஷனை பாரதம் தாங்குமா?

தமிழகம் காப்பாற்றபடுமா? மேட்டுபாளையம் பகுதி மீட்கப்படுமா?

# 30 கோடி மதிப்புள்ள கோவில் நிலத்தை காப்பாற்றிய இந்து முன்னணி..

-சந்தானம்

காஞ்சிபுரம் மாவட்டம் மாங்காட்டில் இருக்கும் பிரசித்திப் பெற்ற காமாட்சி அம்மன் கோவில் உள்ளது. இங்கு பஸ் நிலையம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை பல நாட்களாக இருந்து வந்த நிலையில், குன்றத்தூர் - குமணன் சாவடி சாலையில் ஒரு நிலத்தை ஆய்வு செய்து அடிக்கல் நாட்ட உத்தரவிடப்பட்டிருக்கிறது என்று 18/2/2026 அன்று தினத்தந்தி நாளிதழில் செய்தி வெளி வந்தது.

இது குறித்து ஆய்வு செய்த போது, அந்த நிலம் காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் தாலுகா, மாங்காடு “B’ கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு வைகுண்ட பெருமாள் சுவாமி கோவிலுக்குச் சொந்தமான சர்வே எண் 514, 0.20.24 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட சுமார்₹30 கோடி மதிப்புள்ள நிலம் என்பது தெரியவந்தது.இதை கேள்விப்பட்டவுடன்

**வரும் தேர்தலில் இந்திய விரோத அரசியல் கட்சிகளின் வரிசையில் இந்த திருட்டு திராவிடக் கட்சியையும் இந்துக்கள் புறக்கணிக்க வேண்டும்.**



பல சமூக ஆர்வலர்களும் இந்து அமைப்புகளும் இந்து முன்னணியும் கண்டனம் செய்தனர். அதையும் மீறி அந்த இடத்தில் அடிக்கல் நாட்டினால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோம், நீதிமன்றத்தை நாடி தடுத்து நிறுத்துவோம் என்று பேட்டி கொடுத்தனர்.

கோவில் நிலங்கள் இந்து சமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டில் இருந்தாலும், அவை பக்தர்கள் காணிக்கையாக வழங்கிய புனித சொத்துகளாகும். இத்தகைய தெய்வீக நிலங்களை பொதுத் திட்டங்களுக்கு மாற்றுவது மத உணர்வுகளை புண்படுத்தும் செயல் என இந்து முன்னணி வலியுறுத்தியது.

இந்தப் பிரச்சினையில் உடனடி தீர்வு கோரி, இந்து முன்னணி சார்பில் தமிழக அரசின் கூடுதல் தலைமைச் செயலரிடம் மனு அளிக்கப்பட்டது. கோவில் நிலத்தை கைப்பற்றும் ஆரம்ப அறிவிப்பை ரத்து செய்யவும், பேருந்து நிலையத்திற்கான மாற்று நிலத்தை அரசு ஒதுக்கவும் வலியுறுத்தப்பட்டது.

தொடர்ச்சியான முயற்சிகள் மற்றும் சட்டப்பூர்வ அழுத்தத்தின் காரணமாக, பேருந்து நிலைய அடிக்கல் நாட்டு விழா தற்போது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது என்பது பக்தர்களுக்கு பெரிய வெற்றியாகும். இது ஹிந்து மக்களுக்கும், இந்து முன்னணிக்கும் கிடைத்த வெற்றி செய்தியாகும்.

இது மட்டுமின்றி அறநிலையத்துறை அல்லேலுயா அமைச்சர் பல கோவில் சொத்துக்களை விற்பதும், அடகு வைப்பதும் கோவில் நகைகளை கொள்ளையடிப்பதையுமே ஒரு குறிக்கோளாக வைத்துச் செயல்படுகிறார். நீதிமன்றங்கள் கோவில் சொத்துக்களைப் பாதுகாக்காத அறநிலையத்துறையை திட்டியும், அறிவுறுத்தியும், நடவடிக்கை பாயும் என்று எச்சரித்தும் பல தீர்ப்புகளைக் கொடுத்தும் திருந்தாத ஒரு துறை உண்டென்றால் அது அறமில்லாத் துறை தான்.

மசூதிகளுக்கும், சர்ச்சுகளுக்கும் மேம்பாட்டு பணி செய்ய இந்த கோவில் நிதியிலிருந்து கொடுக்கிறார்கள். தயவுசெய்து ஹிந்துக்கள் சிந்தித்து செயல்படுங்கள். மறுபடியும் இந்த திருட்டு திராவிட மாடல் அரசு வந்தால் ஹிந்துக் கோவில்களையும், ஹிந்துக்களையும் இருந்த சுவடு கூட இல்லாமல் செய்து விடுவார்கள். வருங்கால சந்ததிகள் கும்பிடுவதற்கு கோவில் இல்லாமல் ஆக்கி விடுவார்கள். ஆதலால் வரும் தேர்தலில் இந்திய விரோத அரசியல் கட்சிகளின் வரிசையில் இந்த திருட்டு திராவிடக் கட்சியையும் இந்துக்கள் புறக்கணிக்க வேண்டும். இந்த ஆட்சியில் பல கோயில்கள் தொடர்ந்து இடிக்கப்பட்டுள்ளது. ஹிந்துக்களே சிந்தித்து செயல்படுங்கள்!!

கோவில் உரிமைகள் மற்றும் பக்தர்களின் மத உணர்வுகளை பாதுகாக்கும் இந்த போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் கோவில் சொத்துகளைக் காக்கும் பணியில் இந்து முன்னணி உறுதியாக இருக்கும்.

# அரசு நிலத்தை தி.மு.க.வினரிடம் இருந்து மீட்க போராடிய சமூக ஆர்வலர்

-ரகுபதி சர்மா

சென்னை தாம்பரம் அடுத்த சேலையூர் அகரம் தென்பகுதியில் அரசு இடத்தை ஆக்கிரமித்து, அப்பகுதியின் ஊராட்சித் தலைவரான தி.மு.க.,வைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் மற்றும் அவரது சகோதரர் வீடுகள், கடைகள் கட்டியிருப்பதாக சமூக ஆர்வலர் சந்தானம் என்பவர் தொடர்ந்த வழக்கில் வீடு மற்றும் கடைகளை இடித்து அகற்றும்படி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. இதனைத் தொடர்ந்து வீடுகளை இடித்து அகற்றுவதற்காகக் காவல்துறையினர் பாதுகாப்புடன் அதிகாரிகள் வந்த போதிலும் கடந்த இரண்டு முறை உள்ளூர் திமுகவினர் மற்றும் உறவினர்களின் முற்றுகையால் வீடுகளை இடிக்காமல் திரும்பிச் சென்றனர்.



இந்த நிலையில் சந்தானம், மீண்டும் நீதிமன்றத்தை நாடி உத்தரவை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று மேல்முறையீடு செய்திருந்தார். இந்த வழக்கு விசாரணைக்கு செங்கல்பட்டு ஆட்சியர், தாசில்தார் உட்பட அதிகாரிகள் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டிய நிலை ஏற்படும் என்பதால், பிப். 09, 2026 அன்று 500க்கும் மேற்பட்ட போலீஸ் பாதுகாப்புடன் கிராம அலுவலர், தாசில்தாரும் வந்து நடவடிக்கை எடுக்க முற்பட்டனர். அப்பொழுது ஆக்கிரமித்துக் கட்டியிருந்த அகரம் தென் திமுக ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஜெகதீஸ்வரன் என்பவரின் வீட்டை இடிக்க முற்படும் போது அவரின் உறவினர்கள் வீட்டின் மூன்றாவது தளத்தில் நின்று கொண்டுப் பொருள்களை காவலர்கள் மீது வீசியும், பெட்ரோல் ஊற்றி தற்கொலை செய்து கொள்வோம் என்று மிரட்டல் விடுத்தனர். மேலும், வாக்குவாதத்தில் ஈடுபட்ட ஜெகதீஸ்வரனை அப்புறப்படுத்த முயன்ற போது என் மேல எப்படி அவன் கையை வைப்பான் என்று ஒருமையில் பேசி காவல்துறையினரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதையடுத்து, அரசு அதிகாரிகளை வேலை செய்ய விடாமல் தடுத்தல், கலவரத்தைத் தூண்டுதல், மிரட்டல் விடுத்தல், ஆபாசமாக பேசுதல் என, நான்கு பிரிவுகளின் கீழ், ஜெகதீஸ்வரன் மீது, சேலையூர் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

அதன் பின், பிப்ரவரி 25, 2026 அன்று சேலையூர் உதவி ஆணையர் கிரிஸ்டில் ஜெயசீல் தலைமையில் சேலையூர் காவல் ஆய்வாளர் பிரவீன் ராஜேஷ் ஒருங்கிணைப்பில் நான்கு காவல் நிலைய போலீசார் பாதுகாப்புடன், அகரம்தென் திமுக ஊராட்சி தலைவர் வீடு மற்றும் சகோதரர் வீடுகளை, நான்கு பொக்லைன் இயந்திரம் மூலம் முழுமையாக இடித்து அகற்றப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான நில ஆக்கிரமிப்பை அகற்ற நீதிமன்றம் உத்திரவிட்டும் செயல்படாத அதிகாரிகளை செயல்பட வைக்க மீண்டும் மீண்டும் நீதிமன்றம் சென்று அழுத்தம் கொடுத்த திரு சந்தானம் அவர்களின் செயல் பாராட்டுக்குரியது. அரசு அதிகாரிகள் நீதிமன்ற உத்திரவின் பேரில் ஆக்கிரமிப்பை அகற்ற வந்த போது காவல்துறையினரை மிரட்டுவது என்பது ஆளுங்கட்சியின் ஆதரவு இருப்பதால் தானே. ஆனால், ஸ்ரீடிவி போன்ற தனியார் யூடியூப் சேனல்கள் இந்த செய்தியை ஒளிபரப்பி காவல்துறையினருக்கு ஆதரவு தெரிவித்ததும் இந்த விஷயத்தில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது என சந்தானம் தெரிவித்தார்.

தமிழகத்தில் அரசு நிலங்களை இது போன்ற ஆக்கிரமிப்பாளர்கள் பெரியளவில் ஆக்கிரமிப்பதும் அதை மீட்க பொதுமக்களே முன் வந்து போராட வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. சட்டரீதியாகப் போராடி நீதிமன்றமே தீர்ப்பு கொடுத்தாலும் கூட அதை நிறைவேற்ற தயங்குகின்றனர் அதிகாரிகள். கோவிலஞ்சேரி பகுதியில் நீதிமன்ற உத்தரவிற்குப் பின்னும் ஆக்கிரமிப்பை அகற்ற அதிகாரிகள் முன்வரவில்லை. அதன் பின் வழக்குத் தொடுத்த சதீஷ் அவர்கள் மீண்டும் நீதிமன்ற கவனத்திற்குக் கொண்டுச் சென்ற போது நீதிமன்ற அவமதிப்பிற்காக அதிகாரிகளுக்கு அபாரதமும் விதித்தது நீதிமன்றம். இது தான் இன்றைய திராவிட மாடலின் லட்சணம்.

நாம் மக்களுக்காகத் தான் சேவை செய்கிறோம் என்ற எண்ணம் அதிகாரிகளுக்கும், நம் அராஜக, அதிகார துஷ்பிரயோகங்களை சந்தானம், சதீஷ் போன்ற சமூகநலன் விரும்பிகளும், அவர்களுக்குத் துணையாக ஸ்ரீடிவி போன்ற ஊடகங்களும் துணையாக இருக்கும் என்பதை உணர்ந்து, இனியேனும் சட்டத்திற்குட்பட்டு செயல்படுவார்களா?

காத்திருப்போம், காலங்கள் மாறும், கொடுமையாளர்களை மக்கள் தேர்தலின் போது தங்களின் ஜனநாயகக் கடமை மூலம் மாற்றுவார்கள் என்ற நம்பிக்கையுள்ளது.

# அரசியல் உலா

**- கரிகாலன்**

தமிழகத்தின் விடியலுக்கான நம்பிக்கை சில தவணைகளுக்குத் தள்ளிப் போகிறது. புலரும் பொழுது விரைந்தபாடில்லை.தேர்தல் தேதியும் அறிவித்தபாடில்லை. அடுத்த தவணையில் இன்னும் 15 நாட்களில் விடியலுக்கான வெளிச்சத்தைக் காணலாம்.

மார்கழியில் மந்தமாக இருந்த அரசியல் சூழ்நிலை தை மாதத்திலும் நத்தை வேகத்திலேயே நகர்ந்தது. மாசி பிறந்த பின்னும் பேசிக் கொண்டே இருக்கின்றார்கள் அரசியல் பங்காளிகள் பலர். இந்த நீண்ட காலவெளியில் தமிழக அரசியலில் குறிப்பிடத்தக்க சில நகர்வுகளும் நிகழ்ந்திருக்கின்றன.



எவருக்கும், எதைப் பற்றி வேண்டுமானாலும் சந்தேகம் எழலாம், தேகம் நடப்பது நேராக இருந்தாலும் கேள்விகள் குறுக்கே வரலாம். எல்லாவற்றையும் எதிர்பார்த்தே எனது நடைப்பயிற்சி தொடர்கிறது.ஆனாலும் இந்த இரு வாரங்களில் மட்டும் இத்தனைக் கேள்விகளால் கொஞ்சம் திணறித்தான் போனேன்.

அன்றைய தினம் அங்காடித் தெருவில் அரசியல் அரங்கில் அனைவரது முன்னிலையில் தானாகவே முன்வந்து எனது தன்னிலை விளக்கத்தை அளிப்பதெனத் தீர்மானித்தேன். தொண்டையை லேசாகச் செருமியதுமே எல்லோரும் எனது நீண்ட சொற்பொழிவுக்குத் தயார் ஆகி விட்டார்கள்.

"கொள்கையாலேயே உருவாக்கப்பட்டவர்கள், தனக்கெனக் கொள்கையை உருவாக்கிக் கொண்டவர்கள், கொண்டக் கொள்கையை உருமாற்றிக் கொண்டவர்கள் என அரசியலில் மூன்று பிரிவினர் உண்டு".

"நான்காவது பிரிவினரும் இருக்கிறார்கள், கொள்கை ஏதுமற்றவர்கள். அவர்கள் அதிகம் பேர் உண்டு, ஆனாலும் அவர்களைப் பற்றிச் சொல்வதற்கு ஏதுமில்லை. மூன்றாவது ரகம் பெரும்பாலும் மூனாந்தரமாகவே பார்க்கப்படுகிறது!"

"ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசிருந்தா வாங்கலாம்" யாருடைய சட்டைப் பையிலேயோ ஒலித்துக் கொண்டிருந்த அப்பாடல் நம் செவிகளைக் கடந்து சென்றது. அதைத் தொடர்ந்து கூட்டத்திலிருந்தும் ஒரு சில குறுக்கீடுகள்.

"ஓஹோ, அதுல அஞ்சாம் படையும் இருக்கும் போலருக்கே!"

"கொள்கைய விலை பேசுறவங்க!"

"கம்யூனிஸ்ட்கள மறந்துட்டீங்களோ?"

"யாருக்கோ தகுதிக்கு மீறின ஆசைன்னு சொன்னீங்களே, தகுதின்னு எதைச் சொல்றீங்க?"

"யாருக்கெல்லாம் அது இல்லைன்னு சொல்றீங்க?"

"ஆசை நூறு வகை, அதில் அரசியல் ஒரு வகை! யார்வேணாலும் ஆசைப்படலாம் ஆனா அவங்களுக்கு அவங்களோட தகுதி என்னன்னு தெரியறதில்ல. தன் கட்சித் தலைவருக்கோ, இல்ல தன் கணவருக்கோ, தம்பிக்கோ, மகன்களுக்கோ, இல்ல தனக்கோ மக்கள் மத்தில இப்ப எவ்ளோ செல்வாக்கு இருக்கு? மறைஞ்ச தலைவர்ங்களுக்கு இன்னும் எவ்ளோ அனுதாபம், அபிமானம் இருக்குன்னு அவங்க யோசிச்சுப் பார்த்தாங்கன்னா வெளங்கும்!"

"முதல்ல அவா கட்சிக்காரா மத்தியிலே இதெல்லாம் இருக்கான்னு பாரும் ஓய்..!"

அவரது அலட்சியத்திலும் நியாயம் இருக்கிறது. அந்த நடிகரின் தீவிர அபிமானிகள் பலர் அதீத மன வருத்தத்தில் இருக்கிறார்கள். தங்கள் கட்சியின் அன்றாட நடவடிக்கைகளிலேயே அதிருப்தி கொண்டிருந்த அவர்கள், அரசியல் நிலைப்பாடும் நேர்மாறாக மாறிவிட்ட பிறகு அதைத் தொடர்ந்து ஆதரிப்பார்கள் என்று சொல்வதற்கில்லை.

"இன்னும் என்ன ஓய் சுத்தி வளைச்சிப் பேசுறீர்! விஜயகாந்த் ரசிகன் எல்லாரும் தேமுதிகவுக்கு வாக்களிக்க மாட்டான்னு நேரடியாச் சொல்ல வேண்டியதானே!"

"அதுல பாருங்க சம்பந்தி..!' என்ற தொனியில் ஆரம்பித்த அரிசிக் கடைக்காரர் அவர் பெயரிலே வேலைச் சுமந்தவர், ஊர் திருச்செந்தூர், இருப்பது ஒரு முகம் மட்டுமே. அவர் முகத்தை ஏறெடுத்துப் பார்த்தேன் வேலைச் சுமப்பவனுக்கு எத்தனை முகம்

என்று எண்ணிப் பார்த்தேன். குழந்தை முகம் கொண்ட ஒருவர் கூடவே இருந்தார், குமைந்து நின்றார்.

என்னங்க ஆச்சு என்று கேட்டேன். உள்ளூர் பிரச்சனை ஒன்னு என்று தயங்கித் தயங்கிச் சொன்னார். அயல்நாட்டுப் பிரச்சினைகளையே அடிச்சுத் துவைக்கிறோம், இதென்ன பிரமாதம் என்று சொல்லி விவரம் கேட்டேன்.

உள்ளூர் பிரச்சனைன்னு ஆரம்பிச்சுட்டு வெளியூர் பிரச்சனையச் சொல்றீங்க என்று இடைமறித்தேன். அது வெளியூர் தாங்க ஆனா அந்த கிராமம் பேரு உள்ளூர் என்று பேச்சைத் தொடர்ந்தார்.

அவரது வீட்டுக்கு அருகே வாய்க்கால் புறம்போக்கு, ஆக்ரமித்தது கழக உடன்பிறப்பு, அதை அகற்றச் சொன்னது மதுரைக் கிளையின் தீர்ப்பு.

“ஆனா, அத இன்னும் அகற்றல! அதானே?”

“ஆமாங்க, அதே தாங்க!” என ஆமோதித்த நண்பருக்கு நம்மால் ஆறுதல் சொல்ல முடியவில்லை.

“வாய்க்காத் தகராற அப்புறம் பாத்துக்கலாம். கோயில் சொத்துக்கள மீட்கச் சொல்லி எத்தனையோத் தீர்ப்பு வந்துருக்கே! ஏதாவது நடவடிக்கை எடுத்தாங்களா?”

“நீதிமன்றத் தீர்ப்புன்னு வந்துட்டா திமுக தன் கொள்கைக்குச் சமமா மதிக்குமே!”

“திருப்பரங்குன்றம் விஷயத்துலேயே நாம பார்த்தோமே!”

“ஆக, அந்த முருகன் எந்தத் தீர்ப்புக் கொடுத்தாலும், அத மதிக்கிறதில்லன்னு இவனுங்க முடிவோ?”

“முருகன் பேர்ல எது பண்ணாலும் தடுக்கறதுன்னு முடிவு பண்ணிட்டானுங்க. அதையும் மீறி கந்த சஷ்டி கவச பாராயணம் நடந்துகிட்டு தான் இருக்கு!”

“இதோ இப்ப மாசி மகத்துல மலைய சுத்தி கிரிவலம் நடக்கத் தான் போகுது, தடுக்கத் தான் முடியுமா!”

“முருகன் எல்லாத்தையும் பாத்துட்டு தான் இருக்கான். அவனத்தான் மலை போல நம்பி இருக்கோம்!”

“பாத்துட்டு இருந்தா மட்டும் பத்தாது ஓய்! பாய்சலும் இருக்கனும்! கொடுக்க தீர்ப்ப சீக்கிரமா கொடுக்கச் சொல்லுங்க!”

“என்னய்யா, அரசியல விட்டு ரொம்ப விலகிப் போற மாதிரி இருக்கு, இதென்ன ஆன்மீக அரசியலா?”

“கழகஅரசியல்வாதியாஇருந்தாலும்அவனுக்கும் ஆன்மீகம் இருக்கு, இது ஆன்மீகவாதிக்கே அரசியல் அறிவு தேவைப்படற காலம் ஓய்!”

“அது இருக்கட்டும், தேமுதிக கூட தெளிவா(?) ஏதோ ஒரு முடிவு எடுத்துட்டாங்க. ஆனா காங்கிரஸ் கதை ஏன் இன்னும் இழுத்துக்கிட்டே கிடக்கு? திமுக கூட பேரம் படியலையா? நெஜமாவே தவெக பக்கம் தாவிடுவாங்களா?”

“உண்மையிலே ஆச்சரியமான விஷயம் இது தான். இந்நேரம் முடிவாகி இருக்கும்ன்னு நம்பினேன். நடக்கல. ஆனா அதிகமா பேரம் பேசி திமுக போட்டியிடற தொகுதிகளை குறைக்கற வேலைதான் இவங்களும் பண்றாங்க!”

“தவெக பக்கம் போனாத் தானே காங்கிரஸுக்கு நல்லது?”

“அது நிச்சயமா தவெகவுக்கு நல்லது!”

“திமுக கூட்டணியில இருந்து பிரிஞ்சி நின்னாலும், சேர்ந்து நின்னாலும் காங்கிரஸுக்கு நல்லது, ஆனா இதுல எது நடந்தாலும் அதிமுக கூட்டணிக்குத்தான் லாபம்!”

“ஏன்னா, இவ்ளோ மனக்கசப்புக்கு அப்புறமும் காங்கிரஸ கூட்டணியிலேயே வெச்சிருந்தா திமுகவுக்கு தான் ஆபத்து. கூட இருந்தே கழுத்தறுக்கும். கீழ் மட்டத்துல தொண்டர்கள் இணக்கமா செயல்பட மாட்டாங்க. இப்ப சொல்லுங்க யாருக்கு நல்லது!”



“சரி சசிகலா, பண்ருட்டி ராமச்சந்திரன்?”

“அரசியல்ல உச்ச நிலையில இருந்த அவங்களுக்கு ஓய்வு நிலைக்குப் போறதுக்கு ரொம்ப சங்கடமா இருக்கு போல. அதனால வர்ற சலசலப்பு தான் இது. அமைதியா இருந்தா பேரையாச்சும் காப்பாத்திக்கலாம்!”

“இனிமே தான் உச்சம் வரும்னு நம்புறாங்களா? இல்ல, அவங்கள யாரோ தூண்டி விடுறாங்களா?”

“ரெண்டாவதா சொன்னது தான் உண்மை. யாரா இருந்தாலும், இப்ப திடீர்னு அதிமுகவுக்கு எதிரா எடுக்கிற எந்த முடிவுக்கும் பின்னாடி திமுக இருக்குனு நம்பலாம்!”

அந்த நேரம் பார்த்து கண்ணதாசன் பாடல் ஒன்று காற்றில் மிதந்து வந்தது. “போனால் போகட்டும் போடா..!”

“ஓ.பி.எஸ்..” என ஏதோ சொல்லவோ கேட்கவோ ஆரம்பித்தஒருவர் அந்தப் பாடலை ரசித்தபடியே மௌனமானார். பாடல் நம்மைக் கடந்து சென்றது, நாமும் அந்த நபரைக் கடந்து சென்றோம்.

“போன தடவையே சொன்னேனேப்பா. கூட்டணி பலமா இருக்கு, இனிமே யாராவது வந்து சேர்ந்தா அவங்களுக்கு லாபம். யாரும் வரலன்னாலும் நமக்கு நஷ்டமில்ல. நாம தான் ஆட்சி அமைக்கறது உறுதி!!”

நல்ல செய்தியோடு நடையைக் கட்டினோம்!

# கந்த சஷ்டி கவசம் பாடத் தடை

**-வீர வேலுநாச்சியார்**

கோவில்களில் கந்த சஷ்டி கவசம் பாடத் தடைவிதித்து ஹிந்துக்களின் வழிபாட்டு உரிமையை பறிக்கும் திராவிட மாடல் அரசு

திருப்பரங்குன்றம் மலையுச்சியில் தீபம் ஏற்ற நீதிமன்றம் உத்தரவிட்டும் தீபம் ஏற்றாமல் தமிழக அரசு அதை மதிக்காமல் செயல்பட்டு வருகிறது. அரசின் இந்தப் போக்கை ஹிந்துக்களும், ஹிந்து அமைப்புகளும், பாஜகவும் தொடர்ந்து கண்டித்து வருகின்றன. இந்நிலையில், முருக பக்தர்கள் பேரவை, சஷ்டி திதி மற்றும் கார்த்திகை நட்சத்திர தினமான பிப்ரவரி 23 2026 அன்று, குடும்ப நலனுக்காகவும், ஊர் நன்மைக்காகவும், தமிழகம், மற்றும் தேசத்தின் மேன்மைக்காகவும், திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்ற நீதிமன்ற தீர்ப்பு இடையூறின்றி நிறைவேறவும் பிரார்த்தனை செய்து, வீடுகளிலும், கோவில்களிலும் கந்த சஷ்டி கவசம் பாராயணம் செய்ய அழைப்பு விடுத்தது. இதை ஏற்று, தமிழகம் முழுவதும் உள்ள கோவில்களில் கந்த சஷ்டி பாட மக்கள் கோவில்களில் கூடினர். இதையும் கூட பல இடங்களில் தடுத்து தன் ஹிந்து விரோத, ஹிந்து இன அழிப்பு கொள்கையை நிலைநாட்டியது திராவிட மாடல் அரசு.


கோவில்களில் கந்த சஷ்டி கவசம் பாராயணம் செய்யச் சென்ற முருக பக்தர்களை இது அறநிலையத்துறை கோவில் என்றும், பொது இடம் என்றும் கூறி அத்துமீறி கைது செய்து அராஜக போக்கில் ஈடுபட்டிருக்கிறது திமுக அரசு.

குறிப்பாக கும்பகோணம் பட்டீஸ்வரம் தேனுபுரீஸ்வரர் கோவில், தஞ்சாவூர் அருள்மிகு சுப்ரமணிய ஸ்வாமி கோவில் ஆகிய கோவில்களில் கந்த சஷ்டி கவசம் பாடச் சென்ற முருக பக்தர்களை வழிபாட்டு உரிமையைப் பறிக்கும் விதத்தில் கைது செய்துள்ளது. மேலும் காரமடை குருந்தமலை முருகன் கோயிலில் கந்த சஷ்டி கவசம் பாடிய முருக பக்தர்களை குண்டுக்கட்டாகத் தூக்கி வெளியேற்றி இருக்கிறது. மேட்டுப்பாளையம் அருள்மிகு சுப்ரமணிய ஸ்வாமி திருக்கோயிலில் கந்த சஷ்டி கவசம் பாட அனுமதி மறுத்ததை அடுத்து பக்தர்கள் சாலையில் அமர்ந்து கந்த சஷ்டி பாட வேண்டிய சூழ்நிலைக்கு முருக பக்தர்கள் தள்ளப்பட்டுள்ளனர். நாமக்கல் இறையமங்கலம் முருகன் கோவில், அறந்தாங்கி போன்ற இடங்களிலும் பாட அனுமதி மறுத்துள்ளனர். நெல்லையப்பர் திருக்கோவிலிலும் அனுமதி மறுக்க ஹிந்து முன்னணியினர் போராட்டம் நடத்தியபின் அனுமதி அளித்துள்ளனர்.

இதற்கெல்லாம் காரணம் கேட்டால் சட்டம் ஒழுங்கு பிரச்சினை வருமாம். கோவிலில் கூடி அமைதியாக கந்த சஷ்டி கவசம் பாடினால் எப்படி சட்டம் ஒழுங்கு பிரச்சினை வரும்? கோவிலில் கந்த சஷ்டி கவசம் பாடாமல் எங்கே பாடுவார்கள்? முஸ்லீம்களிடம் இதே போன்று மசூதியில் கூடி தொழுகை நடத்தக்கூடாது சட்டம் ஒழுங்கு பிரச்சினை வரும் என்று அரசு கூறுமா?

இதே போன்று பாரதி சேவா சங்கம் பல ஆண்டுகளாக குடும்ப சங்கமம் நிகழ்ச்சி நடத்தி வருகிறது. இந்தாண்டும் அதே போன்று அடியார்களுடன் ஆறுமுகன் என்ற பெயரில் சென்னை திருவான்மியூரில் நடத்த திட்டமிட்டிருந்தது. இந்நிகழ்வுக்கு முறையாக அனுமதி கேட்டிருந்தும் கடைசி வரை பதில் அளிக்காமல் காலந்தாழ்த்தி நிகழ்ச்சிக்கு முதல் நாள் இரவு 10மணிக்கு அனுமதி மறுத்திருக்கிறது. நிகழ்ச்சியன்று கூடியிருந்த ஹிந்துக்களை கலைந்து போக வைத்துள்ளது காவல்துறை.

மொகலாயா ஆட்சியை விஞ்சும் அளவிற்கு திராவிட மாடல் அரசு ஹிந்துக்களுக்குத் தொடர்ந்து துரோகம் செய்து வருகிறது. ஹிந்துக்கள் தங்கள் வழிபாட்டு உரிமையைப் பெற சட்டப் போராட்டம் நடத்தி அதன் மூலம் வெற்றிக் கண்டாலும் கூட அதிகாரத்தை தன் கையில் வைத்திருக்கும் அரசு தன் ஓட்டு அரசியலுக்காக நீதிமன்ற உத்தரவை மதிக்காமல் அவமதிக்கவும் அளவிற்குச் செல்கிறது.


லால்குடி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட நெருஞ்சலக்குடி கிராமத்தில் இந்த முன்னனி சார்பில் 23.02.2026 அன்று ஒன்று கூடுவோம் கஷ்டி பாடுவோம் நிகழ்ச்சி நடத்துவதாக தெரியவருகிறது விக்னேஷ் இந்து முன்னனி கிளை பொறுப்பாளர் லால்குடி காவல்நியைத்தில் கஷ்டி பாடுவோம் நிகழ்ச்சிக்கு மனு எதுவும் பெறப்படவில்லை எனவே விக்னேஷ் இந்து முன்னனி நெருஞ்சலக்குடி மாரியம்மன் கோவிலில் கந்த சஷ்டி பாடுவது நிகழ்ச்சிக்கு அனுமதி மறுக்கப்படுகிறது

22/02/2

SUB INSPECTOR OF POLICE
LALGUDI POLICE STATION
TRICHY DISTRICT

இன்று தமிழகத்தில் நடக்கும் நிகழ்வுகள் ஹிந்து இன அழிப்பு சதியே இப்படித்தான் காஷ்மீரிலும் ஹிந்துக்களின் ஒவ்வொரு உரிமைகளாக பறிக்கப்பட்டு பின் ஹிந்து இன அழிப்பு நடந்தேறியது. இதே நிலை தான் இன்று தமிழகத்திலும் நிலவுகிறது. ஹிந்துக்கள் ஒற்றுமையுடன் ஹிந்து வாக்கு வங்கி என்ற ஒன்றை ஏற்படுத்தும் வரை இந்நிலை மாறாது, ஹிந்துக்கள் விழிப்பார்களா?



# கேரளா ஸ்டோரி

-ராஜேஷ்

கருத்துச் சுதந்திரம், படைப்புச் சுதந்திரம் போன்ற கோஷங்களை அவ்வப்போது எழுப்பும் கும்பல், இது ஒரு சாராருக்கு மட்டுமே சொந்தம், இதே அளவீடுகள் மாற்றுச் சிந்தனை (தாங்கள் ஏற்காத) கொண்ட படைப்பாளர்களுக்கு பொருந்தாது என்ற தாராள மனம் கொண்டவர்களாக உலவுவதை பார்க்கும் நமக்கு தி கேரளா ஸ்டோரி 2 வுக்கு எதிரான பிரச்சாரத்தை புரிந்து கொள்ள முடியும்.

படத்திற்கு எதிராக போடப்பட்ட வழக்கில் தனிநீதிபதி பேச்சு குரியன் தாமஸ், சென்ஸார் போர்டு சட்டத்தின்படி செயல்படாமல் U/A சான்றிதழ் வழங்கியிருப்பதை ஏற்க முடியாது. அதனால் படத்தை 27 வெளியிடுவதை தற்காலிகமாக நிறுத்தி வைத்து உத்தரவிட்டார். அமைதியாக உள்ள கேரளாவில் பதற்றத்தை ஏற்படுத்திவிடும் என காரணம் கூறினார். இதை எதிர்த்து தயாரிப்பு நிறுவனம் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்த வழக்கில், தனிநீதிபதியின் தீர்ப்பை ஒத்திவைத்து, படத்தை ரிலீஸ் செய்யலாம் என உத்தரவிட்டுள்ளது. நடந்தை சொன்னால் ஏன் இவ்வளவு களேபரம்?

தி கேரளா ஸ்டோரி 1 வந்த போதே காம்ரேடுகளும், காங்கிரஸ் கட்சியினரும் கதறித் துடித்தனர். கேரளப் பெண்கள், குறிப்பாக ஹிந்து, கிறிஸ்தவப் பெண்கள் திட்டமிட்டு




முஸ்லீம் இளைஞர்களால் காதலிப்பதாக நடித்து, அவர்களை மதம் மாற்றுவதுடன், பயங்கரவாதச் செயலுக்கு உட்படுத்துவதை மையமாக வைத்து எடுக்கப்பட்டது.இக்கதை உண்மைக்கு புறம்பானது, ஆர்.எஸ்.எஸ், பாஜக கேரளாவில் கால் பதிக்க கலையுலகை பயன்படுத்தி இப்படிப்பட்ட அப்பட்டமான பிரச்சார படங்களை எடுத்து வெளியிடுகிறது என முதல்வர் பினரயி உட்பட பலரும் பொங்கினர்.

இயக்குநர் சுதீப் சென், தயாரிப்பாளர் விபுல் ஷா ஆகியோர் "லவ் ஜிஹாத்"தால் பாதிப்புக்குள்ளாகி, அவதியுற்று, மனரீதியாக பாதிக்கப்பட்டு பின் எப்படியோ தப்பித்து வந்த பெண்களை மேடையேற்றினர். தாங்கள் எப்படி இஸ்லாமிய இளைஞர்களால் திட்டமிட்டு ஏமாற்றப்பட்டோம், மதம்மாற்ற மூளைச்சலவை செய்தலை, இயக்கமாக எப்படி செயல்படுகிறார்கள் என்பதையும் கடைசியில் ISIS பயங்கரவாத அமைப்புக்கு செக்ஸ் அடிமையாக கொண்டு செல்ல திட்டமிடும் விவரங்களை எல்லாம் தங்கள் முகம் மறைக்காமல் மேடையில் தைரியமாக பேசினர் பாதிப்புக்குள்ளானப் பெண்கள்.

ஒரு உண்மைக் கதையை ஆதாரங்களுடன் மக்கள் முன்பு காட்டிய பிறகும் அதை ஏற்கும் மனநிலையில்லாமல் புலம்புவதில் அர்த்தமில்லை. மேலும் கேரளாவில் அதிகளவில் "லவ் ஜிஹாத்" நடக்கிறது, கிறிஸ்தவப் பெண்கள் இதில் சிக்காமல் அவர்களை காப்பது நம் கடமை என ஞாயிறு சர்ச் பிராத்தனைக் கூட்டத்தில் பிஷப்களும், பாதிரிமார்களும் பேசியதுடன், பொதுவெளியிலும் பேச ஆரம்பித்ததும் ஆளும் கம்யூனிஸ அரசும், ஆண்ட காங்கிரஸும், ஐய்யயோ அப்படி சொல்லாதீங்க ஃபாதர், நீங்க இப்படி பேசுனா RSS, பாஜக உள்ளே வந்திடும் என புலம்பத் தொடங்கி, கிறிஸ்தவர்களிடம் பஞ்சாயத்து செய்ய கிளம்பினர்.

காம்ரேடுகள், அஞ்சியது நடந்தே விட்டது என்பது திருவனந்தபுரம் மாநகராட்சியை பாஜக கைப்பற்றியதும் உணர்ந்து விட்டார்கள். ஆம் தலைநகரிலேயே புகுந்து விட்ட பாஜக 2026ல் நடக்க இருக்கும் சட்டமன்ற தேர்தலிம் தி கேரளா ஸ்டோரி 2 Goes Beyond வெளிவருது, செக்குலர் அரசியல் பேசி ஹிந்துக்களை ஏமாற்றிய கட்சிகளின் வயிற்றில் புளியைக் கரைக்க ஆரம்பித்துள்ளது. முதல் ஆளாக முதல்வர் பினராயி, கேரளாவைக் களங்கப்படுத்தும் வேலையைத் தொடர்ந்து செய்வதை ஏற்க முடியாது, படத்தைத் திரையிட அனுமதிக்கக் கூடாது என குரல் கொடுத்தார். அவரைத் தொடர்ந்து காங்கிரஸ் மற்றும் முற்போக்கு முண்டங்கள் கூக்குரலிட ஆரம்பித்து விட்டனர்.

கேரள நீதிமன்றமோ, நாங்கள் சாதரணமாக படைப்பு சுதந்திர விவகாரத்தில் மூக்கை நுழைப்பதில்லை. ஆனால் ஒரு படைப்பு மாநிலத்தில்

நிலவி வரும் அமைதியை சீர்குலைக்கும் என்றாலோ, அந்த ஒட்டு மொத்த மக்கள் மீதான தவறான பிம்பத்தை ஏற்படுத்தும் என கருதினால், அதை பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது. எனவே ரிலீஸ் செய்வதற்கு முன் நாங்கள் படத்தை பார்க்க வேண்டும் என கருத்து தெரிவித்தது. இதற்கு காரணம் என்னவென்றால் தி கேரளா ஸ்டோரி 2 வின் ட்ரைலர் ஏற்படுத்திய அதிர்வு தான் என்கிறார்கள். கேரள மக்களின் மாட்டுக்கறி உண்ணும் வழக்கத்தை கொச்சைப்படுத்துவதாகவும், மதம் மாற்றுவதற்காக பெண்ணின் வாயில் பலவந்தமாக திணிப்பது போல காட்டியிருப்பதும், பத்தின் பின்னணியில் 2047க்குள் இந்தியாவை இஸ்லாமிய நாடாக மாற்றுவோம் என சபதம் ஏற்பது போன்ற காட்சியை வைத்திருப்பது தான் மிகப் பெரிய சர்ச்சையாகியுள்ளது.

மதம் மாற்றுவதற்காகவே லவ் ஜிகாத் திட்டமிட்டு நடத்தப்படுவதை வெளிப்படையாக காட்டியிருப்பதும், குரான் வசனங்கள் பின்னணியில் நடப்பதாகக் காட்சிப்படுத்தியிருப்பது, முஸ்லீம் அமைப்புகளை விட அவர்கள் சிணுங்கினால் உடனே இவர்களுக்கு ஜல்ப் ஆகிடும் ஓட்டுப் பிச்சை கட்சிகளுக்கு தான் பொத்துக்கொண்டு வந்து விடுகிறது. ஆனால் இது மாதிரியான "லவ் ஜிகாத்"தினால் பாதிக்கப்பட்ட பெண்கள் மேடையேறி சாட்சியம் கூறினாலும் இவர்கள் ஏற்க தயாரில்லை என்பதை கவனிக்க வேண்டும்.

தி கேரளா ஸ்டோரி 1ல் பாதிக்கப்பட்ட 24 பெண்களை மேடையேற்றிய தயாரிப்பு நிறுவனம் பாகம் 2ல் பாதிக்கப்பட்டு மீண்ட 33 பெண்களை வைத்து சாட்சியம் கூறிட செய்தனர். அதிலும் ராஞ்சியை சேர்ந்த தாரா ஷாதியோ என்ற தேசிய அளவில் துப்பாக்கிச் சுடும் போட்டியில் கலந்து கொண்ட வீராங்கனை அளித்த சாட்சியம் மிக முக்கியமானது. ரஞ்சித் கோஹ்லி என அறிமுகமாகி காதலித்து பின் தன் சுயரூபமான ரக்கிபுல் ஹசன் என தெரிய வந்து போதும், அவன் தாயுடன் சேர்ந்து இஸ்லாமிய மதத்திற்கு மதம்மாற வற்புறுத்திய போது, அங்கிருந்து தப்பியோடி வந்ததோடு அவர்களுக்கு எதிராக சட்டப் போராட்டம் நடத்தியதன் விளைவாக 2023ல் ரக்கிபுல் ஹசன் மற்றும் அவனுடைய தாயும் குற்றம் நிரூபிக்கப்பட்டு கைதும் செய்யப்பட்ட சம்பவத்தை விவரித்தார்.

உண்மை இப்படியிருந்தாலும் திரைத்துறையில் இருக்கும் அனுராக் காஷ்யப், பிரகாஷ் ராஜ் போன்ற முற்போக்கு முண்டங்கள் அவதூறு பேசியதற்கு டைரக்டர் காமாக்யா சிங், தயாரிப்பாளர் விபுல் ஷாவும் "உங்கள் மாநிலத்தில் நடந்தது இப்போது தேசம் முழுவதும் பரவ ஆரம்பித்திருப்பதை ஆதாரத்துடன் வெளிக்கொண்டு வந்துள்ளோம், இதன் மீது கவனம் செலுத்தினால் நல்லது. இல்லையென்றால் அம்மாநிலம் நாசமாகப் போவதை யார் தடுக்க முடியும்" என பதிலடி தந்துள்ளனர். தேர்தலை மையமாக வைத்து, ஹிந்துத்துவ ஓட்டு அறுவடை செய்யலாம் என கனவு காண்கிறது பாஜக, ஆனால் அவர்களால் படித்த மக்கள் அதிகமுள்ள கேரளாவில் கால் பதிக்கவே முடியாது என நடுக்கத்துடனேயே பிரிட்டாஸ் போன்ற காம்ரேடுகள் ஈனகுரலில் கூவுவதைக் கேட்க பரிதாபமாக இருக்கிறது.

படைப்புச் சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்தக் கூடாது என எதிர்க்குரல் எழுப்பும் இந்த முற்போக்காளர்கள் "கூஸ்கார் பண்டித்" Ghooskhor Pandat எனும் பேராசை பிராமணன் என்ற தலைப்பில் நீரஜ் பாண்டே தயாரிக்க, மனோஜ் பாஜ்பாய் நடித்த வெப் சீரிஸ் மிகப்பெரும் சர்ச்சையை வடமாநிலங்களில் கிளம்பியது. UGC புதிய சட்ட நடைமுறை பிராமணர்களுக்கு எதிரான வெறுப்பை விதைக்கிறது எனப் போராட்டங்கள் நடந்து அடங்குவதற்குள், குறிப்பிட்ட ஒரு சாதிக்கு எதிராக இப்படி வெப்சீரிஸ் தலைப்பை பகிரங்கமாக வைப்பது எரியும் கொள்ளியில் நெய் ஊற்றியது போல ஆகிவிட்டது. உடனடியாக நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடுத்த தாலும், ஹிந்து சமுதாயத்தை சீண்டும் வகையில் படம், வெப்சீரிஸ் வெளியிடுவதை வழக்கமாக கொண்ட பாலிவுட்டுக்கு எதிராக ஹிந்தி, ஆங்கில ஊடகங்கள் சேர்ந்து கிழித்து எடுத்ததாலும் வேறு வழியில்லாமல் அந்த தலைப்பை பின் வாங்கியிருக்கிறது தயாரிப்பு நிறுவனம்.

ஒரு சமுதாயத்தின் மீது வேண்டுமென்றே வெறுப்பை உமிழும் Ghooskhor Pandat க்கு எதிராக சட்டப் போராட்டம் நடத்தி ஹிந்து சமுதாயம் அமைதியான வழியில் தயாரிப்பு நிறுவனத்திற்கு பாடம் புகட்டிய அதேவேளையில் உண்மை ஆதாரங்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட தி கேரளா ஸ்டோரி 2 க்கு சென்ஸார் சான்றிதழ் வழங்கக் கூடாது என்றும், படம் திரையிடப்பட்டால் தியேட்டரை முற்றுகையிடுவோம் என தமிமுன் அன்சாரி உள்ளிட்ட முஸ்லீம் அடிப்படைவாத அரசியல் தலைவர்கள் வன்முறைக்கு திட்டமிடுவதை பார்க்கும் போது, Love Jihad and other fictions:Simple Facts to Counter Viral Falsehood என லவ் ஜிகாத் என்பது ஒரு கற்பனை, முஸ்லீம்கள் மீது தொடுக்கப்பட்ட பொய்ப்பிரச்சாரம் என ஸ்ரீனிவாசன் ஜெயின் போன்றவர்கள் புத்தகம் எழுதி கட்டமைக்க நினைத்த கோட்டைகள் இன்று தி கேரளா ஸ்டோரி 2 மூலம் சுக்கு நூறாக உடைபடுவதை சகிக்க முடியாமல் இவர்கள் கதறுவதை கேட்க ஆசையாகத் தான் இருக்கிறது.

தேர்தலை முன்னிட்டு இலவச அறிவிப்புகளுக்குத் தடை கோரும் மனுவை விரைந்து விசாரிக்க உச்ச நீதிமன்றம் மறுப்புனு பொசுக்குன்னு சொல்லிப்புட்டாங்களே ?

---

ஆஹா என்ன ஒரு பொறுப்பு, எலெக்ஷன் நேரத்துல தொல்லை செய்ய வேண்டாம், தேர்தல் முடியட்டும் னு நீதித்துறை காட்டும் அளவற்ற ஆதரவு மெய் சிலிர்க்க வைக்குது....

எடப்பாடி பழனிச்சாமியின் ரூ. 10,000/- அறிவிப்பு தேர்தலில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாதுனு அடங்க மறு அத்துமீறு advisor சொல்லிருக்காரே?

---

இவங்க கூட்டணி கட்சி 5,000 குடுத்ததை வரவேற்பாங்களாமாம் ! பத்தாயிரம் ஓவா இன்னொருத்தவர் தாரேன்னு சொன்னா அது எடுபடாதாமாம்... இவரு மேட்டர் கணக்குல ஸ்டராங்க்... ஆனா maths ல வீக்

அரசு கல்லூரிகளில் பணிபுரியும் கௌரவ விரிவுரையாளர்களுக்கு ரூ.5,000 ஊதிய உயர்வுனு உயர்கல்வித் துறை அமைச்சர் கோ.வி செழியன் சொல்லிருக்காரே ?

---

எல்லோரையும் விலைக்கு வாங்க தயார் நிலையில்...... திருடர்கள் வருகை 2.0 Loading

சசிகலா அம்மையார் புதிய கட்சி தொடங்குவதற்கு முன் ஏற்பாடாக கட்சி கொடியை அறிமுகம் செய்துள்ளாரே ?

---

ஆசை யாரை விட்டது.... ஆவதும் பெண்ணால் [ ஜெயலலிதா] அழிவதும் பெண்ணால் [ பிரேமலதா, சசிகலா]




- நா.பாஸ்கரன்

நல்லவராக இருந்தால்,
நேர்மையாக இருந்தால்
மதிப்பும், மரியாதையும் தானாக வரும் என்பதற்கு எடுத்துக்காட்டு, நல்லகண்ணு, ஓமந்தூரார்,அண்ணா, காமராஜர், கக்கன்னு ரசனி காந்த் சொன்னதை நீ கேட்டியா பங்கு.....

---

கேட்டேன், கேட்டேன், எனக்கு டவுட் என்னென்னா? கலைஞர் பேரை அந்த லிஸ்ட் ல சேர்க்க மறந்துட்டாரா? மறுத்துட்டாரா? அவருக்கு மனசாட்சி எல்லாம் இருக்கு. உறுத்தும் ல....

மதிமுகவுக்கு ஆதரவாக ஆதரவு செய்வோம் - மல்லை சத்யாவின் அதிரடிய பார்த்தியா பங்கு !

---

இந்த பெரிய மனசு எல்லாம், அவரை வளர்த்துவிட்ட நடைபயண தலீவர் கிட்ட இருந்து வந்திருக்கும்.. யாரை எதிர்த்து கட்சித் தொடங்கினாரோ, அவர்களிடமே மண்டியிட்டு, மகனுக்காகத் தள்ளாத வயதிலும், நடை பயிலும் அந்த கொள்கை குன்று வைகோவுக்கு தமிழக அரசின் உயர்ந்த விருது ஒன்று பார்சல் !

டெல்லியில் இருந்து ஒருபோதும் தமிழகத்தை ஆளும் நிலை வரக்கூடாது னு முதல்வர் நல்லா உறைக்கிற மாதிரி பேசியிருக்காரே ?

---

சோதிமணி அக்கா, பிரவீன் சக்கரவர்த்தி, மாணிக்கம் தாகூர் போன்றவர்கள் இதை நல்லா மொழிபெயர்த்து ராஹுலுக்கு சொன்னா, அவர் அவங்க அம்மாகிட்ட சொல்லி, அவங்க அம்மா கார்கே கிட்ட சொல்லி, அவர் சோடங்கர் கிட்ட சொல்லி, சோடங்கர் [ செல்வப்பெருந்தகையை avoid பண்ணிட்டு ] விஜய் கிட்ட டைரக்டா சொல்லி இதுக்கு ஒரு முடிவு வரும்....

கூட்டணிக்காக தந்தை பெரியாரையே விட்டுக்கொடுத்த எடப்பாடி பழனிசாமி - பேராசிரியர் அருணன், சும்மா கடு கடுன்னு கடிஞ்சிருக்காரே ?

---

அந்த வெங்காய Layer ஐ விடுங்க. பக்கம் 21ல பதவிக்காக திமுக என்ன Dash எல்லாம் விட்டுக்கொடுத்ததுனு ஈரோட்டு வெங்காயம் சொன்னதை எல்லாம் நினச்சா, ஒரே கிளு கிளுப்பா இருக்கும்.

# AI மாநாடு சிறப்பம்சங்கள்

-ரமேஷ்

**செயற்கை நுண்ணறிவில் இந்தியா**

2022 ஆம் ஆண்டில் ChatGPT தொடங்கப்பட்டது, இது 'AI ஏற்றத்தின்' தொடக்கமாகப் பார்க்கப்படுகிறது. AI என்பது ஒரு தொழில்நுட்ப முன்னேற்றமாக மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த மானுட சமுதாயம் இதுவரை எட்டாத வாய்ப்புகளை அணுக உதவும் கருவியாகவும் உருவாகி வருகிறது. இத்தகைய சூழ்நிலையில் செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாடு 2026 புதுதில்லியில் வெகுச் சிறப்பாக நடைபெற்றது. அடுத்து வர இருக்கின்ற AI புரட்சி யுகத்தில் உலகளாவிய தலைமை இடத்தை நோக்கி இந்தியா நகர்கிறது. இந்த உச்சிமாநாடு வெறும் தொழில்நுட்பக் கூட்டம் மட்டுமல்ல, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களின் நுகர்வோர் என்ற நிலையிலிருந்து AI யுகத்தின் விதிகளை உருவாக்கும் சிற்பியாக இந்தியா உருமாறி வருகிறது என்பதற்கான ஒரு அறிவிப்பாகும்.

**உலகத் தெற்கின் முதல் உச்சி மாநாடு**

ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன், இஸ்ரேல், ஜப்பான் மற்றும் தென் கொரியாவைத் தவிர்த்த ஆசியா மற்றும் ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தைத் தவிர்த்து ஓசியானியாவை உள்ளடக்கிய பகுதி உலகத் தெற்குப் பகுதி (Global South) என்று அழைக்கப்படுகிறது. உலகத் தெற்குப் பகுதியில் நடத்தப்படும் இந்த முதல் உலகளாவிய AI உச்சி மாநாடு, இந்தியாAI மிஷன் மற்றும் டிஜிட்டல் இந்தியா முன்முயற்சியின் கீழ் நடைபெற்றது.

பிப்ரவரி 16 முதல் 20 வரை, நடைபெற்ற இந்த மாநாட்டில் உலகெங்கிலும் உள்ள 20க்கும் மேற்பட்ட நாட்டுத் தலைவர்கள், 60 அமைச்சர்கள் மற்றும் 500 உலகளாவிய AI தொழில்நுட்பத் தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள், AI கண்டுபிடிப்பாளர்கள், ஐக்கிய நாடுகள் சபையின் மூத்த பிரதிநிதிகள், கல்வியாளர்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், மத்திய அமைச்சகங்கள், மாநில அரசுகள் மற்றும் சர்வதேச கூட்டாளர்கள் பங்கேற்றனர்.

**AI எதிர்காலத்தை வடிவமைக்கும் மூன்று சூத்திரங்கள்:**

இந்த AI உச்சி மாநாடு மக்கள், பிரபஞ்சம், முன்னேற்றம் ஆகிய 3 கருப்பொருள்களை மையமாக வைத்து நடத்தப்பட்டது

**மக்கள்** (People): AI அதன் அனைத்து பன்முகத்தன்மையிலும் மனிதகுலத்திற்கு சேவை செய்ய வேண்டும்,

**பிரபஞ்சம்** (Planet): AI கண்டுபிடிப்புகள் அனைத்தும் சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் நிலைத்தன்மையுடன் ஒத்துப்போக வேண்டும்.

**முன்னேற்றம்** (Progress): AI இன் நன்மைகள் சமமாகப் பகிரப்பட வேண்டும், உலகளாவிய வளர்ச்சி மற்றும் செழிப்பை மேம்படுத்த வேண்டும்.

**AI உச்சிமாநாடு ஏன் முக்கியமானது**

செயற்கை நுண்ணறிவு ஒரு கல்வி ஆராய்ச்சி களத்திலிருந்து கிட்டத்தட்ட ஒவ்வொரு துறையையும் மறுவடிவமைக்கும் ஒரு மாற்று சக்தியாக உருவாகியுள்ளது. சுகாதாரப் பாதுகாப்பு, நோயறிதல், விவசாய உற்பத்தித்திறன், நிதி அமைப்புகள், கல்வி, பாதுகாப்பு, உற்பத்தி, காலநிலை ஆய்வுகள், பாதுகாப்பு கட்டமைப்புகள் போன்ற எல்லாத் துறைகளையும் AI மறுவடிவமைக்க ஆரம்பித்துள்ள சூழ்நிலையில், செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம் டிஜிட்டல் ஏகபோகங்களின் கருவியாக மாறிவிடாமல் உலகப் பொது நன்மைக்காகச் செயல்பட வேண்டும் என்ற இலக்கினை நோக்கிச் செல்லும் திசையை இந்த உச்சி மாநாட்டில் இந்தியா வழிகாட்டி இருக்கிறது. இந்த மாநாட்டில், "AI மனிதனை மையமாகக் கொண்டதாக இருக்க வேண்டும். சிறிய நாடுகள் மற்றும் தொடக்க நிறுவனங்கள் AI புரட்சியிலிருந்து விலக்கப்படக் கூடாது" என்ற இந்தியாவின் செய்தி தெளிவாக வலியுறுத்தப்பட்டது. நிர்வாகம், நெறிமுறைகள், இறையாண்மை, AI தரவு பாதுகாப்பு, எல்லை தாண்டிய ஒத்துழைப்பு என பல்வேறு தலைப்புகளில் 700 க்கும் மேற்பட்ட அமர்வுகள் இந்த ஐந்து நாட்களில் நடத்தப்பட்டன, இந்திய மொழிகளுக்கு ஏற்றவாறு உள்நாட்டு AI மாதிரிகளை உருவாக்குவதும் கருப்பொருளாக இருந்தது. உச்சிமாநாட்டிற்கு முன்னதாக, 12 இந்திய தொடக்க நிறுவனங்கள் தங்கள் AI கண்டுபிடிப்புகளை பிரதமர் மோடியிடம் வழங்கின. இந்தத் திட்டங்களில் இந்திய மொழி சார்ந்த பெரிய மொழி மாதிரிகள் (AI Large Language Models), பன்மொழி AI கருவிகள், பொறியியல் சார்ந்த AI பயன்பாடுகள் ஆகியவை அடங்கும். உலகளாவியப் போட்டியில் இந்தியாப் போன்ற வளரும் நாடுகள் மற்றும் சிறு நாடுகளின் தொடக்கநிலை நிறுவனங்களுக்கு பாதகத்தை ஏற்படுத்தாமல் காப்பது மற்றும் AI திறன்கள் மீது இந்த நாடுகள் தங்களது கட்டுப்பாட்டைத் தக்கவைத்துக்கொள்வதை உறுதி செய்வது குறித்து "இறையாண்மை AI" (Sovereignty AI) என்ற தலைப்பில் விவாதங்கள் நடந்தன.



உலக தொழில்நுட்ப ஜாம்பவான்களுடன் AI பயன்பாடுகளை உருவாக்கும் இந்திய ஸ்டார்ட்அப் நிறுவனர்கள் மேடையைப் பகிர்ந்து கொண்டது ஒரு சிறப்பு அம்சமாகும். கூகிள் தலைமை நிர்வாக அதிகாரி சுந்தர் பிச்சை, ஓபன்ஏஐ தலைமை நிர்வாக அதிகாரி சாம் ஆல்ட்மேன் மற்றும் பிறருடன் பிரதமர் நரேந்திர மோடி (நடுவில்) கைகோர்த்து உலகளாவிய AI ஒருங்கிணைப்பிற்கு அச்சாரமிட்டார். உச்சிமாநாட்டில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி உலகளாவிய தலைமை நிர்வாக அதிகாரிகளுடன் இருதரப்பு மற்றும் வட்டமேசை சந்திப்புகளையும் நடத்தினார்.

**MANAV AI - இந்தியா காட்டிய புதிய பாதை**

பிப்ரவரி 16 அன்று புது தில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெற்ற India AI இம்பாக்ட் எக்ஸ்போ 2026 ஐ தொடங்கி வைத்த பிரதமர் நரேந்திர மோடி, AI-க்கான **MANAV** என்ற தொலைநோக்குப் பார்வையை முன் வைத்தார். உலக வரலாற்றில் இது வரை வந்த அறிவியல் தொழிநுட்பப் புரட்சிகள் எல்லாம் வளர்ந்த நாடுகளை மட்டுமே மேலும் மேலும் வளர்த்திய ஏக போக உரிமையாக இருந்து வந்ததைப் பார்க்கலாம். இப்படிப்பட்ட சூழ்நிலையை அடியோடு மாற்ற, AI தொழில் நுட்பம் மானுடம் முழுவதற்கும் கொண்டு செல்வதற்கான திசையை **MANAV** என்ற தொலைநோக்குப் பார்வை மூலம் உலகிற்கே சரியான வழிகாட்டி இருக்கிறார் பிரதமர்.

**MANAV** என்பது மனிதனைக் குறிக்கிறது இதில் உள்ள

**M (M - Moral and Ethical Systems) மானுட சமுதாயத்தின் தார்மீக அமைப்புகள்:** AI மேம்பாடு தார்மீக நெறிமுறை வழிகாட்டுதல்களின் அடிப்படையில் கண்டிப்பாக கட்டமைக்கப்பட வேண்டும்.

**A என்பது (Accountable Governance) பொறுப்பான நிர்வாகம்:** வெளிப்படையான விதிகள் மற்றும் வலுவான மேற்பார்வை வழிமுறைகளை உறுதி செய்தலைக் குறிக்கிறது.

**N என்பது தேசிய இறையாண்மை (National Sovereignty): AI** தரவு அதை உருவாக்குபவர்களுக்குச் சொந்தமானது என்ற கொள்கையை வலுப்படுத்துகிறது.

> **AI புரட்சி யுகத்தில் உலகளாவிய தலைமை இடத்தை நோக்கி இந்தியா நகர்கிறது.**

**A என்பது (Accessible and Inclusive) எல்லாராலும் அணுகக்கூடியது மற்றும் எல்லாரையும் உள்ளடக்கியது:** AI என்பது உலக சமூக நன்மைக்காக இருக்க வேண்டுமே அல்லாது ஒரு சிலரின் கைகளில் குவிந்துள்ள ஏகபோகமாக உரிமையாக AI ஆகி விடக் கூடாது என்பதை இது குறிக்கிறது.

**V என்பது Valid and Legitimate Systems (உறுதியான, சட்டரீதியான அமைப்புகள்): AI** அமைப்புகள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள் சட்டப்பூர்வமானதாகவும், சரிபார்க்கக்கூடியதாகவும், நம்பகமானதாகவும் இருக்க வேண்டும்.

வளர்ந்து வரும் அபாயங்கள் குறித்த கவலைகளை எடுத்துரைத்த பிரதமர், குறிப்பாக குழந்தைகளுக்கு வலுவான பாதுகாப்புகளின் அவசியத்தை வலியுறுத்தினார். இந்த உச்சிமாநாட்டில் புதிய உள்நாட்டு கண்டுபிடிப்புகளையும் பிரதமர் அறிவித்தார். உலகளாவிய ஒத்துழைப்பை அழைக்கும் பிரதமர் மோடி, தொழில்நுட்பத் தலைவர்கள் மற்றும் கண்டுபிடிப்பாளர்களை இந்தியாவுடன் கூட்டாளராகும்படி கேட்டுக் கொண்டார்.

“சர்வஜன ஹிதாய, சர்வஜன சுகாய” (அனைவருக்கும் நல்வாழ்வு, அனைவருக்கும் மகிழ்ச்சி) என்ற சுலோகத்தை நினைவுறுத்தி மனிதகுலத்திற்கான AI என்ற கருத்தை வலுவாக எடுத்துரைத்த இந்த உச்சி மாநாடு, AI இன் நிர்வாகம், பாதுகாப்பு மற்றும் சமூக தாக்கத்தில் உலகளாவிய ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக்

கொண்ட வளர்ந்து வரும் சர்வதேச செயல்முறையை ஏறபடுத்தி இருக்கிறது.

உச்சிமாநாட்டைத் தொடங்கி வைத்த பிறகு, பிரதமர்மோடிபல்வேறுதுறைகளில்**AI**பயன்பாடுகளை காட்சிப்படுத்திய கண்காட்சியாளர்களுடன் கலந்துரையாடினார். 70,000 சதுர மீட்டருக்கும் அதிகமான பரப்பளவில் 10 அரங்குகளில் AI கண்காட்சி நடைபெற்றது. ஆஸ்திரேலியா, ஜப்பான், ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, செர்பியா, எஸ்டோனியா, தஜிகிஸ்தான் மற்றும் ஆப்பிரிக்க நாடுகளின் பங்கேற்பு உட்பட பதின்மூன்று நாட்டு அரங்குகள் AI சுற்றுச்சூழல் அமைப்பில் சர்வதேச ஒத்துழைப்பை பறைசாற்றின. 300 க்கும் மேற்பட்ட கண்காட்சி அரங்குகள், 600 க்கும் மேற்பட்ட தொடக்க நிறுவனங்கள் (startups), 2.5 லட்சத்திற்கும் அதிகமான பார்வையாளர்கள் (சர்வதேச பிரதிநிதிகள் உள்பட) பங்கு கொண்ட பிரம்மாண்ட நிகழ்வாக இந்த உச்சி மாநாடு இருந்தது.

இந்த மாநாட்டில், ஆந்திர மாநிலம் விசாகப்பட்டிணத்தில் AI hub அமைக்கவும், அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு கடலுக்கடியில் அதிவேக டேட்டா கேபிள் அமைக்கப்படும் என்றும் கூகுள் தலைவர் சுந்தர் பிச்சை அறிவித்துள்ளார். கட்டமைப்பு இருந்தால் மட்டும் போதாது அதை பயன்படுத்தும் ஆற்றல் அவசியம் என்று மாநாட்டில் பேசிய திரு சுந்தர் பிச்சை, **AI**க்கான சிறப்பு படிப்பை இந்தியர்களுக்கு வழங்கப் போவதாகவும் அறிவித்துள்ளார். முதலீடுகளையும், பொருள் தேடும் சந்தையாகவும் இல்லாமல் அவற்றை வழி நடத்தும் மனித ஆற்றலையும் உருவாக்கும் செயல்திட்டங்களுக்கு இந்த மாநாடு வித்திட்டுள்ளது.

**AI யுகத்தின் விதிகளை உருவாக்கும் சிற்பியாக இந்தியா உருமாறி வருகிறது**

பிரதமருடன் மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு, மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் ஜிதின் பிரசாதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**இந்தியாவின் AI முன்னெடுப்புகள்**

இந்தியா செயற்கை நுண்ணறிவை கொள்கை மட்டத்திலிருந்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு செல்கிறது. இந்தியாவின் செயற்கை நுண்ணறிவு அணுகுமுறையில் தொழில்நுட்ப லட்சியத்துடன் சமூகப் பொறுப்பைக் கலக்கிறது. நிர்வாகம் மற்றும் நீதி வழங்கல் முதல் சுகாதாரம், கல்வி மற்றும் காலநிலை சேவைகள் வரை, டிஜிட்டல் முறையில் அதிகாரம் பெற்ற மற்றும் உள்ளடக்கிய பாரதத்தை வடிவமைக்கும் மக்களை மையமாகக் கொண்ட கருவியாக AI உருவாகி வருகிறது.

தொழில்துறைக்குத் தேவையான AI தொடர்பான திறன்களில் இளைஞர்களைப் பயிற்றுவிப்பதற்காக தேசிய திறன் சிறப்பு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. சர்வதேச தரத்தில் AI ஐ செயல்படுத்த அரசு அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கும் AI திறன் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. பெங்களூருவை மையமாகக் கொண்ட சர்வம் AI, போன்ற முயற்சிகள் இதற்கு எடுத்துக்காட்டு. AI இயங்கும் மொழி தளமான பாஷினி, 20 இந்திய மொழிகளில் மொழிபெயர்ப்பு மற்றும் பேச்சு கருவிகளை வழங்கி வருகிறது. பன்முகத்தன்மையில் வேரூன்றிய AI-அடிப்படையிலான பயன்பாடுகளை உருவாக்கத் தொடக்க நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு பொதுவான தளத்தை வழங்குவதற்கு பாரத்ஜென் AI உருவாக்கப்பட்டுள்ளது. சுகாதாரப் பராமரிப்பு, விவசாயம் போன்று எல்லாத்துறைகளிலும் AI தீர்வுகளாய்ச் செயல்படுத்த இந்திய அரசு முனைந்துள்ளது. தேசிய கல்விக் கொள்கையில் AI இணைக்கப்பட்டுள்ளது. CBSE ஆறாம் வகுப்பு முதல் ஒவ்வொரு கல்வியாண்டிலும் குறைந்தது 15 மணி நேர AI வகுப்புகள் கட்டாயமாக்கப்படுகின்றன. 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை அனைவருக்கும் AI பாடங்கள் பாடத்திட்டத்தில் கட்டாயமாக்கப்படுகின்றன.

**AI ஒரு மந்திரக் கோல்**

மனித வாழ்வின் அத்தனை அம்சங்களிலும் இயங்கு சக்தியாக இனி செயற்கை நுண்ணறிவு இருக்கபோகிறது. இத்தனை துறைகளிலும் நாள் கணக்கில், வாரக் கணக்கில், மாதக்கணக்கில் நடந்து வந்த பணிகளையும் இமைப் பொழுதில் செயற்கை நுண்ணறிவு முடித்து விட்டு அடுத்த வேலையைச் செய்யக் காத்திருக்கும் ஜீம்பூம்பா மந்திரகோலாக, AI இனி விளங்கப் போகிறது. சுருங்கச் சொன்னால் மனித வாழ்க்கையையே தலைகீழாகப் புரட்டிப் போடப் போகிறது AI. இப்படி உருவாகிக் கொண்டிருக்கும் AI புரட்சியில், உலகளாவிய தலைமை இடத்தை நோக்கி இந்தியா வேகமாக நகர்வதோடு மனித குலத்திற்கு வழிகாட்டும் AI நெறிமுறைகளை உருவாக்கியதன் மூலம் உலகிற்கு வழிகாட்டும் உன்னத குருவாகவும் இந்தியா உயர்ந்திருப்பதையும் இந்த உச்சி மாநாடு உறுதிப்படுத்தியுள்ளது.

**AI உச்சி மாநாடு குறித்து மேலும் விவரங்களுக்கு: <https://impact.indiaai.gov.in/>**

# PRAHAAR - பயங்கரவாதத் தடுப்பு கொள்கை

-வெள்ளய்யன்

உள்துறை அமைச்சகம் பிப்ரவரி 23, 2026 அன்று நம் நாட்டின் விரிவான பயங்கரவாதத் தடுப்புக் கொள்கையை வெளியிட்டது. "PRAHAAR" என்று அழைக்கப்படும் இக்கொள்கை அனைத்து வகையான பயங்கரவாத அச்சுறுத்தல்களையும் நிவர்த்தி செய்வதற்கான தேசியக் கட்டமைப்பை கோடிட்டுக் காட்டுகிறது. ஒரு சிறிதும் சமரசத்துக்கு இடம் கொடாத (zero-tolerance) மற்றும் பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்திய அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ப்ரஹார் பாரதத்தின் முதல் பயங்கரவாதத் தடுப்புக் கொள்கை ஆகும்.

**ப்ரஹார் ஏன் தேவை?**

பயங்கரவாதத்திற்கு எதிரான தொடர்ச்சியான போராட்டத்தில் இந்தியா பல தசாப்தங்களாக முன்னணியில் உள்ளது. அச்சுறுத்தல்களின் தன்மை தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கிறது, மேலும் மேலும் புதிய சவால்கள் முன் வைக்கப்படுகிறது என்றாலும், பயங்கரவாதத்தை அதன் அனைத்து வடிவங்களிலும், வெளிப்பாடுகளிலும் இந்தியா தொடர்ந்து எதிர்கொண்டு வருகிறது. இந்தியாவின் அண்டை நாடுகளில் அவ்வப்போது நிலையற்ற தன்மை நிலவுகிறது, சில நாடுகள் சில நேரங்களில் பயங்கரவாதத்தை ஒரு அரசு கொள்கையாகவே பயன்படுத்தியுள்ளன. உலகில் வன்முறைக்கு எந்த நியாயமும் இருக்க முடியாது என்ற நம்பிக்கையில் பாரதம் உறுதியாக உள்ளது.

**ஒரு சிறிதும் சமரசத்துக்கு இடம் கொடாத (zero-tolerance) மற்றும் பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்திய அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டது ப்ரஹார்**

**பயங்கரவாத அச்சுறுத்தல் மதிப்பீடுகள்**

இந்தியா நீண்ட காலமாக எல்லைக்கு அப்பால் இருந்து வரும் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளது, ஜிஹாதி பயங்கரவாத அமைப்புகள் மற்றும் அவற்றின் முன்னணி அமைப்புகள், இந்தியாவில் பயங்கரவாத தாக்குதல்களைத் தொடர்ந்து திட்டமிட்டு, ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருகின்றன. அல்-கொய்தா மற்றும் ISIS போன்ற உலகளாவிய பயங்கரவாத குழுக்களின் இலக்காக இந்தியா உள்ளது, அவை ஸ்லீப்பர் செல்கள் மூலம் நாட்டில் வன்முறையைத் தூண்ட முயற்சித்து வருகின்றன.

பஞ்சாப் மற்றும் ஜம்மு-காஷ்மீரில் பயங்கரவாதம் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் தாக்குதல்களை எளிதாக்குவதற்கு ட்ரோன்களைப் பயன்படுத்துவது உள்ளிட்ட சமீபத்திய தொழில்நுட்பங்களை பயன்படுத்துகின்றனர்.

பிரச்சாரம், தகவல் தொடர்பு, நிதியளித்தல் மற்றும் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு வழிகாட்டுதல் ஆகியவற்றிற்காக, பயங்கரவாதக் குழுக்கள் சமூக ஊடக தளங்களையும் உடனடி செய்தி பயன்பாடுகளையும் பயன்படுத்துகின்றன. Dark Web எனப்படும் நிழல் உலக இணையதளங்கள், கிரிப்டோ கரென்சி போன்ற தொழில்நுட்ப முன்னேற்றங்கள் இந்த குழுக்கள் செயல்பட மேலும் உதவி புரிகின்றன.

CBRNED (வேதியியல், உயிரியல், கதிரியக்க, அணு, வெடிபொருள், டிஜிட்டல்) பொருட்களை அணுகவும் பயன்படுத்தவும் பயங்கரவாத முயற்சிகளை சீர்குலைப்பது மற்றும் தடுப்பது பயங்கரவாத எதிர்ப்பு (CT) நிறுவனங்களுக்கு ஒரு சவாலாக உள்ளது. குற்றவியல் ஹேக்கர்கள் சைபர் தாக்குதல்கள் மூலம் இந்தியாவைக் குறிவைத்து வரும் நிலையில், ட்ரோன்கள் மற்றும் ரோபோட்டிக்ஸை ஆபத்தான நோக்கங்களுக்காகத் தவறாகப் பயன்படுத்துவதால் ஏற்படும் அச்சுறுத்தல் கவலைக்குரிய மற்றொரு பகுதியாகவே உள்ளது.

இப்படி பல்வேறு வடிவங்களில் வரும் பயங்கரவாதத்தை எதிர்கொள்ளும் விரிவான கொள்கை ப்ரஹார்.

**ப்ரஹாரின் ஏழு முக்கிய தூண்கள்**

"PRAHAAR" என்ற சுருக்கத்தின் ஒவ்வொரு எழுத்தும் ஒரு நடவடிக்கை உத்தியைக் குறிக்கிறது:

**P** - தடுப்பு (Prevention)

**R** - பதில்கள் (Responses) - பயங்கரவாதிகளுக்குப் புரியும் மொழியில் பதில் நடவடிக்கை

**A** - உள்திறன்களின் ஒருங்கிணைப்பு (Aggregating Internal Capacities)

**H**-மனித உரிமைகள் மற்றும் சட்டரீதியான நடவடிக்கை (Human Rights and Rule of Law)

**A**-தீவிரவாதத்திற்கு வழி வகுக்கும் சூழ்நிலைகளை குறைத்தல் (Attenuating Enabling Conditions)

**A**-சர்வதேச ஒருங்கிணைப்பு (Aligning International Efforts)

**R** - மீட்பு (Recovery and Resilience)

இந்த ஏழு அம்சங்களையும் விரிவாகக் காண்போம்.

**பயங்கரவாத தாக்குதல்களைத் தடுத்தல்** (Prevention)

பயங்கரவாத அச்சுறுத்தல்களைத் தடுப்பதில் தலையாயது ‘புலனாய்வு வழிகாட்டுதல். புலனாய்வுப் பணியகத்தில் (IB) உள்ள புலனாய்வுக்கான கூட்டுப் பணிக்குழு (JTFI) உடன் பல நிறுவனங்களின் மையத்தை (MAC) செயல்படுத்துதல், நாடு முழுவதும் உள்ளீடுகளை திறம்பட பகிர்தல், மற்றும் மத்திய நிறுவனங்கள் மற்றும் மாநில காவல்துறையினருடன் பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகளுக்கான நெருக்கமான ஒத்திசைவுகளும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இணைய நடவடிக்கைகள், பயங்கரவாத குழுக்களின் ஆன்லைன் நெட்வொர்க்குகள் மற்றும் அவர்களின் பிரச்சாரம்/ஆட்சேர்ப்பு ஆகியவற்றை முன்கூட்டியே சீர்குலைப்பதன் மூலம் இணையத்தைத் தவறாகப் பயன்படுத்துவதை எதிர்த்து பாரத சட்ட அமலாக்க முகமைகள் தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

**உலகில் வன்முறைக்கு எந்த நியாயமும் இருக்க முடியாது என்ற நம்பிக்கையில் பாரதம் உறுதியாக உள்ளது.**

நீர், நிலம் மற்றும் வான் என மூன்று முனைகளிலும் இந்தியா பயங்கரவாத அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள திறன்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

**பயங்கரவாதத்திற்குப் பதிலடி (Responses)**

எந்தவொரு தாக்குதலுக்கும் முதலில் செயலாற்றுவது உள்ளூர் காவல்துறை. மத்திய உள்துறையின் (MHA) கீழ் இயங்கும் தேசிய பாதுகாப்புப் படை (NSG) பயங்கரவாதத் தாக்குதல்களுக்குப் பதிலளிப்பதில் மாநிலப் படைகளுக்கு உதவி செய்வது மட்டுமன்றி மாநிலப் படைகளின் திறனை வளர்ப்பதற்கும் மத்திய, மாநில மற்றும் மாவட்ட மட்டங்களில் உள்ள பல்வேறு நிறுவனங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பயிற்சி களையும் அளிக்கும்.

**திறன்களை ஒருங்கிணைத்தல்** (Aggregating Internal Capacities)

பயங்கரவாத தடுப்பு (Counter Terror or CT) அமைப்புகள் மற்றும் சட்ட அமலாக்க நிறுவனங்களின் நவீனமயமாக்கலுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. சமீபத்திய தொழில்நுட்பம், கருவிகள் மற்றும் ஆயுதங்களைக் கையாளும் பயிற்சி CT நிறுவனங்களுக்கு உடனுக்குடன் வழங்கப்படும்.

மத்திய, மாநில, மாவட்ட அளவில் பல அமைப்புகள் சேர்ந்து செயலாற்றும் நடைமுறைகள் தரப்படுத்தப்பட்டு வருகின்றன. ஒன்றாகச் செயலாற்றும்போது ஏற்படும் இடைவெளிகளைக் கண்டறிந்து தேவையான எதிர் நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதன் மூலம் பல்வேறு சட்ட அமலாக்க மற்றும் CT நிறுவனங்களின் ஒத்திசைவும், ஒட்டுமொத்தமாக அனைத்து நிலைகளிலும் திறன்கள் மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மனித உரிமைகள் மற்றும் சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட செயல்முறைகள் (Human Rights and Rule of Law)**

இந்தியா சட்டத்தின் வழியில் ஆட்சியை நடத்துகிறது, இங்கு சட்டங்களின் மாண்பு நியாயமாகவும், அனைவருக்கும் சமமாகவும் கடைபிடிக்கப்படுவதோடு அடிப்படை உரிமைகளையும் பாதுகாக்கின்றன. மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993 இந்தியாவில் மனித உரிமைகள் மீறல் வழக்குகளைக் கையாள்கிறது. 1948 ஆம் ஆண்டு மனித உரிமைகள் உலகளாவிய பிரகடனத்திலும் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.

பயங்கரவாதம் தொடர்பான குற்றங்களைச் சமாளிக்க சிறப்புச் சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம் 1967, பாரதிய நியாய சன்ஹிதா 2023, பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 2023, பாரதிய சாக்ஷ்ய ஆதினியம் 2023, வெடி பொருள் சட்டம் 1908, ஆயுதச் சட்டம் 1959, பணமோசடி தடுப்புச் சட்டம் 2002 போன்ற பல்வேறு சட்டங்களின் நெறிமுறைப்படியே பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தேவைக்கேற்ற புதிய சட்டங்களும் இயற்றப்படும்.

மாவட்ட நீதிமன்றம், மாநில நீதிமன்றம், உயர் நீதிமன்றம் வரை விரிவான நீதி கட்டமைப்பு மூலம் எந்தவொரு குற்றம் சாட்டப்பட்டவருக்கும் பல நிலை சட்ட தீர்வு கிடைக்கிறது. குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சட்டத்தின் செயல்முறை பரந்த வாய்ப்பை வழங்குகிறது.

**பயங்கரவாதத்திற்கு உகந்த சூழ்நிலைகளைத் தணித்தல் (Attenuating Enabling Conditions)**

சமூகத் தலைவர்கள், மதத் தலைவர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் பயங்கரவாத வன்முறையின் பாதகமான விளைவுகள் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதில் ஈடுபடுத்தப்படுவர். சிறைக் கைதிகளிடையே பயங்கரவாத கருத்துக்களைப் பரப்புவதைத் (Prevent radicalization in prisons) தடுக்க, சிறை ஊழியர்கள் அவ்வப்போது எச்சரிக்கப்படுவர். பாதிக்கப்பட்ட சமூகங்களிடையே

தரமான கல்வி, வீட்டுவசதி, வேலை வாய்ப்புகள், உதவித்தொகைகள் மற்றும் கடன் திட்டங்கள் மூலமாக குறிப்பாக இளைஞர்கள் மற்றும் பெண்கள் கல்வி மற்றும் நிதி ரீதியாக மேம்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் விரோத சக்திகள் இந்த நிலைமைகளை தங்கள் நன்மைக்காக தவறாகப் பயன்படுத்துவது தடுக்கப்படும்.

**சர்வதேச முயற்சிகளை ஒருங்கிணைத்தல் மற்றும் வடிவமைத்தல்** (Aligning International Efforts)

பயங்கரவாதத்தின் நாடு கடந்த தன்மையைக் கருத்தில் கொண்டு, பாரதத்தின் பயங்கரவாத எதிர்ப்பு முயற்சிகளுக்கு சர்வதேச ஒத்துழைப்பு மிகவும் முக்கியம். உளவுத்துறை தகவல் பகிர்வுகளைத் தவிர, பரஸ்பர சட்ட உதவி ஒப்பந்தம் (MLAT), நாடு கடத்தல் ஒப்பந்தம் / நாடுகடத்தல் ஏற்பாடு (ET/EA), கூட்டுப் பணிக்குழு (JWG) மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) போன்ற பல்வேறு ஒப்பந்தங்கள்/ஏற்பாடுகளை இந்தியா ஒவ்வொரு நாட்டுடனும் செய்து வருகிறது. இந்த ஒத்துழைப்பு இந்தியாவிலும் வெளிநாட்டிலும் பல பயங்கரவாத/தீவிரவாத நிறுவனங்கள் மீது குற்றச்சாட்டுக்களைப் பதிவு செய்ய வழிவகுத்துள்ளது. வெளிநாடுகளுக்குத் தப்பியோடியவர்களை நாடு கடத்துவதில் சட்ட அமலாக்க முகமைகளும் வெற்றி பெற்றுள்ளன.

சர்வதேச சமூகத்துடனும் பல்வேறு பயங்கரவாத எதிர்ப்பு மன்றங்களுடனும் இந்தியா தொடர்ந்து செயல்படுகிறது. பயங்கரவாத எதிர்ப்புத் துறையில் உலகளாவிய சிறந்த நடைமுறைகளின் இருதரப்பு மற்றும் பலதரப்பு பரிமாற்றம் பயங்கரவாத அச்சுறுத்தல்களுக்கு எதிராக ஒரு முழுமையான தீர்விற்கு உதவியாக இருக்கும்.

**சமூகம் முழுவதையும் உள்ளடக்கிய அணுகுமுறை மூலம் மீட்பு** (Recovery and Resilience through a whole&of&society approach)

பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் இந்தியா முழு சமூக அணுகுமுறையைப் பின்பற்றுகிறது. அரசுடன் பொது மக்கள், தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்பும் தேவை. பயங்கரவாதத் தாக்குதல் ஏற்பட்டால் விரைவான மீட்புக்கு இந்தக் கூட்டு முயற்சி உதவுகிறது. மருத்துவர்கள், உளவியலாளர்கள், வழக்கறிஞர்கள், அரசு சாரா நிறுவனங்கள், மதத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள் உட்பட சிவில் சமூகத்தின் பிற உறுப்பினர்களைக் கொண்ட குழுவையும் அரசாங்கம் இந்தப் பணியில் ஈடுபடுத்தும்.

**ப்ரஹார் தொடர் முயற்சிகள்**

பயங்கரவாத எதிர்ப்பு முயற்சிகளில் உளவுத்துறை சேகரிப்பு மற்றும் விசாரணைக்காக பல்வேறு நிறுவனங்களுக்கிடையில் மேலும் ஒத்துழைப்புக்கான

**பயங்கரவாதிகள் மட்டுமன்றி, பயங்கரவாத செயல்களோடு சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் - நிதி தந்தவர்கள், புகலிடம் தந்தவர்கள், ஆதரவாளர்கள் என அனைவரும் குற்றவாளிகளாகக் கருதப்பட்டுத் தண்டிக்கப்படுவர்.**

வாய்ப்பு ஏற்படுத்தப்படும். வளர்ந்து வரும் சவால்களுக்கு பதிலளிக்க உள்நாட்டு பயங்கரவாத எதிர்ப்பு சட்டங்கள் அவ்வப்போது திருத்தப்படும். கூடுதலாக, மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் பயங்கரவாத எதிர்ப்பு பிரிவுகள் ஏடிஎஸ்களின் திறனை வளர்ப்பதற்கானத் தொடர்ச்சியான முயற்சி நடைபெறும்.

பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக பொருத்தமான வழக்குகளை எடுக்க, FIR பதிவு செய்வதிலிருந்து வழக்குத் தொடரும் வரை, விசாரணையின் ஒவ்வொருக் கட்டத்திலும் சட்ட நிபுணர்கள் இணைக்கப்படுவர்.

வெளிநாட்டில் உள்ள பயங்கரவாதக் குழுக்கள், இப்போதெல்லாம்தாக்குதல்களைத்தொடங்கஉள்ளூர் அமைப்புகளின் கட்டமைப்பு மற்றும் நிலப்பரப்பு அறிவைப் பயன்படுத்துகின்றன. சர்வதேச மற்றும் பிராந்திய ஒத்துழைப்புடன் இணைந்து எடுக்கப்படும் தேசிய நடவடிக்கைகளால் வெளிநாடுகளில் இருந்து பயங்கரவாதிகளை நாடு கடத்தவும் உதவும் உள்ளூர் அமைப்புகளைக் கண்டறிந்து சட்டப்படி நடவடிக்கை எடுப்பதும் தொடரும்.

பயங்கரவாதத்தின் புரிதல் மற்றும் பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் பற்றி ஒருமித்த கருத்தை உருவாக்க, இந்தியா சர்வதேச கட்டமைப்பிற்காகத் தொடர்ந்து செயல்படும். அதே சமயம், “ப்ரஹார்” ஐ கடைபிடித்து, பயங்கரவாதிகள் மட்டுமன்றி, பயங்கரவாத செயல்களோடு சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் - நிதி தந்தவர்கள், புகலிடம் தந்தவர்கள், ஆதரவாளர்கள் என ஒருவர் விடாமல் அனைவரும் குற்றவாளிகளாகக் கருதப்பட்டுத் தண்டிக்கப்படுவர்.

எதிர்கால பயங்கரவாத அச்சுறுத்தல்களைத் தணிக்க தொழில்நுட்பத்தில் முதலீடு மற்றும் தனியார் நிறுவனங்களுடன் கூட்டு முயற்சி மேற்கொள்ளப்படும்.

ப்ரஹார் ஓர் பாதுகாப்பு வளையம்

உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள பயங்கரவாத வலையமைப்புகளை முழுமையாகக் களைந்து, தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ள ப்ரஹார், பயங்கரவாதம் அற்ற சமூக அமைதியை பாரதத்தில் நிறுவிட உறுதி பூண்டுள்ளது.

மேலும் விவரங்களுக்கு: https://www.mha.gov.in/sites/default/files/PRAHAAREng_23022026.pdf

**செய்தி:**

**விஜய் - சங்கீதா விவகாரத்து வழக்கால் வெளிவந்த பல உண்மைகள் - சூடாகும் அரசியல் களம்**

**சிந்தனை**

தனிப்பட்ட வாழ்க்கை குறித்த பொது விமர்சனம் தவறு. ஆனால், விஜய் கிறிஸ்தவ முறைப்படியும், ஹிந்து முறைப்படியும் திருமணம் செய்து கொண்டுள்ளார். சங்கீதாவை கிறிஸ்தவராக மாற்றியுள்ளார். லவ்ஜிகாத் போன்ற செயலை செய்து விட்டு ஹிந்துக்களை ஏமாற்றியுள்ளார்.

**செய்தி:**

**கவர்னர் ரவி கலந்து கொண்டு மருத்துவ மாணவர்களுக்கு பட்டம் வழங்கிய நிகழ்வை புறக்கணித்த அரசு துறை செயலர்**

**சிந்தனை**

அரசு துறை செயலர் அரசு அதிகாரியாக இல்லாமல் அரசியல்வாதியாக நடந்துக் கொண்டுள்ளார். இவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும். அரசுத்துறைகள் அரசியல் கட்சிகள் ஆகி விடக்கூடாது.

**செய்தி:**

**ஓசூர், ஜுஜுவாடி காசி விஸ்வநாதர் கோயில் நிலத்தில் கிறிஸ்தவ சர்ச் - திருத்தொண்டர் அறக்கட்டளை குற்றச்சாட்டு**

**சிந்தனை**

கோவில் நிலங்களில் சர்சுகள் அல்லது மசூதிகள் கட்டப்படுவது சட்டவிரோதம். இந்த சட்டவிரோத செயல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தமிழக அரசின் ஹிந்து விரோதப் போக்கே இதற்கு காரணம். அரசின் அடக்குமுறையை முறியடிக்கத் தயாராகும் ஹிந்துக்கள்!

# செய்
# சிந்த

**செய்தி:**

**உத்தமபாளையம், காளாத்தீ
செல்ல முஸ்லீம்கள் எதிர்ப்பு**

**சிந்தனை**

பாரம்பரிய ஊர்வலங்கள் ரம்
என்ற போக்கு அடிப்படைவாத
சேர்ந்த இருவரை உத்தம
இஸ்லாமியர்கள் சாதரண ஹி
சொன்னவர்கள் எங்கே?

**செய்தி:**

**அரசு சம்பளம் வா
வேலை - காஜா கன**

**சிந்தனை**

பயங்கரவாத அமை
நிலுவையில் உள்ள
பேச ஜவாஹிருல்
நடத்தை விதிமீறல்
சட்டத்தை ஏன் மதி

# திகள்
# னைகள்

**செய்தி:**

**88 கல்வி நிறுவனங்களுக்கு நிரந்தர சிறுபான்மை சான்றிதழ் வழங்கிய ஸ்டாலின்**

**சிந்தனை**

நிரந்த சான்றிதழ் என்றால் என்ன தப்பு செய்தாலும் சான்றிதழ் ரத்தாகாது. சட்ட மீறலுக்கான லைசென்ஸ் ஹிந்து கல்வி நிறுவனங்களுக்கு கட்டுப்பாடு; சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கு சலுகை. கல்விச் சேவை களத்திலிருந்து ஹிந்துக்களை ஒழிக்கும் சதி

**ஸ்வரர் கோயில் சுவாமி ஊர்வலம்**

ஜான் காலங்களில் நடத்தக்கூடாது
த்தின் உச்சம். ஹிந்து இயக்கங்களைச்
பாளையத்தில் கொன்ற போது
ந்துகளுக்கு எதிரிகள் அல்ல என்று

**செய்தி:**

**வேத மந்திரங்களை கிண்டல் செய்த திமுக எம்.பி. செல்வகணபதி - வலுக்கும் கண்டனங்கள்**

**சிந்தனை**

மஹா கணபதி மந்திரம் புரிகிறதா என்று கேள்வி எழுப்பு செல்வகணபதிக்கு மசூதியில் ஓதுவது புரியுமா? அல்லேலூயா என்பதற்கு பொருள் என்ன என்று கிறிஸ்தவரிடம் கேட்பாரா? ஹிந்து வெறுப்பின் உச்சம். திமுக தலைவர்களின் ஹிந்து துவேஷப் பேச்சு தொடர்கிறது.

**ங்கிக்கொண்டு திமுகவிற்கு**
**ிக்கு வலுக்கும் எதிர்ப்பு**

மப்புகளுக்கு உதவி செய்த புகார்
ா போது திமுகவுடன், கூட்டணி
லாவுடன் சென்று அரசு ஊழியர்
). ஆளுங்கட்சி ஆதரவிருந்தால்
க்க வேண்டும் என்ற திமிர்!

**செய்தி:**

**வடமாநில தொழிலாளர்கள் தான் கஞ்சாவை தமிழகத்திற்கு கொண்டு வருகின்றனர் - தா.மோ அன்பரசன் பேச்சு**

**சிந்தனை**

அதற்காக தான் பிரசாந்த் கிஷோரை அழைத்து வந்தனரா? ஏஜெண்ட்டாக ஸ்டாலின் செயல்பட்டாரா? பாரத் ஜூடோ யாத்ரா என்பதை இந்த வியாபாரத்திற்காக ராகுல் பயன்படுத்தினாரா? இவர்கள் எல்லாம் வடநாட்டுகாரார்கள் தானே! பிரிவினைவாதம்.

# படம் சொல்லும் பாடம்

- தொகுப்பு : சி.பாண்டிக்குமார்






# ஈஷாவில் மஹாசிவராத்திரி

- விக்னேஷ்

ஈஷா மஹாசிவராத்திரி: பாரத பண்பாட்டின் மறுமலர்ச்சி, சர்வதேச ஆன்மீக கொண்டாட்டம்! - மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் புகழாரம் !

கோவை, ஈஷாவில் மஹாசிவராத்திரி விழா (15/02/2025) அன்று வெகு விமரிசையாக நடைபெற்றது. சத்குரு முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உட்பட பல முக்கியப் பிரமுகர்கள் விருந்தினர்களாக கலந்து கொண்டார்.

ஈஷா மஹாசிவராத்திரி விழா தியானலிங்கத்தில் சத்குரு வழிநடத்திய "பஞ்ச பூத க்ரியாவுடன்" தொடங்கியது. முன்னதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், தியானலிங்கம், லிங்கபைரவி சன்னதிகளில் தரிசனம் செய்தார்.

இவ்விழாவில் சத்குரு பேசுகையில், யோகாவின் முழு முயற்சியும், எனது முயற்சியும், ஆதியோகியின் ஆயிரக்கணக்கான ஆண்டுகால முயற்சியும், மக்கள் யாரும் தங்களுக்குத் தாங்களே ஒரு தடையாக இருக்க கூடிய ஒரு பேரழிவாக மாறிவிடக்கூடாது என்பதே.

இந்த உலகில் நீங்கள் எவ்வளவு அதிகமாகச் செய்கிறீர்களோ, அவ்வளவு தடைகளை சந்திப்பீர்கள். ஆனால் மிக முக்கியமான விஷயம், உங்கள் சொந்த வாழ்க்கையில் நீங்கள் ஒரு தடையாக இருக்கக்கூடாது. உங்கள் சொந்த மனம், எண்ணம், உணர்ச்சி மற்றும் ஆற்றல்கள் உங்களுக்கே ஒரு தடையாக மாறாமல் இருப்பதை ஒவ்வொருவரும் உறுதி செய்ய வேண்டும். இதை எளிதாக்குவதுதான் யோகக் கலை.

மனித உடலே ஒரு அதிநவீன வேதியியல் தொழிற்சாலை போன்றது. உங்கள் உடலினை நிர்வாகம் செய்யும் ஒரு சிறந்த சி.இ.ஓ-வாக நீங்கள் இருந்தால், பேரின்பத்தின் வேதிப்பொருட்களை உற்பத்தி செய்வீர்கள். நீங்கள் ஒரு மோசமான நிர்வாகியாக இருந்தால், கவலை, மன அழுத்தம், முட்டாள்தனம் ஆகிய தேவையில்லாத விஷயங்களை உற்பத்தி செய்வீர்கள். இதைச் சரிசெய்யவே ஆதியோகி வந்தார், பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, அவர் 112 முறைகளை வழங்கினார். அதன் மூலம் ஒரு மனிதன் தனது உயர்ந்த சாத்தியத்தை அடைய முடியும்.

ஆதியோகி கடந்த காலத்தைச் சேர்ந்தவர் அல்ல. அவர் எதிர்காலத்தைச் சார்ந்தவர். ஏனெனில் அவர் வழங்கியது வெறும் நம்பிக்கைகளோ, தத்துவங்களோ, கோட்பாடுகளோ அல்லது போதனைகளோ அல்ல. அவை மனித நல்வாழ்விற்கான தொழில்நுட்பங்கள். வரலாற்றில் முதல் முறையாக, சொர்க்கத்தின் மீதான நம்பிக்கையை விட தொழில்நுட்பத்தின் மீதான நமது நம்பிக்கை அதிகரித்துள்ளது. எனவே, ஆதியோகி வருங்கால தலைமுறைக்கு உரியவர்.

மேல்நோக்கிப் பார்க்காமல், உள்நோக்கிப் பார்ப்பதுதான் ஒரே வழி. இது மதத்திலிருந்து பொறுப்புணர்வை நோக்கிய ஒரு பயணம். மதம் என்பது துரதிர்ஷ்டவசமாக பொறுப்புகள் எங்கோ மேலே இருப்பதாக மக்களை நம்ப வைக்கிறது. ஆனால், நமது கலாச்சாரம் எப்போதும் 'கர்மா' பற்றியே பேசுகிறது.

கர்மா என்றால் 'நமது செயல்' அல்லது 'நமது உருவாக்கம்' என்று பொருள். உங்கள் வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பது உங்கள் கையில்தான் உள்ளது. நீங்கள் உங்களை எப்படிச் செதுக்கிக் கொள்கிறீர்கள் என்பதே உங்கள் வெற்றி. இந்த உண்மையை உலகுக்கு உணர்த்தியவர் ஆதியோகி." எனக் கூறினார்.

**"பவ்ய பாரத் பூஷன்" விருதுகள்**

ஈஷா மஹாசிவராத்திரி விழாவில் இந்தாண்டு முதல் நாட்டின் வளர்ச்சிக்கு பங்களித்த சாதனையாளர்களை அங்கீகரிக்கும் வகையில் பவ்ய பாரத் பூஷண் என்ற பெயரில் விருதுகள் வழங்கப்படும் என சத்குரு அறிவித்தார்.

அந்த வகையில் இந்தாண்டு விருதுகள் வயலின் கலைஞர் டாக்டர் என்.ராஜம், பரதநாட்டிய கலைஞர் அலர்மேல்வள்ளி, விண்வெளி விஞ்ஞானிகள் நம்பி நாராயணன், கிரண் குமார், வரலாற்றாசிரியர் விக்ரம் சம்பத், பேட்மிட்டன் வீராங்கனை சாய்னா நேவால், ஆப்ரேஷன் சிந்தூரில் பங்காற்றிய ராணுவ வீரர்களை அங்கீகரிக்கும் வகையில் ஏர் மார்ஷல் ஜித்தேந்திர மிஷ்ரா, கடற்படை தலைமை அதிகாரி ராகுல் விலாஸ், ராணுவ அதிகாரி ராத்தே உள்ளிட்டோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன. ஆதியோகி திருவுருவம் பதித்த விருது பதக்கங்களை அமைச்சர் ராஜ்நாத் சிங் வழங்கினார்.

இவ்விழாவில் ராஜ்நாத் சிங் பேசுகையில், "நான் காசியில் இருந்து வருகிறேன். காசிக்கும் தமிழ்நாட்டுக்கும் இருக்கும் தொடர்பு மிகவும் பழமையானது. காசி உலகின் மிகப் பழமையான நகரங்களில் ஒன்று என்றால், தமிழ் பண்பாடோ உலகின் மிகப் பழமையானது. மொழி, பண்பாடு, சமையல் கலை போன்ற பற்பல அம்சங்களில் தமிழ்நாடு நம் வரலாற்றில் வளமான இடத்தை



வகிக்கிறது.

சத்குருவின் வழிகாட்டுதலில் ஈஷாவில் நிகழும் மஹாசிவராத்திரி விழா இன்று சர்வதேச அளவிலான ஆன்மீக கொண்டாட்டமாகவும், பாரத தேசத்தின் பண்பாட்டு மறுமலர்ச்சியின் புதிய பிரகடனமாகவும் விளங்குகிறது.

பாதுகாப்பு என்பது வெறும் வெளிச்சக்திகள் சார்ந்தது மட்டுமல்ல, அது வலிமைமிக்க தேசிய உணர்விலிருந்து வருவது. அச்சம் இல்லாத சமுதாயத்தால் தான் வலிமையான தேசத்தை உருவாக்க முடியும். இந்த அச்சமின்மை ஆன்மீக அடிப்படையில் இருந்துதான் வரும். பாதுகாப்புக்கும் அழிவுக்கும் அடையாளமாக விளங்கும் சிவபெருமானைப் போலவே, நம்முடைய படை வீரர்களும் தங்களுக்குள் அச்சமற்ற தன்மையையும், பொறுமையையும் கொண்டு தேசத்தைக் காக்கிறார்கள்.

மனித குலம் மன அழுத்தத்துக்கும் பதட்டத்துக்கும் ஆளாகிற இந்த காலத்தில் சிவபெருமானின் சாரம் முக்கியத்துவம் பெறுகிறது. எவ்வளவோ இரைச்சல்களுக்கு நடுவிலும் எப்படி சமத்தன்மையோடு இருப்பது என்பதற்கான அடையாளமே சிவபெருமான். இந்த சாரத்தை சத்குரு மனித குலத்திற்கு முன் கொண்டு வந்து, ஆன்மிகத்தை ஒரு விஞ்ஞானமாக முன் வைக்கிறார். ஈஷா அறக்கட்டளை இன்னர் இன்ஜினியரிங் போன்ற முன்னெடுப்புகள் மூலம் நவீன முறையில் மக்களிடம் ஆன்மீகத்தை கொண்டு சேர்க்கிறது.

ஈஷா ஹோம் ஸ்கூல் குழந்தைகளை சந்திக்கிற வாய்ப்பு கிடைத்தது. ஆன்மீகத்திலும் விஞ்ஞானத்திலும் இளம் இதயங்களை ஈஷா எப்படி வடிவமைக்கிறது என்பதை பார்த்து மிகவும் மகிழ்ந்தேன்.'' எனக் கூறினார்.

தொடர்ந்து இரவு முழுவதும் நடைபெற விழாவில் சத்குரு வழிநடத்திய

**உங்கள் வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பது உங்கள் கையில்தான் உள்ளது. நீங்கள் உங்களை எப்படிச் செதுக்கிக் கொள்கிறீர்கள் என்பதே உங்கள் வெற்றி.**

சக்திவாய்ந்த தியானங்கள், மந்திர உச்சாடனைகள், யோகேஷ்வர லிங்க மஹா அபிஷேகம் மற்றும் தலைசிறந்த கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகள் உட்பட பல்வேறு அம்சங்கள் இடம்பெற உள்ளன.

இவ்விழாவில் பங்கேற்கும் மக்கள் இரவு முழுவதும் விழிப்பாக இருக்க உதவும் வகையில் ராப் இசைக்கலைஞர் பிளேஸ், குஜராத் நாட்டுப்புறக் கலைஞர் ஆதித்யா காத்வி, தபேலா இசைக் கலைஞர் பிரசாந்த் சோனாக்ரா, ராஜஸ்தான் நாட்டுப்புறக் கலைஞர் ஸ்வரூப் கான், ராப் இசைக்கலைஞர் பாரடாக்ஸ் மற்றும் சவுண்டஸ் ஆப் ஈஷா குழு ஆகியோர் இசை நிகழ்ச்சிகளை வழங்கினர்.

இதனுடன் "புராஜக்ட் சம்ஸ்கிருதி' குழுவின் சிறப்பு நாட்டிய நிகழ்ச்சியும், ஈஷா சம்ஸ்கிருதி பள்ளி மாணவர்களின் தேவார பண்ணிசை மற்றும் களரிப்பயட்டு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

**சிறப்பு விருந்தினர்கள்**

இவ்விழாவில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், மஹாராஷ்டிர முதல்வர் தேவேந்திர பட்னவிஸ், மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், புதுச்சேரி உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், முன்னாள் அமைச்சர் எஸ்,பி. வேலுமணி, பிரமேலதா விஜயகாந்த், மக்களவை உறுப்பினர் சுரேஷ் கோபி, முன்னாள் கிரிக்கெட் வீரர் வெங்கடேஷ் பிரசாத், துரந்தர் பட நடிகை சாரா, கேஜிஎப் ஸ்ரீநிதி ஷெட்டி உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் மற்றும் லட்சக்கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் மஹா அன்னதானம் வழங்கப்பட்டது.

# பொருளாதாரம்

கோ. ரமேஷ், பொருளாதார நிபுணர்.




### டிரெண்ட் லைன் வகைகள்

தொழில்நுட்ப ஆய்வில் (டெக்னிக்கல் அனாலிசிஸ்) 'டிரெண்ட் லைன்'(Trend Line) என்பது மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது.

இந்த 'டிரெண்ட் லைன்' எப்படி உருவாகிறது என்று பார்ப்போம்.

'டிரெண்ட் லைன்' என்பது ஒரு நேர் கோட்டின் மூலம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விலைப் புள்ளிகளை (Price Points) இணைத்து நீட்டுவது, இதன் மூலம் குறிப்பிட்ட பங்கு, இறங்குமுகத்தில் (Down Trend) இருக்கிறதா அல்லது ஏறுமுகத்தில் இருக்கிறதா (Up Trend) என்பதை அறிந்துக் கொள்ள முடியும்.

இந்த டிரெண்ட் லைன் இரு வகைப்படும்.

### டவுண் டிரெண்ட் லைன்

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உயர் விலைப் புள்ளிகளை(High Price Points) இணைப்பது மூலம் உருவாக்கப்படுகிறது. இவ்வாறு வரையும் நேர் கோடு என்பது முதல் புள்ளியின் விலையை விட இரண்டாவது புள்ளியின் விலை குறைவாக இருக்க வேண்டும். அப்படி இருப்பதால் நேர் கோடு கீழ் நோக்கி(Negative Slope) உருவாகி இருக்கும்.

இந்த நிலையில், பங்கை விற்பவர்களின்(Supply) எண்ணிக்கை அதிகமாகவும், வாங்குபவர்களின் (Demand) எண்ணிகை குறைவாக இருப்பதாலும் இதை 'கரடி சந்தையின் போக்கு' (Bearish Trend) என்கிறோம்.

சுருக்கமாகச் சொல்வது என்றால், ஒரு நாளின் அதிகபட்ச விலையை விட, அடுத்த நாளின் அதிகபட்ச விலை குறைவாகவும், ஒரு நாளின் குறைந்தபட்ச விலையை விட, அடுத்த நாளின் குறைந்தபட்ச விலை குறைவாகவும் இருக்கிறது என்றால் பங்கின் விலை இறங்கும் டிரெண்டில் உள்ளது என்கிற முடிவுக்கு வரலாம்.

### அப் டிரெண்ட் லைன்

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குறைந்த விலைப் புள்ளிகளை(Low Price Points) இணைப்பது மூலம் உருவாக்கப்படுகிறது. இவ்வாறு வரையும் நேர் கோடு என்பது முதல் புள்ளியின் விலையை விட இரண்டாவது புள்ளி விலை அதிகமாக இருக்க வேண்டும். அப்படி இருப்பதால் நேர் கோடு மேல் நோக்கி (Positive Slope)உருவாகி இருக்கும்.

இந்த அப் டிரெண்ட் நிலையில், பங்கை விற்பவர்களின் (Supply)எண்ணிக்கை குறைவாகவும், வாங்குபவர்களின் (Demand)எண்ணிகை அதிகமாகவும் இருக்கும். இதனால், இதை 'காளை சந்தையின் போக்கு'(Bullish Trend)என்கிறோம்.

சுருக்கமாகச் சொல்வது என்றால், ஒரு தினத்தின் அதிகபட்ச விலையை விட, அடுத்த தினத்தின் அதிகபட்ச விலை அதிகமாகவும், ஒரு தினத்தின் குறைந்தபட்ச விலையை விட, அடுத்த தினத்தின் குறைந்தபட்ச விலை அதிகமாகவும் இருக்கிறதென்றால் பங்கின் விலை ஏறும் டிரெண்டில் உள்ளது என்கிற முடிவுக்கு வரலாம்.

### டிரெண்ட் லைன் கற்பிக்கும் பாடங்கள்

டிரெண்ட் லைன் நமக்கு சொல்லித் தரும்



மற்றுமொரு முக்கிய விஷயம். எந்த சூழ்நிலையில் பங்குகளை வாங்குவது அல்லது விற்பதாக இருக்கிறது.

இதை ஓர் சான்று மூலம் பார்த்தால் எளிதில் விளங்கும்.

ஒரு பங்கின் விலை சார்ட்டை (இந்த சார்ட் எப்படி என்பது பற்றிய விவரம் பின்னால்




வருகிறது) எடுத்துக் கொண்டு அதில் டிரெண்ட் லைனை வரைந்துக் கொள்ளுங்கள். சார்ட்டின் படி, அது இறங்கும் போக்கில் (டவுண் டிரெண்ட்) ஆக இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அந்த நிறுவனப் பங்கின் விலை விலை இப்போது 200 ரூபாயாக இருக்கிறது. இப்போது விற்பனை செய்து விட்டு, சிறிது காலம் கழித்து 180 ரூபாய்க்கு இறங்கி வரும் போது வாங்கலாம் என்று முடிவு செய்து வைத்திருக்கிறீர்கள். இறங்கும் போக்கு என்கிற கணிப்பு தவறி, பங்கின் விலை ஏறிவிட்டால் என்ன நடக்கும்? உங்கள் கணிப்பு சரியாக இருந்தால் 20 ரூபாய் லாபம் கிடைத்திருக்கும். மாறாக இருக்கும்பட்சத்தில் பங்கின் விலை 210 ரூபாய், 220 ரூபாய் என எந்த அளவுக்கு ஏறுகிறதோ அந்த அளவு ஏறட்டும் என்று விட்டு விடமுடியுமா?

ஷார்ட் போன விலையான 200 ரூபாய்க்கு மேல் நடக்கும் ஒவ்வொரு ரூபாய் ஏற்றமும் உங்களுக்கு நட்டமாக அமைந்துவிடும். அந்த வகையில் உங்களின் கணிப்புக்கு எதிராக பங்கின் விலை ஏற தொடங்கினால் எவ்வளவு நட்டத்தில் அந்த நிலையை (பொசிஷன்) விட்டு வெளியே வரவேண்டும் என்று முடிவு செய்து வைத்திருப்பது அவசியம்.

நீங்கள் 20 ரூபாய் லாபம் எதிர்பார்க்கும் நிலையில் 10 ரூபாய் நட்டப்படத் தயாராக இருப்பீர்கள் தானே?. அப்படி என்றால், நீங்கள் ஷார்ட் போன அந்தப் பங்கின் விலை 210 ரூபாயைத் தொட்டவுடன் வாங்கி,




பொசிஷனை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். இதை இங்கே 'இழப்பு தடுப்பு' (ஸ்டாப் லாஸ்) என்கிறோம்.

டிரெண்ட் லைனை ஒட்டி விலை இருக்கும் போது பங்கின் விலை நிலைமை பலவீனமாக (weak) இருந்தால் நிச்சயமாக ஷார்ட் போகலாம்.

டிரெண்ட் லைனைத் தாண்டி மிகவும் வேகமாக நேர் குத்தாக பங்கின் விலை கீழே இறங்கும் போது ஷார்ட் போகவே கூடாது.

பங்கின் விலை திடீரென வேகமாக இறங்கி, டிரெண்ட் லைன் மிக அதிக உயரத்தில் இருக்கும்போது வர்த்தகம் ஏதும் செய்யாமல் பொறுமையாக, சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

திடீரென்று டிரெண்ட் லைனைத் தாண்டி வேகமாக பங்கின் விலை ஏறினாலும் பொறுமை காக்க வேண்டியது மிக அவசியம். பல நேரங்களில், பங்குச் சந்தையில் இதுப் போன்ற பொறுமையை கடைபிடிப்பது மற்றும் சும்மா வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பது தேவையில்லாத நட்டத்தைத் தவிர்க்க பெரிதும் உதவிகரமாக இருக்கும்.

**"டிரெண்ட் லைன்" என்பது ஒரு நேர் கோட்டின் மூலம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விலைப் புள்ளிகளை இணைத்து நீட்டுவது, இதன் மூலம் குறிப்பிட்ட பங்கு, இறங்குமுகத்தில் இருக்கிறதா அல்லது ஏறுமுகத்தில் இருக்கிறதா என்பதை அறிந்துக் கொள்ள முடியும்.**

# வெற்றியும் தோல்வியும்
# சைனாவில் ஒலித்த இந்திய தேசிய கீதம்

**- வெங்கட் பிரசாத், D.**
அரசியல் மற்றும் விளையாட்டு ஆய்வாளர்

**ஆசிய உள்ளரங்க சாம்பியன்ஷிப்**

12வது ஆசிய உள்ளரங்க சாம்பியன்ஷிப் சைனாவின் தியான்ஜின் நகரில் பிப்ரவரி 6 முதல் 8 வரை நடைபெற்றது. இதில் ஹெப்டத்லான் எனப்படும்,



1. 60 மீட்டர் அதிவேக ஓட்டம்,
2. நீளம் தாண்டுதல்
3. உயரம் தாண்டுதல்
4. குண்டு எறிதல்,
5. 60m தடை தாண்டுதல்
6. கோலூன்றிப் பாய்தல்
7. 1000m மாரத்தான்

ஆகிய ஏழு போட்டிகள் அடங்கிய விளையாட்டில், இந்தியாவின் தேஜஸ்வினி சங்கர் 5993 புள்ளிகளைப் பெற்று தங்கம் வென்றதால், சீன மண்ணில் இந்திய தேசிய கீதம் ஒலித்தது. இது தேசபக்தர்களை மெய்சிலிர்க்க வைத்தது. மேலும் குண்டு எறிதல் போட்டியிலும் வெள்ளிப் பதக்கத்தை உரித்தாக்கினார் தேஜஸ்வினி. பெண்கள் உயரம் தாண்டுதலில் பூஜா சிங் வெள்ளியும், ஆண்கள் உயரம் தாண்டுதலில் ஆதர்ஷ் ராம் வெங்கலமும், பெண்கள் நீளம் தாண்டுதலில் ஆண்சி சோஜன் வெங்கலமும் வென்றதால் 5 பதக்கங்களுடன் இந்தியா, தரவரிசையில் 6வது இடத்தில் முடித்தது.

கிரிக்கெட், பேட்மிட்டன், செஸ் போட்டிகளில் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு ஆர்வமூட்டி பயிற்சி தருவது போல் மற்ற போட்டிகளிலும் தரத் தொடங்கினால் இந்தியா இன்னும் அதிக மெடல்களை வெல்லவல்லது.

**அசத்திய ஜம்மு காஷ்மீர் அணி:**

இந்தியாவில் உள்ள நாட்டு அணிகளின் மிகப்பெரிய கௌரவமான ரஞ்சி டிராபியை முதல் முறையாக வென்று சரித்திரம் படைத்துள்ளது ஜம்மு காஷ்மீர் அணி. அணித்தலைவர் பரஸ் டோக்ராவின் நேர்த்தியான தலைமை, கொம்ரான் இக்பாலின் மிகச்சிறந்த தொடக்க ஆட்டம், தொடரின் நாயகன் அக்யூப் நபியின் 60 விக்கெட்டுகள் வீழ்த்திய அபாரமான பந்துவீச்சு மேலும் அணியின் ஒன்றுபட்ட செயல்பாட்டினால் பல வருடங்களாக யுத்தங்களையும் கட்டுமானமற்ற நிலையும் கண்ட ஜம்மு காஷ்மீர் இம்முறை சரித்திரம் படைத்துள்ளது. ஜம்மு காஷ்மீர் என்றும் இந்தியாவின் தலைசிறந்த பாகமே என்பதை அழுத்தம் திருத்தமாக பதிவிட்ட இந்த வெற்றியை இன்று எதிரணியாக விளையாடிய கர்நாடகா முதற்கொண்டு இந்தியாவே பெரும் ஆரவாரத்துடன் கொண்டாடியது.

**சூடு பிடித்த டி20 உலக கோப்பை**

அகமதாபாத்தில் நடைபெற்ற இந்திய தென்னாப்பிரிக்க டி20 போட்டியில் இந்தியா 78 ரன்கள் வித்தியாசத்தில் தோற்றதால், அரையிறுதிக்கான தேர்ச்சியே சவாலாகிப் போன நிலையில் இந்தியா சார்பாக இருக்கும் என்று நினைக்கப்பட்ட டி20 உலகக்கோப்பை சூடு பிடித்தது. ஒருபுறம் தென்னாப்பிரிக்கா மேற்கிந்திய தீவுகள் அணியினை வீழ்த்த, இந்தியா ஜிம்பாப்வே அணியினை 72 ரன்கள் வித்தியாசத்தில் சென்னை விளையாட்டு மைதானத்தில் தோற்கடிக்க குதிரையை போல் சட்டு என்று வீழ்ச்சியிலிருந்து மீண்டது இந்தியா.

**காலிறுதிக்கு சமமான போட்டி**

மேற்கிந்திய தீவுகள் அணி வான்கடேவில் கடைசி மூன்றுப் போட்டிகளையும் அதிரடியாக வென்றிருக்கும் நிலையிலும், அதற்கு சற்றும் குறையாமல் இந்தியாவும் இந்த மைதானத்தில் ஆதிக்கம் செலுத்தியுள்ளது. டி20 உலகக் கோப்பைத் தொடர்களில் மேற்கிந்திய தீவுகள் நாக் அவுட் போட்டியில் இந்தியாவை அதிக அளவு வென்றிருந்தாலும், தற்போது உள்ள அணியின் நிலைப்படி ஹெட்மயர் மற்றும் போவெல் விக்கெட்டை இந்தியா திட்டமிட்டு குறைந்த ரன்களில் வீழ்த்தினால் இந்த அணியை 140 ரன்களுக்குள் கட்டுப்படுத்தி சுலபமான வெற்றியைப் பெற முடியும்.

முதலில் பேட் செய்ய நேர்ந்தால் முதல் மூன்று ஓவர்களை பவுண்டரிகள் அடித்து பிறகு சிக்ஸர்கள் தொடங்கினால் இந்தியா வெற்றி பெறுவது உறுதி

2024 போலவே இந்தியா அரை இறுதியில் இங்கிலாந்தை வீழ்த்தி, இறுதிப்போட்டியில் தென்ஆப்பிரிக்காவை வீழ்த்தி t20 உலகக்கோப்பையை முதல் முறையாக தக்க வைத்துக் கொள்ளும் என்பதே நமது நம்பிக்கையும் கணிப்பும்.

# சங்கத் தமிழில் சனாதனம்

— பத்மன்



## அத்தியாயம் 6 : வேற்றுப் பண்பாடா வேதம்?

வேதம் என்பது பழந்தமிழர்களோடு தொடர்பில்லாத ஆரியப் பண்பாடு என்றும், பிற்காலத்தில் தமிழர்கள் மீது புகுத்தப்பட்டது என்றும் கூறுவது திராவிட இயக்கங்கள் திரிக்கும் வழக்கமான சரடுகளில் ஒன்று. ஆனால், பாரதப் பண்பாடான வேதமும் வேள்வியும் பழந்தமிழர்களின் பண்பாடும்கூட என்பதைச் சங்க இலக்கியங்களும் இலக்கண நூலான தொல்காப்பியமும் பறை சாற்றுகின்றன.

“வேதம் நிறைந்த தமிழ்நாடு” என்று மகாகவி பாரதி, வெறும் வார்த்தைஜாலமாகக் கூறிவிடவில்லை, உண்மையை உணர்ந்து கூறியிருக்கிறார். சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த செந்தமிழ்ப் பண்பாட்டுத் தலைநகரமான பழம்பெரும் மதுரை, தினந்தோறும் வேதம் ஓதுகின்ற ஒலியோடுதான் விடியலைக் கண்டது என்பதை மதுரைக்காஞ்சி வர்ணித்துள்ளது.

போது பிணிவிட்ட கமழ்நறும் பொய்கைத்
தாதுஉண் தும்பி போது முரன்றாங்கு,
ஓதல் அந்தணர் வேதம் பாட,
சீர்இனிது கொண்டு, நரம்புஇனிது இயக்கி,
யாழோர் மருதம் பண்ண,
..... ...... ..... ........ ........
இரவுத் தலைப்பெயரும் ஏம வைகறை
*(ம.கா. 654-658, 686)*

“குளத்தில் நறுமணம் கமழ்ந்து விரிந்த பூக்களில் உள்ள மகரந்தத் தாதுக்களில் உருவான தேனை உண்ட தும்பி எழுப்பிடும் ஓசையைப் போல, வேதம் ஓதுகின்ற அந்தணர்கள் இனிய ஒலியோடு வேதத்தைப் பாடினர். சீர் எனப்படும் தேவையான ஸ்ருதிக்கு ஏற்ப யாழின் நரம்பை இனிமையாகச் சரிசெய்தபடி இசைக் கலைஞர்கள் மருதப் பண்ணில் யாழை மீட்டினர். இவ்வாறாக, இரவின் இருள் கழிந்து பாதுகாப்பான விடியல் தோன்றியது” என்பது இதன் பொருள். வேத கோஷத்தோடு துயில் எழுவதுதான் பாதுகாப்பான விடியல் என்கிறது மதுரைக்காஞ்சி.

இதே தகவலை பரிபாடல் புறத்திரட்டில் இடம்பெற்றுள்ள ஏழாம் பாடல் உறுதி செய்வதோடு, செந்தமிழ்த் தலைநகரம் மதுரையை வேதம் உரைத்த பிரம்மதேவன் பிறந்த திருமாலின் தொப்புள் தாமரையோடு ஒப்பிடுகிறது.

மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீர்ஊர்; பூவின்
இதழகத்து அனைய தெருவம்; இதழகத்து
அரும்பொகுட்டு அனைத்தே அண்ணல் கோயில்;
தாதின் அனையர் தண்தமிழ்க் குடிகள்;
தாதுஉண் பறவைஅனையர் பரிசில் வாழ்நர்;
பூவினுள் பிறந்தோன் நாவினுள் பிறந்த
நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப
ஏம இன் துயில் எழிதல் ........
*(பரி. புற.திர. 7)*

“எமது அழகிய மாநகரமான மதுரை, திருமாலின் தொப்புளில் மலர்ந்த தாமரைப் பூவுக்கு நிகரானதாகும். மதுரையின் தெருக்கள், அந்தத் தாமரைப் பூவின் இதழ்களுக்கு ஒப்பானவையாகும். அந்த இதழ்களுக்கு நடுவே அமைந்துள்ள அருமையான பொகுட்டைப் போன்றது, எமது வேந்தனின் அரண்மனை, அந்த அரண்மனையைச் சுற்றிலும் வாழ்கின்ற குளிர்ச்சி பொருந்திய தமிழைப் பேசும் குடிமக்கள், தாமரைப் பூவில் உள்ள மகரந்தத் தாதுக்களுக்கு ஒப்பானவர்கள். மன்னனை நாடி வந்து பரிசில் பெற்று வாழ்கின்ற இரவலர்கள், பூவின் தாதுக்களை உண்கின்ற பறவைகளைப் போன்றவர்கள். இத்தகைய பெருமை பொருந்திய எமது மதுரை, திருமாலின் தொப்புள் தாமரையிலே தோன்றிய பிரம்மதேவனின் நாவினில் இருந்து பிறந்த நான்கு வேதங்களை அந்தணர்கள் இனிய குரலில் பாடுவதால் ஏற்படும் ஒலியைக் கேட்டு, தினந்தோறும் இனிய உறக்கத்தில் இருந்து விழித்தெழுகிறது” என்று இதற்குப் பொருள். தமிழ்க்குடிமக்கள் வேத வாழ்வைக் கடைபிடித்து வாழ்ந்தார்கள் என்பதற்கு இதைவிட வேறு சிறந்த எடுத்துக்காட்டு என்ன வேண்டும்?

செந்தமிழைக் காப்பாற்றியதுபோல் வேதத்தைக் காப்பாற்றும் கடமையையும் மதுரை கொண்டிருந்தது, அதன் மன்னர்களான பாண்டியர்கள் இக்கடமையைச் செவ்வனே நிறைவேற்றினர் என்பதால்தான் வேத ஒலியுடன் விடியலைக் காண்கிறது எங்கள் ஊர் மதுரை என்று புலவர் மாங்குடி மருதனார் பெருமிதத்துடன் கூறியுள்ளார்.

தமிழ் இலக்கியம் வளர்த்த பாண்டிநாட்டுக்குத் தமிழ்க் கலைகளை வளர்த்த சோழநாடு சளைத்ததா என்ன? அங்கும் வேதநெறி வாழ்க்கைச் செழித்து இருந்ததை **பட்டினப்பாலை** பகர்கிறது. முற்காலச் சோழர்களின் தலைநகரமாக இருந்த பூம்புகார் எனப்படும் காவிரிப்பூம்பட்டினத்தில், வேதங்களை அறிந்த அறிஞர்கள் வாழும் இல்லங்களின் மீது, பிற அறிஞர்களைத் தத்துவ விவாதத்துக்கு அழைப்பதைக் குறிக்கும் கொடிகள் பறந்தன என்பதை நூலாசிரியர் உருத்திரங்கண்ணனார் எடுத்துரைத்துள்ளார்: "**பல் கேள்வித் துறை போகிய, தொல் ஆணை நல் ஆசிரியர், உறழ் குறித்து எடுத்த உருகெழு கொடியும்**" (பட். 169-171) என்பன அப்பாடல் வரிகள்.

"வேதத்தின்பல்வேறுதுறைகளைநன்குஆராய்ந்து முழுமையாகக் கற்றதால், தனது கொள்கையை நிலைநாட்டுவதில் மிகுந்த அதிகாரத்தைப் பெற்றுள்ள சிறந்த ஆசிரியர் (ஆசார்யர்) வாதம் செய்வதற்காக தனது இல்லத்தின் வாசலில் கட்டிவைத்த அச்சம் தரத்தக்க கொடியும்" என்று இதற்குப் பொருள். கேள்வி என்றால், அக்காலத்தில் செவிகளால் கேட்டு மனப்பாடம் செய்யப்பட்ட ஸ்ருதி எனப்படும் வேதம் ஆகும். அதிலே பல்வேறு தத்துவ உட்பிரிவுகள் இருப்பதைத் துறை என்ற சொல் உணர்த்துகிறது. தொல் ஆணை என்றால் பழைமையான ஆணை என்று பொருள். குறிப்பிட்ட துறையில் மிகுந்த புலமை பெற்றவரின் பேச்சிலே ஓர் உறுதிப்பாடு இருக்கும். ஆணை என்பது எவ்வாறு மாற்ற இயலாததோ, அதைப்போல அவர் கூறிய சொல்லும் மாற்ற இயலாதது, அதுவே இறுதியானது என்ற வகையில் அனைத்துக் கோணங்களிலும் அலசி ஆராய்ந்து முடிவான கருத்தைக் கூறுவதற்கு ஆணை என்று பெயர். கேள்வி கேட்டால் நரகம் என்று சனாதனம் அச்சுறுத்துவதில்லை. நன்கு பகுத்தறிந்து உண்மையை அறிவதே மெய்யறிவு என்றுதான் வலியுறுத்துகிறது.

**செந்தமிழைக் காப்பாற்றியதுபோல் வேதத்தைக் காப்பாற்றும் கடமையையும் மதுரை கொண்டிருந்தது, அதன் மன்னர்களான பாண்டியர்கள் இக்கடமையைச் செவ்வனே நிறைவேற்றினர் என்பதால்தான் வேத ஒலியுடன் விடியலைக் காண்கிறது எங்கள் ஊர் மதுரை என்று புலவர் மாங்குடி மருதனார் பெருமிதத்துடன் கூறியுள்ளார்**

இதே பட்டினப்பாலையில், பூம்புகார் நகரில் வாழ்ந்தவணிகர்களும்வேதவாழ்வுக்குஉறுதுணையாக வாழ்ந்தனர் என்பதும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது: "கொலை கடிந்தும் களவு நீக்கியும், அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும், நல் ஆனொடு பகடு ஓம்பியும், நான் மறையோர் புகழ் பரப்பியும்" (பட். 199-202). "கொலைத்தொழிலும், களவும் நாட்டில் இருந்து நீங்கும்படியாகச் செய்தும், வேதத்தில் கூறப்படும் தேவர்களை வழிபட்டும், அவர்களுக்கு உரிய வேள்விகளைச் செய்து அவிர்பாகம் எனப்படும் ஆவுதிகளை வழங்கியும், நல்ல பசுக்களோடு காளைமாடுகளைப் பாதுகாப்பாகப் பராமரித்தும், நான்மறை எனப்படும் வேதத்தை ஓதுவோரின் புகழைப் பரப்பியும் வணிகர்கள் வாழ்ந்தனர்" என்பது இதன் பொருள்.

தொல்காப்பியர் இயற்றிய பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம், நிலந்தரு திருவில் பாண்டியன் அரசவையில், நான்கு வேதங்களையும் நன்கு அறிந்த அதங்கோடு என்ற ஊரில் பிறந்தவரான தமிழ் ஆசான் முன்புதான் அரங்கேற்றம் செய்யப்பட்டது என்பதை, தொல்காப்பியத்துக்கு முன்னுரை போன்று, புலவர் பனம்பாரனார் அளித்திருக்கும் அதன் சிறப்புப் பாயிரம் செப்புகிறது.

"**நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து அறங்கரை நாவின் நான்மறை முற்றிய அதங்கோட்டு ஆசாற்கு அரில்தபத் தெரிந்து**" என்பன அப்பாயிர வரிகள். அக்காலத்துச் சேரநாட்டில் இருந்த இந்த அதங்கோடு என்பது, தற்காலத்துக் கேரள மாநிலத்தில் இருக்கும் திருவிதாங்கோடு எனப்படும் திருவாங்கூர் ஆகும். அறங்கரை நாவின் என்பதற்கு, அறத்தை எடுத்துரைப்பதில் கரைகண்ட நாவினை உடையவர் என்று பொருள். அத்தகைய அதங்கோட்டு ஆசான், நான்மறை முற்றியவர்- அதாவது நான்கு வேதங்களையும் ஐயம் திரிபற நன்கு அறிந்தவர். இரண்டு வேதங்களை அறிந்தவர்களைத் துவிவேதி என்றும் மூன்று வேதங்களை அறிந்தவர்களை திரிவேதி என்றும் நான்கு வேதங்களை நன்கறிந்தவர்களை சதுர்வேதி என்றும் அழைப்பது வழக்கம். அவ்வகையில் அதங்கோட்டு ஆசான் என்ற தமிழாசிரியர், சதுர்வேதியாகவும் திகழ்திருக்கிறார். அவரது ஒப்புதலுடன்தான் தொல்காப்பிய நூல் அரங்கேற்றம் நிகழ்ந்துள்ளது என்றால், பழந்தமிழர் வாழ்க்கையில் தமிழும் வேதமும் எவ்விதம் இரண்டறக் கலந்திருந்தன என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும்.

அப்படியா? என்று கேட்போருக்கு அடுத்தடுத்து ஆதாரங்களை மேலும் அடுக்குவோம்.

(தொடரும்)

# நமக்கான USER MANUAL




இரா. முகுந்த கிருஷ்ணன்,
Wellness Centre for Yoga & Holistic Yogic Healing.

## தோலும் ஜனனேந்திரியமும் பகுதி 2 - தோலைப் பற்றிய சில உண்மைகள்

நமது உடலில் கணக்கற்ற அங்கங்கள் இருக்கின்றன. Hangerகளில் சட்டையை தொங்கவிடுவது போல் அங்கங்கள் அனைத்தும் முதுகெலும்பிலும் விலா எலும்புகளிலும், தோள்பட்டை எலும்பிலும் தொங்குகின்றன. தலையிலிருந்து கால்விரல் நுனி வரை இத்தனை அங்கங்களையும் எலும்புகளையும் ஒன்றை மற்றொன்றோடு இணைப்பதற்காக ஆயிரக்கணக்கான தசைகளும், நரம்புகளும் இயங்குகின்றன. அத்தனைக்குள்ளும் உயிரைப் பாய்ச்சுவதற்காக லட்சக்கணக்கான ரத்தக்குழாய்கள் இருக்கின்றன. குறைந்தது 5லிருந்து 7 லிட்டர் ரத்தத்தை ஒரு நிமிடத்திற்குள் 50 முதல் 90 தடவை உடல் முழுவதும் அனுப்பி, மீண்டும் இழுத்து சேகரித்து, சுத்தீகரிக்கும் வேலையை நமது இதயமும் நுரையீரலும் செய்கின்றன. இதைத்தான் இதயத்துடிப்பு என்கிறோம். நாக்கு, பற்கள், உணவுக்குழாய், இரைப்பை, கல்லீரல், பித்தப்பை, கணையம், மண்ணீரல், சிறுகுடல், பெருங்குடல் ஆகிய அனைத்துமே உணவோடு சம்பந்தப்பட்டவைதான். இந்த உறுப்புகள் அனைத்தும் தத்தமது வேலைகளை சீராக செய்தால் தான் உண்ட உணவு ஜீரணித்து உடலில் பலமும் சக்தியும் ஆரோக்கியமும் பெருகும். கழிவுப்பொருளான மலம் பெருகுடல், மலக்குடல் வழியாக வெளியேற்றப்படுகிறது. தேவையில்லாத உப்புநீரும் சிறுநீரகங்கள் மூலமாக பிரிக்கப்பட்டு மூத்திரப்பையில் சேகரிப்பட்டு ஆண்குறி அல்லது பெண்குறி வழியாக மூத்திரமாக வெளியேற்றப்படுகின்றது.

இப்போது ஒரு கற்பனை செய்து பார்ப்போம். மேலே குறிப்பிடப்பட்ட அங்கங்களின் இயக்கங்கள் அனைத்தும் வெளியே இருந்து பார்த்தால் தெரியும் விதமாக, சிலவகை மீன்களுக்கு இருப்பதுபோல், வெளிப்படையான கண்ணாடி போன்ற ஒரு தோல் அமைப்புநமக்கு இருப்பதாகநினைத்துக்கொள்வோம். அதாவது மற்றவர்களை ஆடையின்றி நிர்வாணமாக கற்பனை செய்யச்சொல்லவில்லை. தோலே இல்லாமல் கற்பனை செய்து பார்க்கவேண்டும். அப்போது நாம் சாப்பிட்ட உணவு கூழாக மாறுவது மற்றவர் கண்ணுக்குத் தெரியும். உணவு மலமாக மாறி நகர்வதும் வெளியே தெரியும். மூத்திரப்பையில் சிறுநீர் சேர்ந்திருப்பதும் வெளியே தெரியும். வியர்வை, ரத்தம், நிணம், கொழுப்பு, பீழை, சளி, கோழை, போன்ற அனைத்தும் வெளியே தெரியும். இவற்றின் துர்நாற்றம் நமக்கு ஏற்கனவே தெரியும். அழகான கண்களுக்குப் பின்னால் இருக்கும் ஓட்டைகள், எடுப்பான மூக்குக்குப்பின்னால் இருக்கும் மண்டையோட்டின் ஓட்டைகள், பளபளப்பான கன்னங்கள், கவர்ச்சி கரமான நெற்றி, கூந்தல், வழவழப்பான மார்பகங்கள், கட்டுமஸ்தான உடல் போன்ற அனைத்துக்கும் உள்பக்கம் உள்ள அனைத்து நரம்புகளும், தசைகளும், கொழுப்பும், நிணமும், ரத்தமும் தெரிவதாக கற்பனை செய்யவேண்டும். ஒருவேளை இறைவன் நம்மை இப்படிப்பட்ட transparentஆன தோல் அமைப்போடு படைத்திருந்தால், எவ்வளவு அருவருப்பாக இருக்கும் என்று கற்பனை செய்துகொள்வோம். உண்மையாகவே நமது உடலுக்குள்ளே மிகவும் நாற்றமான அருவருப்பான பொருள்கள் உற்பத்தியாகத்தான் செய்கின்றன. எவ்வளவுதான் வாசனையான பேஸ்ட் உபயோகித்து பல் துலக்கினாலும், 6 மணிநேரம் தூங்கியெழுந்தபின் வாய் நாற்றமெடுக்கத்தான் செய்யும். அத்தனை நாற்றத்தையும் அழுக்கையும் தோல் என்ற ஒற்றை அமைப்பு தலை முதல் கால்வரை போர்த்தி மறைத்துக் கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை. தோல்தான் மனிதனுக்கு ஒரு முழுமையான வடிவத்தைத் தருகிறது. தோல் மட்டும் இல்லையென்றால் மனிதன் பார்ப்பதற்கு மிகவும் கோரமானவனாக இருப்பான். இந்த உடலில் ஒவ்வொரு அங்கத்திற்கும் ஒரு வடிவத்தைக் கொடுப்பது இந்த தோல்தான். மனிதனின் மிகப்பெரிய துயரம், தோலால் கிடைத்திருக்கும் இந்த வடிவத்தை தன்னுடைய அழகு என்று நினைத்து இறுமாப்பும் ஆணவமும் கொள்வதுதான்.

(தொடரும்)



# ஒழுக்கம்

**வ ரங்கநாதன்,**
**ஆளுமைத் திறன் பயிற்றுநர்**

கர்நாடகா அரசுப் பேருந்து ஓட்டுனர் ஒருவர் வெள்ளிக்கிழமை மதியம் திடீரென நடு ரோட்டில் பேருந்தை நிறுத்தி விட்டு காலியான இருக்கையில் அமர்ந்து தொழுகை செய்துள்ளார். நடு ரோட்டில் நிற்கும் பேருந்தால் பயணிகள் அச்சத்தோடு அமர்ந்துள்ளனர். தொழுகை முடித்த பின் பேருந்தை இயக்கியுள்ளார்.

இந்த செயல் பிரார்த்தனை தான் என்றாலும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய தீய ஒழுக்கமாகும். ஏனெனில் அவரின் தனிப்பட்ட பழக்கத்துக்காக தான் செய்ய வேண்டிய கடமையிலிருந்து தவறியது தீய ஒழுக்கமே ஆகும்

இந்த ஆபிரகாமிய மதங்களுக்கு ஆன்மீகம் என்பதே, திருடாதே, விபச்சாரம் செய்யாதே ஏமாற்றாதே என்பது மட்டுமே. ஒழுக்கம் என்பது திருடாமல் இருப்பது, பிறரை ஏமாற்றாமல் இருப்பது, துரோகம் செய்யாமல் இருப்பது என்பதோடு மட்டுமே பொதுவாகப் பொருத்திப் பார்க்கப்படுகிறது

சனாதன தர்மத்துக்கு ஆன்மீக நிலை என்பது இந்த அடிப்படை மனித விதிகளைக் கடந்தது. கடமையை சரியாக செய்யாமல் வெறுமனே கடவுளை மட்டும் கும்பிடுவது கூட பாவம், தீய ஒழுக்கம் என்கிறது சனாதன தர்மம். அதனால் தான் செய்யும் தொழிலே தெய்வம் என்று பெரியவர்கள் சொல்லிக் கொடுத்துள்ளார்கள்.

ஒழுக்கத்தை வலியுறுத்தும் திருவள்ளுவரும் பத்து குறட்பாக்களில் நல்ல ஒழுக்கத்தால் பெருமை கிடைக்கும்; தீய ஒழுக்கத்தால் தீமையே கிடைக்கும் என்கிறார்.

**ஒழுக்கம் என்றால் என்ன?**

ஒழுக்கம் என்பது நன்னடத்தையோடு மட்டும் தொடர்புடையது இல்லை வாழ்வியல் சம்பந்தப்பட்டது ஆகும்.

**ஒழுக்கம் என்பது நம் வாழ்வில் நாம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய வேலைகளை காலம் தவறாமல், கவனம் சிதறாமல் முழுமையாகச் செய்தல் ஆகும்.**

- மாணவன் தன் படிப்பில் கவனம் செலுத்தி கருத்தோடு படிப்பதே ஒழுக்கம். பொய் சொல்ல மாட்டான், அடக்கமானவன், என்பதால் மட்டுமே ஒழுக்கமானவன் இல்லை.
- குடும்பத் தலைவன் குடும்பத்துக்கு வேண்டியதை கவனத்தோடும் அன்போடும் செய்வது ஒழுக்கம். வீட்டுக்கு வேண்டியப் பொருட்களை வாங்கித் தந்தால் மட்டுமே ஒழுக்கமானவன் இல்லை.
- தேர்தல் அன்று தவறாமல் தாமரையாய் நல்லாட்சி மலர தவறாது வாக்களிப்பது குடிமகனின் ஒழுக்கம்
- இலையில் இட்ட உணவு பதார்த்தங்களை வீணடிக்காமல் சாப்பிடுவது ஒழுக்கம்
- பைப் நீரை திறந்து விட்டு வீணடிக்காமல் இருப்பது ஒழுக்கம்
- சாலையில் குப்பையை வீசி எறியாமல் குப்பையைக் கூடையில் போடுவது ஒழுக்கம்.
- கொடுத்த வாக்கைக் காப்பாற்றணும் என்று பாடுபடுவது ஒழுக்கம்
- நேரந்தவறாமல் இருப்பது ஒழுக்கம்
- அதாவது அவரவர் செய்ய வேண்டிய வேலையை கவனத்தோடும் கருத்தோடும் பொறுப்போடும் செய்தலும் ஒழுக்கமாகும்.

“**செய்வன திருந்தச் செய்**” என்று ஆத்திச்சூடி சொல்கிறது, ஒரு செயலைச் செய்யத் தொடங்கினால், அதை முழுமையாகவும், பிழைகள் இல்லாமலும், நேர்த்தியாகவும் செய்து முடிக்க வேண்டும். திருத்தமாக நம் வேலைகளைச் செய்வதே ஒழுக்கம் ஆகும்.

“**யோக கர்மாசு கௌசலம்**” என்கிறது கீதை. செயலை சிறப்போடு செய்வதே யோகம். ஒழுக்கம் என்பதும் அதுவே. நமக்கிட்ட பணியை நமது திறனை எல்லாம் தந்து சிறப்பாகச் செய்ய வேண்டும். அதுவே பகவானுக்கு நான் செய்யும் பிரார்த்தனை என்பதே ஒழுக்கம்.

எந்தக் கெட்டப் பழக்கம் இல்லாதபோதும் தன்னுடைய திறமையை முழுமையாகப் பயன்படுத்தி சிறப்பாக செயல் படாதவனே தீய ஒழுக்கம் உடையவன்.

எவன் ஒருவன் தன் கடமைகளை கவனமாகச் செய்து தனது குடும்பத்துக்கும், சமுதாயத்துக்கும் நன்மை செய்கிறானோ அவனே ஒழுக்கமானவன்.

**ஒழுக்கம் என்பது நேர்மையோடு வாழ்வது மட்டுமல்ல சீர்மையோடு வாழ்வதும் ஆகும்.**

# ஆர்.எஸ்.எஸ். 100
# இந்த நாடு ஹிந்து நாடு (பகுதி 9)

இராம . வெங்கடாத்ரி

**வேற்றுமையில் ஒற்றுமை ஹிந்துதர்ம சாதனை**

நூற்றாண்டு விழா காணும் ஆர்.எஸ். எஸ்.- ன் அடிப்படை சித்தாந்தம் இந்த நாடு ஒரு ஹிந்து ராஷ்ட்ரம் என்பதே. இமயம் முதல் குமரி வரை இந்த நாடு கலாச்சார அடிப்படையில், ஆன்மிக மரபுகளால் ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளது. பல வண்ண மணிகளைப் பிணைத்து இணைக்கும் நூல் போல ஹிந்துப் பண்பாட்டின் கூறுகள் பன்னெடுங்காலமாக இந்த கலாச்சார பாரதத்தை இணைத்து வருகின்றன.

**கருட புராணம் கூறும் முக்தித்தலங்கள்**

இந்த நாட்டின் ஏழு முக்தித் தலங்களை கருட புராணம் பின்வருமாறு கூறுகிறது:

அயோத்யா மதுரா மாயா காசி காஞ்சி அவந்திகா
புரி த்வாரவதீ சைவ சப்தைதான் மோக்ஷ தாயிகா

ராமன் பிறந்த அயோத்தி, கண்ணன் பிறந்த மதுரா, மாயா எனப்படும் ஹரித்வார், உத்தரப் பிரதேசத்து காசி, தமிழகத்து காஞ்சிபுரம், மத்தியப்பிரதேசத்தில் உள்ள உஜ்ஜைன் மஹாகாளேஸ்வர், ஒரிசாவில் உள்ள புரி ஜகன்னாதர் கோவில், குஜராத்தில் உள்ள த்வாரகை இவை ஏழும் மோட்சபுரிகளாகப் போற்றுகிறது கருட புராணம். இந்த ஏழு முக்தித்தலங்களுக்கும் அந்தக் காலத்திலேயே தீர்த்த யாத்திரை மேற்கொண்டிருக்கிறார்கள்.

இயேசு கிறிஸ்துவிற்கு முன்பு கருட புராணம் இயற்றப்பட்டதாக கூறவே கூடாது என்று முடிவு செய்துவிட்டதன் காரணமாக மேனாட்டு வரலாற்று ஆசிரியர்கள் கிபி 200 முதல் கிபி 800 வரையிலான கால கட்டத்தில் கருடபுராணம் எழுதப்பட்டதாக வரையறை செய்திருக்கிறார்கள். அவர்கள் காலக் கணக்கினை அப்படியே ஏற்றுக் கொண்டாலும் கூட சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பாகவே வடக்கும் தெற்கும், கிழக்கும் மேற்குமாக 7 மோக்ஷ புரிகளால் இந்த நாடு இணைக்கப்பட்டதை கருட புராணம் வாயிலாக அறிகிறோம்.

**சந்தனம் எங்கள் நாட்டின் புழுதி**

இந்த 7 மோக்ஷபுரிகள் மட்டுமன்றி, இந்த நாட்டின் ஒவ்வொரு பகுதியும், ஒவ்வொரு மண்ணும் புனிதமானது. சுவாமி விவேகானந்தர், அமெரிக்கப் பயணத்தை முடித்து விட்டு 26.01.1897 அன்று பாம்பன் கடற்கரையில் குந்துக்கால் என்ற பகுதியில் வந்திறங்கினார். அங்கே அவரை வரவேற்க ஆயிரக்கணக்கான மக்களும், அன்றைய ராமநாதபுரம் சமஸ்தான மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்களும் காத்திருந்தனர். சுவாமி விவேகானந்தர், பாரத மண்ணில் தனது காலை வைத்ததும் இத்திருநாட்டின் மண்ணை எடுத்து தன் உடல் முழுவதும் பூசி புளகாங்கிதம் பெற்றார். இந்தப் பாரத மண்ணின் ஒவ்வோரு துகளும் புனிதம் என்றுணர்த்திய சுவாமிஜியின் செயலை, "சந்தனம் இந்த நாட்டின் புழுதி" என்ற ஆர்.எஸ்.எஸ். இயக்கப் பாடலும் நமக்கு உணர்த்துகிறது.

**தேவ நிர்மிதம் தேசம்**



ஹிமாலயம் ஸமாரப்ஹ்ய
யாவத் ஹிந்து சரோவரம்
தம் தேவ நிர்மிதம் தேசம்
ஹிந்துஸ்தானம் ப்ரசக்ஷதே

என்ற ஸ்லோகத்தை முந்தைய பதிவுகளில் பார்த்தோம். இமயம் முதல் இந்தியப் பெருங்கடல் வரை பரந்து விரிந்து ஹிந்துஸ்தானம் என்றழைக்கப்படும் இந்த தேசம் முழுவதும் கடவுள் நிர்மாணித்தது என்று இந்த சுலோகம் கூறுகிறது. கடவுள் நிர்மாணித்த இந்த தேசத்தின் ஒவ்வொரு பகுதியும் புனிதமானது. இதை உணர்ந்த ஆன்மீகப் பெரியோர்கள் நாடு முழுவதும் உள்ள புனிதத் தலங்களுக்கு எல்லா இடங்களில்

*இருந்தும் தீர்த்த யாத்திரையாக அன்றிலிருந்து இன்று வரை சென்று வந்து கொண்டிருக்கின்றனர். சைவம், வைணவம், சாக்தம் என்று வெவ்வேறு வழிபாட்டு முறைகள் இருந்தாலும் இந்தப் புனித யாத்திரை காசி -ராமேஸ்வரம், 12 ஜோதிர் லிங்கங்கள், 108 வைணவ திவ்ய தேசங்கள், 51 சக்தி பீடங்கள் என்று நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் ஆன்மீகப் பயணங்களாக இந்தத் திருநாட்டை இணைத்துப் பிணைத்து வந்து கொண்டிருக்கிறது.*

**12 ஜோதிர்லிங்கங்கள்**

*த்வாதச ஜ்யோதிர்லிங்கானி என்ற ஸ்லோகம், பின்வருமாறு 12 ஜ்யோதிர் லிங்கங்களைக் கூறுகிறது.*

**சௌராஷ்ட்ரே சோமநாதம்**
**ச ஸ்ரீஷைலே மல்லிகார்ஜுனம்**
**உஜ்ஜயின்யாம் மஹாகாலம்-ஓம்காரம்-அமலேஸ்வரம்**
**பரல்யாம் வைத்யநாதம் ச டாகிந்யாம் பீமாஷங்கரம்**
**சேதுபந்தே து ராமேஷம் நாகேம் தாருகாவநே**
**வாரணாஸ்யம் து விஷ்வேஷாம் த்ரயம்பகம்**
**கௌதமி-தத்தே ஹிமாலயே து**
**கேதாரம் குஷ்மேஷாம் ச சிவாலயே**
**ஏதானி ஜ்யோதிர்லிங்கானி சாயம் ப்ராத படேன் நர:**

*குஜராத்தில் சோமநாதர், ஆந்திரப் பிரதேசத்தில் ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுனர், மத்தியப் பிரதேசத்தில் உஜ்ஜயினி மஹாகாலேஸ்வர் மற்றும் ஓம்காரேஷ்வர், உத்தராஞ்சல் மாநிலத்தில் கேதார்நாத் மற்றும் ஜாகேஷ்வர், மகாராஷ்டிராவில் பீமாசங்கர் மற்றும் த்ரயம்பகேஷ்வரர், உத்தரப்பிரதேசத்தில் வாரணாசி விஸ்வநாதர், ஜார்க்கண்டில் வைத்யநாத், தமிழ்நாட்டில் ராமேஸ்வரர், அசாம் பீமேஷ்வரர், ராஜஸ்தானில் குஷ்மேஷ்வர் என்று நாடு முழுவதும் எல்லா மாநிலங்களிலும் இந்த ஜோதிர்லிங்கங்கள் இருக்கின்றன. (இதில் வைத்யநாத் ஜோதிர்லிங்கம் ஜார்க்கண்டில் உள்ள வைத்யநாத் என்றும் ஹிமாசல் பிரதேசத்தில் காங்க்ரா மாவட்டத்தில் உள்ள பைஜ்நாத் ஐக் குறிப்பிடுவதாகவும், மகாராஷ்ட்ரா பீட் மாவட்டத்தில் உள்ள வைத்யநாத் என்றும் மூன்றுவிதமான கருத்துக்கள் நிலவுகின்றன). இந்த 12 ஜோதிர்லிங்கங்களையும் ஒவ்வொரு சிவ பக்தனும் காலை மாலை இரு வேளைகளிலும் நினைக்க வேண்டும் என்று இந்த சுலோகத்தின் இறுதியில் ஏதானி ஜ்யோதிர்லிங்கானி சாயம் ப்ராத படேன் நர: என்ற வரிகள் கூறுகின்றன. இப்படி 12 ஜோதிர்லிங்கங்களாக இந்த நாட்டை இணைத்துக் கொண்டிருக்கிறார் சிவபெருமான்.*


**51 சக்தி பீடங்கள்**

*51 சக்தி பீடங்கள் ஆதி சக்தியின் பல்வேறு உடல் வடிவங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டவை என்று ஸ்ரீமத் தேவி பாகவதம் மற்றும் பல்வேறு புராணங்கள் குறிப்பிடுகின்றன. புராணங்களின்படி சிவபெருமான்*

> **“இமயம் முதல் குமரி வரை இந்த நாடு கலாச்சார அடிப்படையில், ஆன்மிக மரபுகளால் ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளது. பல வண்ண மணிகளைப் பிணைத்து இணைக்கும் நூல் போல ஹிந்துப் பண்பாட்டின் கூறுகள் பன்னெடுங்காலமாக இந்த கலாச்சார பாரதத்தை இணைத்து வருகின்றன.”**

*சதியின் உடலை சுமந்து பித்தாக அலைந்தபோது, மகா விஷ்ணு தனது சுதர்சன சக்கரத்தால் சதியின் உடலை 51 பாகங்களாக வெட்டினார். அவை பாரத பூமியில் பல்வேறு இடங்களில் விழுந்து சக்தியை வழிபடும் புனிதத் தலங்களாக மாறின. இந்த 51 சக்தி பீடங்களும் (சிதறி விழுந்த உடலில் ஒரு பகுதியின் அம்சமாக) நமது நாட்டின் கீழ்க்கண்ட மாநிலங்களில் அமைந்துள்ளன: காஷ்மீர், லடாக், உத்தரபிரதேசம், இமாச்சல பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, பீகார், மகாராஷ்டிரா, குஜராத், ராஜஸ்தான், ஆந்திரா, தமிழ்நாடு, மேற்கு வங்காளம், அசாம், மேகாலயா, திரிபுரா, ஒடிசா, ஜார்கண்ட், மத்திய பிரதேசம், உத்தராஞ்சல். இது தவிர இலங்கையில் 1 இடம், நேபாளத்தில் 2 இடங்கள், பாகிஸ்தான் 2 இடங்கள், பங்களாதேஷில் 5 இடங்கள், திபெத்தில் 1 இடம், பூட்டானில் 1 இடம் என்று அகண்ட பாரதத்தின் அனைத்துப் பகுதிகளிலும் சக்தி பீடங்கள் அமைந்திருக்கின்றன. அன்னை பராசக்தி 51 சக்தி பீடங்களாக அகண்ட பாரதத்தை இணைத்துக் கொண்டிருக்கிறாள்.*

**நைமிசாரண்யத்துப் பெருமாள்**



*நைமிசாரண்யம் என்பது 108 வைணவத் திருத்தலங்களில் ஒன்றாகும் திருமங்கையாழ்வாரால் பாடல் பெற்ற இத்தலம் உத்தரப்பிரதேசத்து மாநிலத்தில் உள்ளது. அங்குள்ள தமிழ் தெரியாத கோவில் அர்ச்சகர் தினசரி பூஜையின் ஒரு பகுதியாக ஆழ்வார் பாசுரம் பாடி வருவதாகவும், ஸ்ரீராமானுஜர் காலத்தில் இருந்து இந்த வழிபாட்டு முறை உள்ளதாகவும் நண்பர் ஒருவர் பகிர்ந்திருந்தார். தமிழை வைத்து திராவிடம் பிரிவினை பேசுகிறது. அதே தமிழால் ஒருமைப்பாட்டினை ஆயிரம் ஆண்டுகளாக வளர்த்து வந்துள்ளார் ஸ்ரீராமானுஜர்.*

*எத்தனையோ பிரிவினைவாத முயற்சிகள் நடந்தாலும் இந்த தேசத்தை இன்றளவும் கட்டிக் காப்பது இது போன்ற ஹிந்து ஆன்மீக மரபுகளே.*

# இரண்டாம் பாரதியின் எழுச்சி கீதங்கள் - பகுதி 6



- ஏழுமலை

**இரண்டாவது பாரதியார்**

"மகாகவி சுப்ரமணிய பாரதியாருக்குப் பிறகு, சுதந்திர பாரதத்திலே தமிழிலே அதிகமான தேசபக்திப் பாடல்களை எழுதிய தேசியக் கவி, இரண்டாவது பாரதி என்று அழைக்கப்படுபவர் இந்து முன்னணி நிறுவனர் வீரத்துறவி இராம.கோபாலன்ஜி அவர்கள்.

**இரவு கழிந்தது இரவி எழுந்தான்**

அவர் எழுதிய பாடல்களிலே இரவு கழிந்தது இரவி எழுந்தான் என்ற பாடல் வரிகளைப் பற்றி கடந்த சில தொடர்களில் பார்த்து வருகிறோம். நமது நாடு சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில் அவர் எழுதியது இந்தப் பாடல். சுதந்திர பாரதம் எப்படி இருக்க வேண்டும் என்ற தனது அபிலாஷைகளை அந்தப் பாடலில் வரும் ஒவ்வொரு வார்த்தைகளிலும், வரிகளிலும் வெளிப்படுத்தியிருக்கிறார் இராம கோபாலன் ஜி. அந்தப் பாடலில் வரும்

***"சீதையின் கற்பு***
***ராமனின் அறவர சாட்சியும் காண்பாய்"***

என்ற பாடல் வரிகளைப் பற்றி இன்று காண்போம். சுதந்திரம் அடைந்த பாரதத்தில், சீதையின் கற்பும், ராமனின் அற அரசாட்சியும் நிலவ வேண்டும் என்று வீரத்துறவி விரும்புகிறார்.

**சீதையின் கற்பு**

கற்புக்கரசிகள் என்பதற்கு இலக்கணமாக சீதை, மண்டோதரி, அகலிகை, தாரை மற்றும் திரௌபதி ஆகிய ஐவரைக் குறிப்பிடுவர். சுதந்திர பாரதத்து மக்கள் இத்தகைய கற்பு நெறியினைக் கடைபிடிப்பவர்களாக இருக்க வேண்டும் என்பது பாடல் ஆசிரியரின் அவா. அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் பொருளாதார வளத்தில் சிறந்திருந்தாலும் இத்தகைய ஒழுக்க நெறிகள் இல்லாததால் அவர்களது குடும்ப வாழ்க்கை சீரழிந்து கிடப்பதைக் காண்கிறோம். இன்றைக்கும் நமது நாடு பொருளாதார ரீதியில் முன்னேறி வருவதற்கும், பேரிடர்களையும் நமது நாடு திறம்பட எதிர்கொள்வதற்கும் பாரத குடும்பங்களின் சேமிப்பு, குடும்பங்களின் கூட்டு வாழ்க்கை மற்றும் ஒத்திசைவு ஆகியவையே காரணம் என்பதை பிரபல பட்டயக் கணக்காளரும் துக்ளக் பத்திரிக்கை ஆசிரியருமான திரு.எஸ்.குருமூர்த்தி அவர்கள் பல ஆய்வு முடிவுகள் மூலமாக நிறுவியுள்ளார். அவரது ஆய்வுகளின்படி பாரதப் பொருளாதாரத்துக்கு குடும்பங்களே அச்சாணி. ஆனால நமது குடும்பங்களுக்கு அச்சாணியாக இருப்பதோ கற்பு என்னும் ஒழுக்க நெறி.

**மகாகவி பாரதியாரின் பார்வையில் கற்பு நிலை**

பாரதியாரின் கருத்தில் கற்பு என்பது பெண்ணுக்கு மட்டும் உரியதன்று; ஆண், பெண் இருவருக்கும் கட்டாயம் இருக்க வேண்டிய ஒன்றே ஆகும். இந்நிலையில், 'கற்பு' என்ற ஒற்றைச் சொல்லால் சுட்டாமல், 'கற்பு நிலை' என்ற ஒரு புதிய தொடரைக் கையாண்டுள்ளார் பாரதியார்.

கற்பு நிலை என்று சொல்ல வந்தால் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்
*(பெண்கள் விடுதலைக்கும்மி, செய்யுள் : 5)*

என்பது அவர் இசைக்கும் புதிய 'பெண்கள் விடுதலைக் கும்மி' ஆகும்.

கவிதையில் மட்டுமன்றி, கட்டுரையிலும் பாரதியார் கற்புநெறி பற்றிய தம் கருத்தினைப் பதிவு செய்துள்ளார். சான்றாக, 'மாதர்' பகுதியில் 'பதிவிரதை' என்ற தலைப்பில் அவர் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் பாரதியாரின் சொற்களிலேயே அக்கருத்தினைக் காண்போம்:

"ஸ்திரீகள் பதிவிரதையாக இருக்க வேண்டும்' என்று எல்லோரும் விரும்புகிறார்கள். அதிலே கஷ்டம் என்னவென்றால், ஆண் பிள்ளைகள் யோக்கியர்கள் இல்லை. ஆண் மக்களில் ஒவ்வொருவனும் தன் மனைவி, மக்கள் பதிவிரதைகளாக இருக்க வேண்டுமென்பதில் எத்தனை ஆவலோடு இருக்கிறானோ, அத்தனை ஆவல் இதர ஸ்திரீகளின் பதிவிரத்யத்திலே காட்டுவதில்லை......

அட, பரம மூடர்களா! ஆண் பிள்ளைகள் தவறினால் ஸ்திரீகள் எப்படிப் பதிவிரதையாக இருக்க முடியும்?"

எனவே ஆணும் பெண்ணும் இருவரும் ஒழுக்க நெறிகளின்படி வாழும் "கற்பு நிலை" தான் குடும்ப வாழ்க்கையின் ஆணிவேர். இத்தகைய கற்பு நெறி பேணும் மாந்தர்களால் நாடு நிரம்பிட வேண்டும் என்பதையே திரு.ராம கோபாலன் ஜி அவர்கள், நாடு முழுவதும் "சீதையின் கற்பு" நிலவிட வேண்டும் என்ற வரிகள் மூலம் உணர்த்தி இருப்பதை அறியலாம்.

**ராமனின் அற அரசாட்சி**

ராமர் ஆட்சியிலே மக்கள் எப்படி சுபிக்ஷமாக

வாழ்ந்தனர், எப்படிப்பட்ட முன்னுதாரணமான ஆட்சி நிர்வாகம் நடத்தப்பட்டது என்பதையே, “ராம ராஜ்யம்” என்று கூறுகிறோம்.

வால்மீகி ராமாயணத்தின் யுத்த காண்டத்தில் ராமராஜ்யம் விவரிக்கப்பட்டுள்ளது. இங்கே மகரிஷி வால்மீகி ராமராஜ்ஜியத்தின் மகத்துவத்தையும் அழகையும் பின்வருமாறு விவரிக்கிறார்:

“ராம ராஜ்யம் என்பது வேதங்களின் கொள்கைகளால் ராஜ்யம் இயங்கும் இடம். ராமரின் அற அரசாட்சியிலே, புலம்புவதற்கு விதவைகள் இல்லை, காட்டு விலங்குகளால் ஆபத்து இல்லை, நோய்களால் எந்த பயமும் இல்லை. திருடர்கள் மற்றும் கொள்ளைகள் இல்லை. யாரும் பயனற்றவர்களாக தங்களை உணரவில்லை. ஒவ்வொரு உயிரினமும் மகிழ்ச்சியுடன் இருந்தன. ஒவ்வொருவரும் நல்லொழுக்கத்தில் நோக்கமாக இருந்தனர். மக்கள் தமது சந்ததியினருடன், நோய் மற்றும் துக்கம் இல்லாமல் வாழ்ந்தனர். அங்குள்ள மரங்கள் பூச்சிகள் மற்றும் பூச்சி களால் எந்த காயமும் இல்லாமல், பூக்கள் மற்றும் பழங்களைத் தொடர்ந்து கொண்டிருந்தன. மேகங்கள் சரியான நேரத்தில் மழை பெய்து கொண்டிருந்தன, காற்று தொடுவதற்கு மகிழ்ச்சியாக இருந்தது. பிராமணர்களும், க்ஷத்திரியர்களும், வைசியர்களும், சூத்திரர்களும் தங்களுடைய கடமைகளைச் சரிவர செய்து கொண்டிருந்தனர். மக்கள் பேராசையின்றி அவரவர் வேலைகளில் திருப்தியுடன் இருந்தனர். மக்கள் அனைவரும் பொய் சொல்லாமல் வாழ்ந்தனர். அனைத்து மக்களும் சிறந்த குணாதிசயங்களைக் கொண்டிருந்தனர். அனைவரும் அறத்தில் ஈடுபட்டிருந்தனர். ராமரின் ஆட்சியில், அனைவருக்கும் அனைத்து நல்வாழ்வு குணங்களும், தர்மம், அமைதி, செழிப்பு மற்றும் பேரின்பமும் அருளப்பட்டனசு.

வாழ்வின் அனைத்து அம்சங்களும் பூர்த்தி செய்யப்பட்ட முன்னுதாரணமான நிறை வாழ்வு வாழ்ந்த மக்களுக்கான ஆட்சியாக ராம ராஜ்யம் என்பதை இப்படி முன்னுதாரணம் (ideal) ஆக்கி நம் கண் முன் நிறுத்துகிறார் வால்மீகி.

**ராம ராஜ்யம் பற்றி காந்திஜி**

சுதந்திரம் பெற்ற பாரதம் ராம ராஜ்யம் ஆக இருக்க வேண்டும் என்ற தனது கருத்தை பின்வருமாறு காந்தியடிகள் பல்வேறு கட்டுரைகளில் கூறியுள்ளார்: “ராமராஜ்யம் சந்தேகத்திற்கு இடமின்றி உண்மையான ஜனநாயகத்தின் முன்னுதாரணமாகும்... அங்கே குடிமகன் விரிவான மற்றும் விலையுயர்ந்த நடைமுறை இல்லாமல் விரைவான நீதியை உறுதி செய்ய முடியும்... ராமராஜ்ஜியத்தின் கீழ் நாய் கூட நீ தியைப் பெற்றதாக கவிஞரால் விவரிக்கப்படுகிறது... ராமராஜ்யம் இளவரசருக்கும் ஏழைக்கும் சம உரிமைகளை உறுதி செய்கிறது... ராமராஜ்யம் என்பது தூய தார்மீக அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட மக்களின் இறையாண்மை... ராமராஜ்யம் என்பது பூமியில் கடவுளின் ராஜ்யம்சு என்று இப்படிப் பலவாறாகக் குறிப்பிடும் காந்திஜி, ராமராஜ்யம் பற்றி ஒரு எளிய உதாரணம் மூலம் பின்வருமாறு விளக்கி விடுகிறார்: “சுதந்திர பாரதத்தில், நாட்டின் எந்த ஒரு மூலையில் இருந்தும் எந்தவொரு மூலைக்கும், அழகான இளம் பெண் ஒருத்தி, ஏராளமான நகைகளை அணிந்து, எந்தவொரு ஆணின் துணையுமின்றி, நடுநிசியில், எந்தவொரு ஆபத்துமின்றி சென்று வர இயலுமாயின் அதுவே ராம ராஜ்யம்” என்று கூறுகிறார்.

சுதந்திர பாரதம், தனி மனித ஒழுக்க நெறிகளிலும், சிறந்த முன்னுதாரணமான நிர்வாகத்திலும் நிலைத்திட வேண்டும் என்பதையே, சீதையின் கற்பு, ராமனின் அறவர சாட்சியும் காண்பாய் என்பதை இந்த பாடல் வரிகள் மூலம் நமக்கு வீரத்துறவி வலியுறுத்திகிறார்.

(தொடரும்)

**இசை வடிவம்**
**பாடலின் இசை வடிவத்திற்கு கீழே உள்ள QRCODE I SCAN செய்யவும்.**


## வாசகர் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

**ஸ்ரீதமிழ் இதழ் மேலும் மேம்பட உங்கள் கருத்து எங்களுக்கு உதவும். தேர்ந்தெடுக்கப்பட்ட வாசகர் கருத்துக்கள் பிரசுரிக்கப்படும். வாட்ஸ் ஆப்பில் டெக்ஸ்ட் பண்ணுங்க; அல்லது, வாய்ஸ் நோட் அனுப்புங்க....**

**வாட்ஸ் அப் எண்: 7010281932**

# 16 ஆம் நூற்றாண்டு முதல் 19 ஆம் நூற்றாண்டு முடிய தமிழகத்தில் அன்னியர்களுக்கு எதிரான இதரப் போராட்டங்கள்

யா.சு. கண்ணன்

16 முதல் 18-ஆம் நூற்றாண்டு வரை தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள முயன்ற போர்த்துகீசியர்கள் மற்றும் டச்சுக்காரர்களுக்கு எதிராகப் பல போராட்டங்களும் போர்களும் நடைபெற்றன.

**போர்த்துகீசியர்களுக்கு எதிரான போராட்டங்கள் (16-ஆம் நூற்றாண்டு)**

போர்த்துகீசியர்கள் தமிழகத்தின் முத்துக்கடல் (Pearl Fishery Coast) மற்றும் துறைமுகங்களைக் கைப்பற்ற முயன்றபோது கடும் எதிர்ப்பைச் சந்தித்தனர்.

- **வேதாளைப் போர் (1538):** மண்டபம் அருகே நடந்த இந்தப் போரில், மலபார் குஞ்சாலி மரைக்காயர் படைகள் போர்த்துகீசிய கடற்படையுடன் மோதின. இது முத்துக்கடல் மற்றும் மன்னார் வளைகுடா பகுதிகளில் ஆதிக்கத்தைப் பெற நடந்த மிக முக்கியமான கடற்போர் ஆகும்.
- **யாழ்ப்பாணத் தமிழ் இராச்சியப் போர் (1619):** யாழ்ப்பாணத்தின் கடைசித் தமிழ் மன்னனான சங்கிலி குமாரன் போர்த்துகீசியர்களுக்கு எதிராகத் தீவிரமாகப் போராடினார். இறுதியில் அவர் தோற்கடிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார், ஆனால் இப்போராட்டம் ஈழத் தமிழர்களின் வீரத்திற்கு அடையாளமாக உள்ளது.

**டச்சுக்காரர்களுக்கு எதிரான போராட்டங்கள் (17 மற்றும் 18-ஆம் நூற்றாண்டு)**

டச்சுக்காரர்கள் பழவேற்காடு மற்றும் நாகப்பட்டினம் பகுதிகளில் தங்களை நிலைநிறுத்திக் கொண்டபோது உள்ளூர் ஆட்சியாளர்களுடன் மோதல்கள் ஏற்பட்டன.

- **திருச்செந்தூர் ஆக்கிரமிப்பு (1648):** டச்சுக்காரர்கள் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலைக் கைப்பற்றி அதைத் தங்கள் கோட்டையாக மாற்றினர். இதற்கு எதிராகத் திருமலை நாயக்கர் மற்றும் உள்ளூர் மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். பின்னர் டச்சுக்காரர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.
- **குளச்சல் போர் (1741):** இது தென்னிந்திய வரலாற்றில் ஒரு மைல்கல். திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மா, நவீன ஆயுதங்களைக் கொண்டிருந்த டச்சுப் படைகளைத் தரையிலும் கடலிலும் தீர்க்கமாகத் தோற்கடித்தார். ஆசியப் படை ஒன்று ஐரோப்பியப் படையை வென்ற முதல் நிகழ்வுகளில் இதுவும் ஒன்று. இப்படை பிரிவில் ஏராளமான தமிழர்களும் பங்கு பெற்றனர்.
- **மருது பாண்டியர்களின் எதிர்ப்பு (1801):** 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மருது சகோதரர்கள் வெளியிட்ட திருச்சிராப்பள்ளி பிரகடனம் ஐரோப்பிய மேலாதிக்கத்திற்கு (English, Dutch, Portuguese) எதிரான முதல் பொது அறைகூவலாக அமைந்தது.

**முக்கியக் குறிப்புகள்**

- அந்தக் காலத்தில் தமிழ்ப் பாளையக்காரர்கள் பெரும்பாலும் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகவே அதிகப் போர்களை நடத்தினர். ஆனால், அதற்கு முன்னதாக போர்த்துகீசியர்களின் மத மாற்ற முயற்சி களுக்கும் வர்த்தக ஏகாதிபத்தியத்திற்கும் எதிராகக் கடற்கரையோர மக்கள் தொடர்ந்து கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர்.
- மார்த்தாண்ட வர்மாவின் வெற்றிக்குப் பிறகு, டச்சுக்காரர்களின் ஆதிக்கம் இந்தியாவில் படிப்படியாகக் குறையத் தொடங்கியது.

18 மற்றும் 19-ஆம் நூற்றாண்டுகளில் ஆற்காடு மற்றும் செங்கல்பட்டு பகுதிகளில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடைபெற்ற முக்கிய கிளர்ச்சிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

**1. ஆற்காடு கிளர்ச்சிகள்**

**ஆற்காடு முற்றுகை (1751):** இரண்டாம் கர்நாடகப் போரின் ஒரு பகுதியாக, ராபர்ட் கிளைவ் தலைமையிலான பிரிட்டிஷ் படைகள் ஆற்காடு கோட்டையைக் கைப்பற்றின. சந்தா சாகிப்பின் படைகள் கோட்டையை மீண்டும் பிடிக்க முயன்றும் தோல்வியுற்றன. இது தென்னிந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கம் நிலைபெற ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது.

- **வட ஆற்காடு பாளையக்காரர் கிளர்ச்சி (1803–1805):** ஆற்காடு நவாப் தனது பகுதிகளை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்த பிறகு, அங்குள்ள பாளையக்காரர்கள் வரி வசூலிக்கும் உரிமையை இழந்தனர். குறிப்பாக 'காவல் பிச்சை' எனப்படும் கிராமப் பாதுகாப்பு வரி வசூலிக்கும் உரிமை பறிக்கப்பட்டதால், வட ஆற்காடு பாளையக்காரர்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தனர்.
- **வேலூர் சிப்பாய் புரட்சி (1806):** இது

ஆற்காடு பகுதியில் நடந்த மிக முக்கியமான புரட்சியாகும். திப்பு சுல்தானின் குடும்பத்தினர் வேலூர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்தனர். சிப்பாய்களுக்கு விதிக்கப்பட்ட புதிய தலைப்பாகை மற்றும் மதக் குறியீடுகள் தொடர்பான கட்டுப்பாடுகளால் ஆத்திரமடைந்த சிப்பாய்கள் 1806 ஜூலை 10 அன்று புரட்சியில் ஈடுபட்டனர்.

**2. செங்கல்பட்டு கிளர்ச்சிகள்**

- **1857 பெரும் புரட்சியின் தாக்கம்:** வட இந்தியாவில் 1857 புரட்சி வெடித்தபோது, அதன் அலை செங்கல்பட்டு வரை பரவியது.
- சுல்தான் பக்ஷ் (Sultan Bakhsh): இவர் 1857 ஜூலையில் மெட்ராஸிலிருந்து செங்கல்பட்டிற்கு வந்து பிரிட்டிஷ் எதிர்ப்புப் படைகளை ஒருங்கிணைத்தார்.
- உள்ளூர் தலைவர்கள்: அருணகிரி மற்றும் கிருஷ்ணா போன்ற உள்ளூர் தலைவர்களுடன் இணைந்து ஜூலை 31, 1857-இல் புரட்சி தொடங்கப்பட்டது. இந்த எழுச்சியைக் கண்டு பயந்த மாவட்ட ஆட்சியர், சென்னை அரசுக்கு நிலைமையின் தீவிரத்தை விளக்கி கடிதம் எழுதினார்.
- சுதந்திரப் போராட்டக் குழுக்கள்: 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில், 1884-இல் தொடங்கப்பட்ட மெட்ராஸ் மகாஜன சபையில் செங்கல்பட்டைச் சேர்ந்த எம். வீரராகவாச்சாரியார் போன்றோர் முக்கியப் பங்காற்றினர். இது பிற்காலத்தில் வட தமிழகத்தில் தீவிர அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

**3. பொதுவான காரணங்கள்**

- ஆற்காடு நவாப்பின் ஒப்பந்தங்கள்: 1787 மற்றும் 1801-ஆம் ஆண்டுகளில் ஆற்காடு நவாப் ஆங்கிலேயர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களால், செங்கல்பட்டு மற்றும் ஆற்காடு பகுதிகள் நேரடியாகப் பிரிட்டிஷ் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. இதனால் ஏற்பட்ட வாழ்வாதார இழப்பும், புதிய வரி முறைகளும் பொதுமக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தின.

காஜுலு லட்சுமி நரசு செட்டி (1806-1868) 19-ஆம் நூற்றாண்டில் சென்னையில் வாழ்ந்த ஒரு மிக முக்கியமான சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவார். இவர் அரசியல் ரீதியாக மக்களை ஒருங்கிணைத்த முன்னோடியாகக் கருதப்படுகிறார்.

அவரைப் பற்றிய முக்கிய விவரங்கள் இதோ:

**1. மதராஸ் நேட்டிவ் அசோசியேஷன்** (Madras Native Association & MNA):

- 1852-ஆம் ஆண்டில் பி.டி. செட்டி மற்றும் சீனிவாசப் பிள்ளையுடன் இணைந்து 'மதராஸ் நேட்டிவ் அசோசியேஷன்' என்ற அமைப்பைத் தொடங்கினார்.

**"மார்த்தாண்ட வர்மா, நவீன ஆயுதங்களைக் கொண்டிருந்த டச்சுப் படைகளைத் தரையிலும் கடலிலும் தீர்க்கமாகத் தோற்கடித்தார்.
ஆசியப் படை ஒன்று ஐரோப்பியப் படையை வென்ற முதல் நிகழ்வுகளில் இதுவும் ஒன்று."**

- இதுவே தென்னிந்தியாவில் இந்தியர்களால் தொடங்கப்பட்ட முதல் அரசியல் சார்ந்த அமைப்பாகும்.
- ஆங்கிலேய அரசின் வரிச் சுரண்டல் மற்றும் மதமாற்ற நடவடிக்கைகளுக்கு எதிராக இந்த அமைப்பு கடுமையாகக் குரல் கொடுத்தது.

**2. சித்திரவதை ஆணையம்** (Torture Commission):

- அந்தக் காலத்தில் நிலவரி வசூலிப்பதற்காக விவசாயிகளை ஆங்கிலேய அதிகாரிகள் சித்திரவதை செய்து வந்தனர்.
- இதற்கு எதிராக லட்சுமி நரசு செட்டி பெரும் போராட்டங்களை நடத்தினார். இதன் விளைவாக, பிரிட்டிஷ் அரசு 'சித்திரவதை ஆணையத்தை' அமைத்து, அத்தகைய கொடூரமான முறைகளைத் தடுத்தது.

**3. 'தி கிரசென்ட்' பத்திரிகை:**

- பிரிட்டிஷ் அரசின் தவறான கொள்கைகளைச் சுட்டிக்காட்டவும், மக்களின் குறைகளை வெளிப்படுத்தவும் 1844-இல் 'தி கிரசென்ட்' என்ற வார இதழைத் தொடங்கினார்.
- அரசுப் பள்ளிகளில் கிறிஸ்தவ மத போதனைகளை அறிமுகப்படுத்தும் முயற்சியை இப்பத்திரிகை கடுமையாக எதிர்த்தது.

**4. சட்டமன்ற உறுப்பினர்:**

- இவரது திறமையையும் மக்கள் செல்வாக்கையும் கண்டு, 1863-ஆம் ஆண்டில் மதராஸ் சட்டமன்றத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இந்த நிலையை அடைந்த இரண்டாவது இந்தியர் இவராவார்.

**5. சமூகப் பங்களிப்பு:**

- கட்டாய மதமாற்றத்திற்கு எதிராகப் போராடியதோடு, இந்தியத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்தார்.
- 1857-ஆம் ஆண்டு சிப்பாய் கலகத்தின் போது, பிரிட்டிஷ் அரசு கொண்டு வந்த கடுமையான சட்டங்களை எதிர்த்தார்.

**முடிவு:**

லட்சுமி நரசு செட்டி அவர்கள் ஆயுதம் ஏந்திப் போராடாவிட்டாலும், அரசியல் விழிப்புணர்வு, பத்திரிகை சுதந்திரம் மற்றும் சட்ட ரீதியான போராட்டங்கள் மூலம் தமிழகத்தில் சுதந்திர வேட்கையைத் தூண்டியவர். இவரை 'சென்னை மகாஜன சபையின் முன்னோடி' என்று அழைக்கலாம்.

மஹான்களின் தரிசனம்

# தர்மத்தைக் காக்க அனுமனை வரவழைத்த ஸ்ரீ வியாஸ தீர்த்தர்

- நிதீஸ்வரன்

ஸ்ரீ வியாஸ தீர்த்தர், 1467 ஆம் ஆண்டு ஸ்ரீ பிரம்மண்ய தீர்த்தரால் 12-வது பீடாதிபதியாக நியமிக்கப்பட்டார். இவர் மைசூர் அருகிலுள்ள பன்னூரில், ஸ்ரீ பிரம்மண்ய தீர்த்தரின் அருளால் பல்லண்ண ஸுமதி மற்றும் அக்கம்மா தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் 'யதிராஜா'. இவரது முன்னோர்கள் காஷ்யப கோத்திரத்தைச் சேர்ந்த ஷஷ்டிக வம்சத்தினர்.

ஆச்சார்ய மத்வரைப் போலவே, இவரது வாழ்க்கையும் அவரது சம காலத்தில் வாழ்ந்த சோமநாத கவியால் எழுதப்பட்ட 'ஸ்ரீ வியாஸ யோகி சரித்திரம்' என்ற வரலாற்று நூலில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இவரது குருவான ஸ்ரீபாதராஜர் எழுதியுள்ள ஸ்லோகம், இவரது சீடர்களான ஸ்ரீ வாதிராஜ தீர்த்தர், ஸ்ரீ விஜயீந்திர தீர்த்தர் ஆகியோரின் தேவர்நாமங்கள் மற்றும் கர்நாடக சங்கீத பிதாமகர் ஸ்ரீ புரந்தர தாஸரின் 'ஸுலாதி' ஆகியவற்றின் மூலமும் இவரைப் பற்றி அறிய முடிகிறது.



விஜயநகரப் பேரரசின் பொற்காலத்தில் அங்கு தங்கியிருந்த போர்ச்சுகீசிய பயணிகளான ஃபெர்னாவோ நுனிஸ் மற்றும் டொமிங்கோ பயஸ் ஆகியோரின் பயணக் குறிப்புகளிலும் இவரைப் பற்றிய சான்றுகள் காணப்படுகின்றன. இவை தவிர, பிற்கால தாஸர்களான விஜய தாஸர், கோபால தாஸர், ஜகன்னாத தாஸர் ஆகியோரின் படைப்புகளும், ஸ்ரீ வித்யாரத்னகரா தீர்த்தர் எழுதிய 'ஸ்ரீ வியாஸராஜ சித்ர சரிதம்' என்ற நூலும் இவரது வாழ்வின் முக்கிய நிகழ்வுகளைக் காலவரிசைப்படி பதிவு செய்துள்ளன.

**ஆரம்பகால வாழ்க்கையும் துறவறமும்**

யதிராஜா ஸ்ரீமடத்தில் ஸ்ரீ பிரம்மண்ய தீர்த்தரின் அரவணைப்பில் வளர்ந்தார். ஐந்து வயதிலேயே உபநயனம் முடித்து, அங்கேயே ஆரம்பக் கல்வியைப் பெற்றார். அதன் பிறகு, ஸ்ரீ பிரம்மண்ய தீர்த்தரால் அப்புரூவில் உள்ள கண்வ நதிக்கரையில், துறவறம் கொடுத்து பால பிரம்மச்சாரியாக மாற்றப்பட்டு '**ஸ்ரீ வியாஸ தீர்த்தர்**' என்ற திருநாமத்தைப் பெற்றார். பின்னர் மேல் படிப்பிற்காக முலிபாகலுவில் உள்ள ஸ்ரீ லக்ஷ்மி நாராயண தீர்த்தரிடம் (ஸ்ரீபாதராஜர்) அனுப்பப்பட்டார்.

ஸ்ரீபாதராஜரிடம் பன்னிரண்டு ஆண்டுகள் தங்கியிருந்து மத்வ சாஸ்திரங்களின் நுணுக்கங்களைக் கற்றார்.

**திருமலை சேவையும் விஜயநகர வருகையும்**

இதனைத் தொடர்ந்து, சந்திரகிரி மன்னர் சாளுவ நரசிம்மரின் வேண்டுகோளின்படி, ஸ்ரீபாதராஜரால் திருமலையில் ஸ்ரீநிவாஸ பெருமானுக்கு ஆராதனை செய்ய வியாஸ தீர்த்தர் அனுப்பப்பட்டார். அங்கு பன்னிரண்டு ஆண்டுகள் இறைவனுக்கு பூஜை செய்ததோடு, மன்னர் மற்றும் அவரது மகன் தம்மராயருக்கு குலகுருவாகவும் விளங்கினார்.

இக்காலக்கட்டத்தில், நரச நாயக்கரின் வேண்டுகோளின்படி, விஜயநகரப் பேரரசை வலுப்படுத்தும் நோக்கில் தம்மராயர் மற்றும் நரச நாயக்கரின் ஒப்புதலுடன் அவர் விஜயநகரத்திற்குச் சென்றார். அங்கு மன்னரால் பிரம்மாண்டமாக வரவேற்கப்பட்டு, பேரரசின் ஆன்மீக ஆலோசகராகவும், ராஜ்ஜியத்தின் பாதுகாப்பு அரணாகவும் விளங்கினார். வீர நரசிம்மர், கிருஷ்ணதேவராயர் மற்றும் அச்யுதராயர் ஆகிய மன்னர்களுக்கும் அவர் குலகுருவாகத் திகழ்ந்தார். அந்த ஆட்சியாளர்கள் ஒவ்வொருவரும் ஸ்ரீ வியாச தீர்த்தர் மீது கொண்டிருந்த மதிப்பை ஸ்ரீ சோமநாத கவி மிகவும் சிலிர்ப்பூட்டும் வகையில் ஆவணப்படுத்தியுள்ளார்.

**அனுமன் பிரதிஷ்டையும் ஆன்மீகப் பணியும்**

விஜயநகரத்தை வந்தடைந்த பின் அவர் செய்த முதல் பெரும் பணி, பேரரசு முழுவதும் 732 அனுமன் சிலைகளை பிரதிஷ்டை செய்ததாகும். இவை த்வத்திரிம்ஷத் சப்தசத மூர்த்தி ஹனுமந்த பிரபு (732) அனுமன் வடிவங்கள் என அழைக்கப்படுகிறது; இதில் முதலாவது விக்கிரகம் தலைநகரிலேயே அமைக்கப்பட்ட யந்த்ரோத்தாரக அனுமன் ஆகும்

இந்த ஒவ்வொரு பிரதிஷ்டையிலும் ஹனுமன் பிரத்யட்சமாக வெளிபட்டார் என்று கூறுகிறார்கள் இது இஸ்லாமிய படையெடுப்பிலிருந்து நம் தேசத்தைப் பாதுகாக்க அவர் செய்த பணி என்றும் கூறப்படுகிறது. இந்த மாபெரும் பணி ஒரே ஆண்டில் (ரௌத்ரி நாம ஸம்வத்ஸரம்) முடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

**அறிவார்ந்த விவாதங்களும் பண்பும்**

அவரது அறிவுத் திறனுக்காக மட்டுமல்லாமல், அவரது ஆளுமைக்காகவும் அவர் சமூகத்தின் அனைத்துத் தரப்பினராலும் மதிக்கப்பட்டார். இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து

வந்த வெவ்வேறு தத்துவப் பள்ளிகளைச் சேர்ந்த அறிஞர்கள் அவரை விவாதத்திற்கு அழைத்தனர். இத்தகைய விவாதங்கள் ஒவ்வொன்றிலும் அவர் வெற்றிகரமானவராக உருவெடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. கலிங்கத்தின் பசவ பட்டா மற்றும் மிதிலையின் பக்ஷதர மிஸ்ரா போன்றோரை அவர் விவாதங்களில் வென்றார். இருப்பினும், தோற்றவர்களை அவர் ஒருபோதும் சிறுமைப்படுத்தவில்லை; மாறாக அவர்களது அறிவை அங்கீகரித்து கௌரவித்தார்.

**இசையுலகில் பங்களிப்பு**

தூய கன்னடத்தில் இனிமையான மற்றும் உன்னதமான தேவநாமங்களை இயற்றியவர் என்பதைத் தாண்டி, **ஸ்ரீ வியாச தீர்த்தரின்** அதிகம் அறியப்படாத மற்றொரு முகம் என்னவென்றால், அவர் கர்நாடக இசையில் ஒரு மேதையாகத் திகழ்ந்தவர் என்பதாகும். இன்று நாம் **கர்நாடக சங்கீதம்** என்று அழைக்கும் இசையின் தொடக்கக் காலமே அவரது காலம்தான். அவரது காலத்து இசைக்கலைஞர்கள் அவரை '**அபிநவ பாரத முனி**', '**சங்கீத காமா**', '**தும்புகு**', '**நாரதர்**' மற்றும் '**தத்திலா**' என்று அழைத்தனர்.

சங்கீத சாராம்ருதா என்ற நூலை எழுதியதற்காக புகழ் பெற்ற தஞ்சை மன்னர் துளஜாஜேந்திர பூபாலர் இவருக்கு பின்வரும் பட்டங்களைக் கொடுத்துள்ளார் சங்கீத வித்யா சம்ப்ரதாய ப்ரவர்த்தக, வித்யா சிம்ஹாசனாத்யக்ஷ, கல்பனா சதுரானன, வியாஸப்பாசார்யோஸ்மத் பூர்வாசார்யோதிவிச்ருத. இந்த பாராட்டுக்கள், அவரது காலத்து அறிஞர்கள் மட்டுமின்றி, பிந்தைய தலைமுறையினரும் அவரது இசை நுணுக்கங்கள் மற்றும் புலமை மீது கொண்டிருந்த அளப்பரிய மரியாதையை எடுத்துக் காட்டுகின்றன.

புரந்தரதாஸர், கனகதாஸர், வாதிராஜ தீர்த்தர் மற்றும் விஜயீந்திர தீர்த்தர் போன்ற மகத்தான சீடர்களை அவர் உருவாக்கினார்.

**மனிதாபிமானமும் மக்கள் பணியும்**

விஜயநகரப் பேரரசின் மன்னர்கள் இவருக்கு வழங்கிய கொடைகளைப் பற்றிய ஏராளமான கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன. அவர், தமக்குக் கிடைத்த இவை அனைத்தையும் தகுதியுள்ள அறிஞர்களுக்கும் தேவையுள்ள எளியவர்களுக்கும் பகிர்ந்து அளித்தார்; அவர் ஒரு துறவியாக இருந்தாலும், மக்கள் நலனில் மிகுந்த அக்கறை காட்டினார். அதன் காரணமாக பேரரசு முழுவதும் 'வியாஸ சமுத்திரம்' போன்ற ஏரிகளை வெட்டியும், பயணிகளுக்காகச் சத்திரங்களை அமைத்தும் மக்கள் பணியாற்றினார்.

**ஸ்ரீ வியாஸ தீர்த்தரும் கிருஷ்ணதேவராயரும்**

மன்னர் கிருஷ்ணதேவராயருக்கும் இவருக்கும் இடையே மிகச்சிறந்த உறவு இருந்தது. மன்னர் இவருக்காக 'விஸ்வபாவன மடம்' என்ற பல்கலைக்கழகத்தை நிறுவினார். சாஸ்திரத்தின் பல்வேறு பிரிவுகளில் மாணவர்களுக்கு பாரம்பரியக் கல்வி கற்பிக்கப்பட்டது; நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

மன்னர் எங்குச் சென்றாலும் இவரிடம் ஆசி பெற்றே செல்வார். ஒருமுறை மன்னரின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய 'குஹு யோகம்' (அசுப கிரக நிலை) வந்தபோது, வியாஸ தீர்த்தர் தாமே அரியணையில் அமர்ந்து அந்தத் தோஷத்தை ஏற்றுக்கொண்டு மன்னரைக் காப்பாற்றினார். பின்னர் மீண்டும் அரியணையை மன்னரிடமே ஒப்படைத்தார்.

**இயற்றிய நூல்கள்**

மத்வ தத்துவமான 'தத்வவாதத்தை' நிலைநாட்ட அவர் பல நூல்களை எழுதினார். அவற்றில் மூன்று நூல்கள் 'வியாஸ த்ரய' என்று போற்றப்படுகின்றன:

1. **நியாயாமிருதம்:** அத்வைதக் கருத்துகளுக்கு எதிராக தத்வவாதத்தை நிலைநாட்டும் மாபெரும் ஒப்பீட்டு நூல்.


2. **தாத்பர்ய சந்திரிகா:** இது ஜெயதீர்த்தரின் 'தத்வ பிரகாசிகா' நூலுக்கான விளக்கவுரை. இது ஆச்சார்ய மத்வரின் பிரம்ம சூத்திர பாஷ்யமே சரியான விளக்கம் என்பதை நிறுவுகிறது.

3. **தர்க்க தாண்டவம்:** நியாய-வைஷேஷிக பள்ளிகளின் தர்க்கங்களை ஆய்வு செய்து தத்வவாதத்தின் மேன்மையை விளக்கும் நூல்.

மேலும், '**மந்தார மஞ்சரி**', '**பேதோஜ்ஜீவனம்**' போன்ற சாஸ்திர நூல்களையும், 'யந்த்ரோத்தாரக ஸ்லோகம்', 'கிருஷ்ண மங்கள ஸ்லோகம்' போன்ற பல ஸ்தோத்திரங்களையும் அவர் இயற்றியுள்ளார். இதைத் தவிர பல்வேறு சாஸ்திரங்கள் குறித்து சுமார் பன்னிரண்டு நூல்களை இயற்றியுள்ளார்

**முடிவு**

ஸ்ரீ வியாஸ தீர்த்தர் ஒரு அறிவார்ந்த விவாதி, கவிஞர், இசைக்கலைஞர், ஆலோசகர் மற்றும் சிறந்த ஆசிரியர் என பன்முகத் திறமை கொண்டவர். விஜயநகரப் பேரரசின் வளர்ச்சியில் இவரது பங்கு அளப்பரியது. இன்று சனாதன தர்மத்தின் ஒரு சிறு பகுதியாவது இந்த மண்ணில் கடைப்பிடிக்கப்படுகிறது என்றால், அதற்கு அவர் உருவாக்கிய உகந்த சூழலும் ஊக்கமுமே முக்கியக் காரணமாகும். அவர் தனது இறுதிக்காலத்தில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ தீர்த்தரை பீடாதிபதியாக நியமித்து, ஹரி தியானத்தில் இருக்கும்போதே இறைவனடி சேர்ந்தார். இவரது பிருந்தாவனம் ஹம்பியில் உள்ள புனிதமான நவபிருந்தாவனத்தில் அமைந்துள்ளது.



# கொன்றை வேந்தன் கதைகள்

## கோபால் கேட்ட கேள்வி

கலாவதி

'என்ன எல்லாரும் தயாராகிட்டீங்களா? நான் கிளம்பி பத்து நிமிஷமாச்சு'' என்று குரல் கொடுத்தார் அப்பா.

“இதோ நாங்க கிளம்பிட்டோம் பா'' என்று சொல்லிக்கொண்டே கோபாலும் ஐயப்பனும் கூடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். “நான் கிளம்ப ஒரு பத்து நிமிஷமாகுங்க'' என்று உள்ளே இருந்து அம்மா குரல் கொடுத்தார்.

“அப்பா, எனக்கு ஒரு சந்தேகம் பா'' என்று கோபால் ஆரம்பித்தான். “என்ன சந்தேகம்னு சொல்லு. பீடிகையெல்லாம் வேணாம்'' என்றார் அப்பா.

போன வாரம் என் கூட படிக்கற பையன் வீட்டுக்கு விளையாட போயிருந்தேன். அவங்க வீட்டுல ஒரே ஒரு சாமி படம்தான் இருக்கு. அதுவுமில்லாம, நம்ம வீட்டுல நிறைய சாமியா இருக்குன்னு கேலி பண்ணான்'' என்று கோபால் இழுக்க, ஐயப்பன் அவனை மறித்து “எனக்கும் அதே சந்தேகம்தான் பா. போன வாரம் திருத்தணி முருகன் கோயில் போனோம். அதுக்கு முன்ன பெரியபாளையம் அம்மன் கோயில் அழைச்சிட்டு போனீங்க. இந்த வாரம் சிவன் கோயில் கூட்டிட்டு போறீங்க. இவ்ளோ சாமி எதுக்குப்பா?'' என்று தன் பங்குக்கு கேட்டான்.

அப்பா சிறிது நேரம் யோசித்தார். பிறகு மெல்லமாக, “நாமளும் ஒரே கடவுள்னு தான் சொல்லுறோம். ஆனா. அவருக்கு எல்லா வடிவமும் உண்டு'' என்றார்.

“புரியலையே?'' என்று ஐயப்பன் உதட்டை பிதுங்கினான். அப்பா சிரித்துக் கொண்டே “நம்ம நாட்டுலயும் ஒரே கடவுளைதான் கும்புடறோம். ஆனா, அவரை நமக்கு பிடிச்ச மாதிரி கும்பிடறோம். அவ்வளவுதான். அதே மாதிரி, எத்தனை வடிவத்துல கும்பிட்டாலும், நம்ம மனசுல இருக்கற வடிவத்தோட சேர்த்து அதை பார்க்கறோம்'' என்று புரிய வைத்தார்.

“அப்போ நாமளும் அவங்களை மாதிரி ஒரே கடவுள் வச்சிக்கலாமே பா'' என்று கோபால் கேட்டான். “வச்சிக்கலாம் தான். ஆனா, நமக்கு ஒவ்வொரு நேரத்துல ஒவ்வொண்ணு பிடிக்கும். உனக்கு இனிப்பு பிடிக்கும். ஜாங்கிரியில இருக்கறதும் சர்க்கரை தான். லட்டு, பால்கோவாவுல இருக்கறதும் சர்க்கரை தான்.



எல்லாம் ஒரே இனிப்புனு சொல்லிடலாமே?'' என்று பதிலுக்கு கேள்வி கேட்டார்.

“அதெப்படி லட்டு சாப்பிட தோணும்போது அததானே சாப்பிட முடியும்?'' என்று ஐயப்பன் சொல்ல, “போன வாரம் எனக்கு லட்டு கொடுத்துட்டு, நீ ஜாங்கிரி சாப்பிட்ட'' என்று கோபால் கிண்டல் செய்தான்.

“சரி இருக்கட்டும். அதே மாதிரிதான் மனுஷனும். ஒவ்வொரு காலத்துலயும் ஒவ்வொரு வடிவத்துல பிடிக்கும். வயசாக ஆக எல்லாம் ஒண்ணு தான்னு எல்லா இடத்துலயும் கடவுளைப் பார்ப்போம். ஏன் நாமளும் கூட கடவுளின் ஒரு வடிவம்தான்ற நிலைக்கு உயரணும். அதைதான் நம்ம வேதங்கள், புராணங்களும் சொல்லுது'' என்று அப்பா விளக்கினார்.

அந்த நேரத்தில் அம்மாவும் வந்து சேர்ந்து, “ஆனா ஒண்ணு. என் கடவுள்தான் உசத்தி. அதை நம்பினாதான் உங்களுக்கு மோட்சம் கிடைக்கும்னு சொன்னா அதை மட்டும் நம்பக்கூடாது. அது நம்ம நாட்டுக்கு ஒத்து வராத சிந்தனை'' என்றார் தெளிவாக.

எல்லோரும் கோயிலுக்கு புறப்பட காரில் ஏறி உட்கார்ந்தார்கள்.

**ஒருவரைப் பற்றி ஓரகத்து ஒரு!**

**ஒருவனை-**நல்லவனான, திறமைசாலியான ஒருவன்,

**பற்றி-** துணையாகக் கொண்டு,

**ஓரகத்து-** ஓரிடத்தில்

அறிவும் திறமையும் முதிர்ச்சியும் கொண்ட ஒருவனைத் துணையாகக் கொண்டு ஒரு இடத்தில் வசிக்க வேண்டும்.

# விழாக்களும் விரதங்களும்

-செல்வம்

மாசி மாதத்தில் வரும் பௌர்ணமியும், மகம் நட்சத்திரமும் இணைந்து வரும் நன்னாளை மாசி மகமாகக் கொண்டாடுகிறோம். சாஸ்திர முறைகளின் படி, சந்திர பகவான் சிம்ம ராசி மகம் நட்சத்திரத்திற்குள் சஞ்சரிக்கும் நாளையே மாசி மகம் என்கிறோம். அதுவே குரு பகவான், மகம் நட்சத்திரத்திற்குள் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நுழைவார். அந்த நாளை தான் மகாமகம் என குறிப்பிடுகிறோம். இவ்வருடம் மார்ச் 3 2026 அன்று மாசி மகம் அனுசரிக்கப்பட இருக்கிறது. அனைத்து மாதங்களிலும் மகம் நட்சத்திரம் வந்தாலும் மாசி மாதத்தில் வரும் மகம் நட்சத்திரத்திற்கு ஒன்று அல்ல, பல தனிச்சிறப்பு உண்டு.

மாசி மகத்தன்று கடலாடும் விழா என்று கொண்டாடப்படுகிறது. மாசி மக திருநாளில் அனைத்து திருக்கோவில்களிலும், தீர்த்தவாரி சிறப்பாக நடைபெறுகிறது. சிவபெருமான் வருணனுக்கு சாப விமோசனம் அளித்ததும் இந்நாளில்தான். இதனால் சிவனை வழிபடுவதற்கும் உகந்த நாளாகிறது மாசிமகம்.

மாசித் திருநாளில் நீராடல் என்பது வருணனோடு தொடர்புடையது. வருண பகவானுக்கு பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டதால் கடலில் கட்டுண்டு கிடந்தார். உலகம் வறட்சியால் பாதிக்கபட்டது. தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட இறைவன் வருணனை மாசி மகத்தன்று பிரம்மஹத்தி தோஷத்திலிருந்து விடுவித்தார். விடுதலைப் பெற்ற வருணன் தான் கடலில் இருந்த காலத்தில் வழிபட்டு சிவனின் அருள் பெற்றதால் அந்நாளில் தன்னைப் போன்று வழிபடும் அனைவரும் உயர்வு பெற வேண்டுமென வரம் பெற்றான். அதனால் மாசி மகத்தன்று நீராடல் தொடங்கியது.

திருஞானசம்பந்தர் மாசி மகத் திருநாளைத் தனது பதிகத்தில் "கடலாடல்' என்னும் சொல்லினையும் இணைத்து,

"மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக் கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்...'

என்று பாடியிருப்பதால், 7-ஆம் நூற்றாண்டிலேயே "கடலாடல்' இருந்துள்ளது என அறிய முடிகிறது.

திருச்செந்தூரில், இரண்டாம் வரகுணபாண்டியனின் (கி.பி.862) மூன்று அதிகாரிகள் 1400 பொற்காசுகளை மூலதனமாகக் கொண்டு பல விழாக்கள் நடத்தியதையும், அதில் ஒரு விழாவாக "மாசி மகம்' குறிக்கப்பட்டுள்ளளதையும் கல்வெட்டுகளில் காணலாம்.

இதேபோல் முதலாம் ராஜராஜ சோழன் காலத்தில் (கி.பி.1009) திருச்சி மாவட்டம், திருப்பராய்த்துறை மகாதேவர்க்கு மாசி மகத்தன்று பெருந்திருவமுது படைக்க நிலம் தந்ததையும், ராசேந்திர சோழன் 4ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1016) நாகப்பட்டினத்தில், மாசி மக விழாவின் ஆறாம் நாள் செலவுகளுக்காக நிலமளித்தையும், முதலாம் குலோத்துங்க சோழனின் (கி.பி.1070-1126) தளபதி நரலோக வீரன் சிதம்பரம் கோயிலில் நடத்திய மாசிக் கடலாடலைப் பற்றியும், திருமறைக்காட்டில் ஏழு நாள் கொண்டாடப்பட்ட மாசித் திருநாள் பற்றியும், குடுமியான் மலையில் மாசி மக விழாவின்போது தெய்வங்கள் நீராடுவதையும், மண்டபம், தோப்புகளில் காட்சி தருவதையும், அத்தெய்வங்களுக்கு பெருந்திருவமுது படைக்கப்படும் மரபுகளையும் கல்வெட்டுச் செய்திகள் விளக்குகின்றன. திருவரங்கத்தில் உள்ள கி.பி. 1531-ம் ஆண்டு விஜயநகர் காலக் கல்வெட்டில் உறையூரில் நடைபெற்ற மாசிமக விழா, குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலக்கிய கல்வெட்டு வரலாற்றுச் சான்றுகள் மூலம் மாசிக்கடலாடுதல் தமிழர்களின் பழந்திருவிழா என்று அறிய முடிகிறது.

உமா தேவியார் மாசி மாதம் மக நட்சத்திரத்தில் தான் தட்சணின் மகளாக, தாட்சாயணியாக அவதரித்தார் என்பதால் மிகவும் புண்ணிய நாளாக கருதப்படுகிறது.

கும்பகோணத்தில் உள்ள தீர்த்தம் மகாமக தீர்த்தம். மகாமகப் பெருவிழா வடநாட்டில் நடக்கும் கும்பமேளாவைப் போன்று பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வருகிறது. மகாமகக் குளத்தில் மாசி மகத்தன்று கங்கை, யமுனை, சரஸ்வதி, காவிரி, கோதாவரி, பொருநை போன்ற புண்ணிய நதிகள் எல்லாம் நீராடி தங்கள் பாவத்தினைப் போக்கிக் கொள்கின்றன எனப்படுகிறது.

சிவபெருமானுக்கு முருகன் மந்திர உபதேசம் செய்த நாளாக மாசிமகம் திகழ்கிறது.

வைணவ மரபிலும் மாசிமக வழிபாடு

கொண்டாடப்படுகிறது. திருமாலுக்குரிய மகம் நட்சத்திர நாளில் தீர்த்தவாரி என்னும் வழிபாட்டுமுறை பின்பற்றப்படுகிறது.

கடலுக்கு அடியில் இருந்த பூமியை பெருமாள் வராக அவதாரம் எடுத்து வெளிக்கொண்டு வந்ததும் இந்த மாசி மகத்தன்றுதான் என புராணங்கள் கூறுகின்றன.

108 வைணவ திவ்ய தேசங்களில் ஒன்றான திருக்கோட்டியூரில் திருவிளக்கெடுத்தல் என்னும் வழிபாடு நடைபெறுகிறது. பெருமாளிடம் வேண்டுதல் நிறைவேறியோர் திருக்குளத்தில் விளக்கேற்றி, ஏற்றிய விளக்கினை வீட்டுக்கு எடுத்துச் செல்வர். அதனைத் தன் வீட்டின் பூஜை அறையில் வைத்து வழிபாடு செய்வர்.

மாசிமகத் தினத்தன்று நதிகளில் நீராடுவதை “பிதுர்மஹா ஸ்நானம்' என்றும் கூறுவார்கள். மக நட்சத்திரத்துக்கு “பித்ருதேவா நட்சத்திரம்' என்ற பெயரும் உண்டு. இந்தப் பித்ருதேவா தான் முன்னோர்களுக்கு ஆன்ம சாந்தியை அளிப்பவர். முன்னோர்கள் ஆத்ம சாந்தியுடன் இருந்தால் அனைத்து நன்மைகளும் கிடைக்குமென்பது நம்பிக்கை. மற்ற தினங்களில் பித்ருக்களை வழிபடாவிட்டாலும், மாசிமகத்தின் போது நீராடி பித்ருக்களை வணங்கினால் முன்னோர்கள் ஆத்ம சாந்தி பெற்று, நமக்கும் நம் சந்ததியினருக்கும் அருள்புரிவார்கள்.

மாசிமகத்தன்று ஏழு கடல்களும் திருநல்லூரில் சப்தசாகர தீர்த்தத்தில் ஒன்று கூடுவதால் அங்கு நீராடி வழிபடுதல் சிறப்பு.

**ஹோலி பண்டிகை:**

ஹோலி பண்டிகை இந்துக்களால் கொண்டாடப்படும் ஒரு வண்ணமயமான பண்டிகை ஆகும். பனி காலத்திற்கு விடையளித்து, வெயில் காலத்திற்கு வரவேற்புரை வழங்கும் காலத்தில் கொண்டாடப்படும் ஒரு பண்டிகை ஆகும். இந்த வருடம் இந்த ஹோலி பண்டிகை மார்ச் 4 2026 அன்று அனுசரிக்கப்படுகிறது.

இரணியகசிபு அசுரர்களின் மன்னனாக இருந்தான். பாகவத புராணத்தின் படி, மனிதனாலோ அல்லது மிருகத்தாலோ தனக்கு மரணம் ஏற்படக்கூடாது என்று **சிவபெருமானிடம்** அவர் வரம் பெற்றான். இந்த வரத்தைப் பெற்ற பிறகு, அவர் தனது அரக்க குணத்தைக் காட்டத் தொடங்கினான். தன்னை முழுமுதற் கடவுளாக வணங்காத மக்களைக் கொல்லத் தொடங்கினான்.

ஹிரண்ய கசிபு பிரகலாதன் மகனோ மகாவிஷ்ணுவின் மீது மிகுந்த பக்தி கொண்டிருந்தான். தந்தையை அவன் இறைவனாக ஏற்றுக்கொள்ளவில்லை. அவனை வணங்கச் சொல்லி கட்டாயப்படுத்தியும் அதை பிரகலாதன் ஏற்கவில்லை. இதன் காரணமாக, இரணியகசிபு ஆத்திரமடைந்து பிரகலாதனைப் பல வழிகளில் கொல்ல முயன்றான் ஆனால் அனைத்தும் தோல்வியடைந்தன.



பின்னர் அவர் தனது சகோதரி **ஹோலிகாவிடம்**, பிரகலாதனைத் தூக்கிக்கொண்டு எரியும் நெருப்பில் அமருமாறு கூறினான். நெருப்பிற்கு எதிரான தன்னை காத்துக்கொள்ளும் ஆற்றல் கொண்ட ஹோலிகா பிரகலாதனை எரிக்க முயன்றாள். ஆனால் அதற்கு நேர்மாறாக நடந்தது. விஷ்ணுவின் அருளால், நெருப்பிலிருந்து பிரகலாதன் காக்கப்பட்டான். ஆனால் ஹோலிகா அந்த நெருப்பில் எரிந்து போனாள். இறுதியில், மகாவிஷ்ணு **நரசிம்மராக** ஒரு தூணிலிருந்து வெளிப்பட்டு இரணியகசிபுவைக் கொன்றார்.

தீமையின் அழிவைக் குறிக்கும் வகையில் **ஹோலிகா தகனம்** நிகழ்வுடன் ஹோலிப் பண்டிகை தொடங்குகிறது. பல இடங்களில், ஹோலிக்கு முந்தைய இரவில், விஷ்ணுவின் பாதுகாப்பு சக்தியைக் கொண்டாட, ஒரு பெரிய நெருப்பு மூட்டப்படுவதற்கான காரணம் இது தான். ஹோலிகா தினத்தன்று இரவு 8 மணிக்கு மேல் மரக்கட்டைகளை வைத்து எரியூட்டி அக்னி தேவனுக்குத் தேங்காயுடன் தாம்பூலம் வைத்து இனிப்பு பண்டங்களுடன் பூஜை செய்யப்படுகிறது. ஹோலிகா தகனமானதை ஒட்டியும், பக்த பிரகலாதன் உயிர்பெற்றெழுந்த மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தும் வகையில் பக்தர்கள் ஹோலி, ஹோலி என்று உற்சாக குரல் எழுப்புவார்கள். தேங்காயுடன் பூஜை செய்த இனிப்புகளையும் அக்னியில் போடுவார்கள். மறுநாள் மக்கள் ஒருவருக்கு ஒருவர் கலர் பொடிகளைத் தூவி மகிழ்ச்சியை வெளிப்படுத்துவர். இந்த பொடி காற்றில் உயரப் பறந்து தேவர்களையும் மகிழ்விப்பதாக ஐதீகம்.

இந்த வண்ணங்கள் ஆயிர்வேத மூலிகைகளான வேப்பிலை, குங்குமம், மஞ்சள், வில்வம், போன்றவற்றால் செய்யபடுவதால் மருத்துவ நன்மைகள் கிடைக்கிறது. ஆனால், நாளடைவில் வியாபாரம் நோக்கத்திற்காக வணிகர்கள் சாயம் கலந்த செயற்கை வண்ணங்களை அதிகமாகவிற்று வருகின்றனர்.

# நல்ல தொண்டில் நல்ல உள்ளம் இல்லம் தேடி வரும் கண்ணப்பர்



வயது மூப்பின் காரணமாக பார்வைக் குறைபாடுகளால் அவதிப்பட்ட ஆயிரக்கணக்கான முதியோரையும், மாற்றுத் திறனாளிகளையும் அவர்கள் இருக்கும் இடம் சென்று, இலவச சிகிச்சை தந்து ஒளி படைத்த கண்ணினராய் மாற்றும் அரும்பணியை சத்தம் போடாமல் செய்து வருகின்றனர் கண் மருத்துவர்கள் திரு.கிருஷ்ணகுமார் மற்றும் திரு.மகாலிங்கம் ஆகியோர்.

**ஆலின் சிறு விதை**

26 ஆண்டுகள் கண் பரிசோதனை பயிற்சியில் நிறுவன அனுபவமும், நிபுணத்துவமும் பெற்ற ஆப்டோமெட்ரிஸ்ட் திரு.கிருஷ்ணகுமார்

தனது வயதான பெற்றோரை கவனித்துக்கொள்வதற்காகத் தனது தொழிலில் இருந்து விருப்ப ஓய்வு பெற்றார். தனது பெற்றோரை கவனித்துக் கொள்ளும்போது இது போன்ற வயதில் முதிர்ந்தவர்கள் பலரின் நிலையைப் பற்றி யோசித்தார்.

வயதானவர்களுக்கு, தீர்வு சிக்கலான அறுவை சிகிச்சைகளில் இல்லை. பல சமயங்களில் வழக்கமான கண் பரிசோதனைகள், ஆரம்பகால கண்டறிதல் மற்றும் சரியான நேரத்தில் கண்ணாடி அணிதல் போன்றவைகளே போதுமானது. வயதானவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஒரு துணை இல்லாமல் தானாகப் பயணிக்க இயலாததால் கண் மருத்துவ சேவைகள் பலருக்கு எட்டாக்கனியாகவே இருக்கின்றன. எனவே கண் சிகிச்சை வசதிகளை அவர்கள் இருக்கும் இடம் தேடித் தருவது என்ற தனது சிந்தனைக்கு வடிவம் கொடுத்தார் திரு.கிருஷ்ணகுமார். 2020ல் தோன்றிய இந்த சிறு விதை இன்று ஆலாய் வளர்ந்து ஆயிரக் கணக்கான முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் கண்களில் ஒளி ஏற்றி உள்ளது.

**பரிணாம வளர்ச்சி:**

முதலில் தனது உறவினர்கள் மற்றும் நண்பர்களிடையே சேவைப் பணிகளைத் துவக்கிய திரு.கிருஷ்ண குமார். திரு.நவநீத கிருஷ்ணன் -பெருமாள் ஐடிஐ, திரு.மகாலிங்கம் - ட்வின்டெக் அறக்கட்டளை (Regd.) ஆகியோருடன் இணைந்த குழுவாக இந்தப் பணிகளைத் தொடர்ந்து இன்று பெரிய அளவில் வளர்ந்து வருகிறது.

**வீட்டு வாசலில் கண் மருத்துவமனை:**

கையடக்கமான தொழில்நுட்ப வசதி கொண்ட கண் சிகிச்சை உபகரணங்களின் மூலமாக, மருத்துவமனைச் சுவர்களுக்கு வெளியே தரமான சிகிச்சைகளை வழங்க முடியும் என்பதை நிரூபித்துள்ளது இந்தக் குழு. Retinoscope, Portable Slit Lamp Biomicroscope, Non&mydriatic Fundus Camera, and Rebound handy eye pressure equipment ஆகிய கருவிகளை சிகிச்சை நடக்கும் இடத்திற்கு எடுத்துச் செல்கின்றனர். கண்ணாடி பரிசோதனை, கண்நீர் அழுத்த அளவீடு, கண்ணின் முன் மற்றும் பின் பகுதியின் விரிவான பரிசோதனை, விழித்திரை மதிப்பீடு, கண்புரை பரிசோதனை, பார்வை குறைபாடு சோதனை போன்ற மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

காட்டாங்குளத்தூர் SRM பல்கலைக்கழகத்தின் ஆப்டோமெட்ரி துறையின் முதுகலை மாணவர்கள் மற்றும் இளங்கலை ஆப்டோமெட்ரி இறுதி ஆண்டு மாணவர்கள் தன்னார்வலர்களாக இணைந்து பணியாற்றுகின்றனர்.

பல பகுதிகளில் நடத்தப்படும் ஒரு நாள் கண் சிகிச்சை முகாம்களில் அருகில் உள்ள வீடுகளில் இருந்து பயனாளிகள் கலந்துகொள்கின்றனர். ஒவ்வொரு ஒரு நாள் முகாமிலும் 15 முதல் 20 பேருக்கு விரிவான பரிசோதனை / சிகிச்சை நடக்கிறது. பரிசோதிக்கப்பட்டவர்களில் கிட்டத்தட்ட 60-70% பேரை முதன்மை சிகிச்சை நிலையிலேயே முழுமையாகச் சரிப்படுத்தும் தீர்வுகளைப் பெறுகின்றனர் மற்றும் இலவசமாக கண்ணாடிகளைப் பெறுகின்றனர். அடுத்த கட்ட சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கான ஏற்பாடுகளும் இந்தக் குழுவால் செய்யப்படுகிறது.

**பயனாளிகள்:**

கடந்த மூன்று ஆண்டுகளில் இப்படிப் பயன்பெற்றுள்ள 4,012 பயனாளிகளில் முதியவர்கள், வேத பாடசாலை மாணவர்கள், காப்பகங்களில் உள்ள மனநலம் பாதிக்கப்பட்ட பெரியவர்கள், அமைப்புசாரா தொழிலாளர்கள் மற்றும் மாணவர்கள் அடங்குவர்.

சிவபெருமானுக்குத் தனது கண்ணைத் தந்து கண்ணப்பர் ஆன திண்ணப்பர் போன்று இருக்கும் இடம் தேடி வந்து சிகிச்சை தரும் இந்த மூவர் குழுவையும் கண்ணப்பர்களாகவே ஸ்ரீதமிழ் பார்க்கிறது. அவர்கள் பணி மேன்மேலும் சிறக்க ஈசன் அருள் புரிவானாக.


# சினிமா சாரல்

- சேஷு

## வெப் சீரிஸ் : தடயம்

Zee5 வில் புதிதாக வெளிவந்துள்ள வெப்சீரிஸ் தான் தடயம். நவீன் குமார் பழனிவேல் இயக்கத்தில் சமுத்திரக்கனி,ஷிவதா நாயர் ஆகியோர் நடித்த 6 எபிசோட் கொண்ட புலன் விசாரணைத் தொடர்.

1996 -1999 களில் ஆந்திரா- தமிழகத்தின் திருவள்ளூர் எல்லையில் நடந்த தொடர் கொலை வழக்கை மையமாக வைத்து எடுக்கப்பட்ட உண்மையான கதை என்கிறார்கள். திருவள்ளூர் பகுதியில் நடக்கும் அடுத்தடுத்த கொலைகள் குறித்து எஸ்.ஐ அதியமான் (சமுத்திரக்கனி) விசாரணையை தொடங்குகிறார். புதியதாக இன்ஸ்பெக்டராக அந்த ஸ்டேஷனுக்கு வரும் லக்ஷ்மி (ஷிவதா நாயர்)க்கு இவரது விசாரணை மீது ஆரம்பத்தில் நம்பிக்கை இல்லாமல் இருக்கிறார், சக போலீஸ்காரர் அதியமானின் திறமை குறித்து சொன்னதும் தான் அவருக்கு புரிய ஆரம்பிக்கிறது. அடுத்தடுத்து கொலைகளும் விசாரணையும், கொலையாளி கைதும் எப்படி நடக்கிறது என்பதே கதை.




**உண்மை கதை:**

1998களில் சித்தூர் சகோதரர்கள் கோமிரி குண்டலா கோபால் மற்றும் குண்டலா சுப்ரமண்யம் சேர்ந்து 43 கொலைகளை செய்ததாக விசாரணையில் தெரிய வந்ததாக பத்திரிகை செய்திகள் சொல்கிறது. அதில் 12 கற்பழிப்புகளும் அடங்கும். இவர்கள் கொன்றதெல்லாம் தினக்கூலிகள் என்பதை கவனிக்கத்தக்கது. தலையில் இரும்பு ராடால் கொடூரமாக அடித்துக் கொல்வது தான் இவர்களின் ஸ்டைல். அப்படி அடித்துக் கொல்லும் போது உயிருக்குப் போராடும் நிலையில் இருக்கும் பெண்ணை கற்பழிப்பது, இறந்த பின்பும் அப்பெண்ணை கற்பழிப்பது என மூர்க்கமாக கொலை செய்துள்ளனர். சீரியல் கொலையாளிகளை கைது செய்ய ஆந்திர போலீஸுக்கு 11 ஆண்டுகள் ஆனது என்பதோடு இந்த வழக்குத் தொடர்பாக அரசுக்கு ஆன செலவு 10 மில்லியன்.

**வெப்சீரிஸ் சொல்வது:**

ஆந்திராவில் தொடர் கொலைகள் நடந்து வந்திருந்தாலும், ஒரு கொலைக்கும் மற்றொரு கொலைக்குமானத் தொடர்பையும், கொலைக்கான காரணத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் தமிழக போலீஸ் அடுத்தடுத்த 4 கொலைகள் நடந்த உடனேயே தீவிர விசாரணை செய்து கொலையாளி யார்? எந்த ஊரைச் சேர்ந்தவன் என்பதையெல்லாம் நுணுக்கமாக கண்டுபிடிப்பதாகக் காட்டியிருப்பதன் மூலம் தமிழக காவல்துறையின் திறனை பறைசாற்றும் படம் என கொண்டாடலாம். ஆனால் போலீஸ் திறமையைக் காட்டுவதோடு இத்தனை கொடூரக் கொலைகளை செய்தவன் மீது கழிவிரக்கம் வருவது போல கதையமைப்பை மாற்றியிருப்பது, தமிழ் சினிமாவுக்கு உரிய ஹீரோவை விட வில்லனை வியந்தோதும் அதே பாதையை இயக்குநர் தேர்ந்தெடுத்து இருக்கிறார். கொடூரக் கொலையாளியின் மீது மக்களுக்கு பச்சாதபம் வரவேண்டும் என்ற ரீதியில் ஏன் காட்சிப்படுத்த வேண்டும் என்ற கேள்வி வருகிறது.

கொலையாளிகளின் ஃப்ளாஷ் பேக்கில் அவர்கள் கொலை செய்வதற்கான காரணத்தை வலுவாக சொல்லவில்லை என்பதைத் தாண்டி வலிந்து காவல் துறையின் அராஜகம் தான் அவர்கள் 75 கொலைகள் செய்யத் தூண்டியது எனக் காட்டத் தவறவில்லை என்பதிலிருந்து படக்குழுவின் நோக்கம் என்ன என்பதை புரிந்துக் கொள்ள முடிகிறது. போலீஸ்காரர்களையும், அரசியல்வாதியையும் அயோக்கியர்களாகக் காட்டிவிட்டு 75 தொடர் கொலைகளைச் செய்வதனைக் கண்டு ரசிகர்களுக்கு இரக்கம் வரவேண்டும் என்பது போல கதையமைப்பதிலிருந்து தமிழ்த் திரையுலகம் எப்போது திருந்தும் என்ற கேள்வியே எழுகிறது.

வெப்சீரிஸில் சமுத்திரக்கனி எப்போதும் போல தனது நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். கொலையாளி யார் என தெரிந்த பின்பு, அடுத்தடுத்தக் காட்சிகளில் விறுவிறுப்பைக் காட்ட இயக்குநர் தவறிவிட்டார். கொலையாளிகளாக வரும் நடிகர்களின் நடிப்பு சிறப்பு. புலனாய்வு வெப்சீரிஸ்கள் எப்போதும் பரபர காட்சிகளோடு இருக்கும், ஆனால் தடயம் அந்த தடத்திலிருந்து விலகிச் சென்று விட்டது என்றே சொல்லலாம்.

வெப்சீரிஸ்க்கே உரிய சூட்சமத்தை மலையாள, ஹிந்தி திரையுலகத்திற்கு கைவரப்பெற்றது போல தமிழ்த் திரையுலகம் இன்னும் கைக்கொள்ளவில்லை என்பதை பல காட்சிகள் உணர்த்துகிறது. உண்மை சம்பவத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்டது எனும் போது உண்மையை முழுவதும் சொல்லவில்லை என்பதுடன் காட்சியமைப்பை இன்னும் சுவாரஸ்யமாக எடுத்திருக்கலாம்.

Better Luck Next Time என்றே சொல்லத் தோன்றுகிறது.

Printed by Published by Padmapriya L on behalf of Padmapriya L, Published at 77/6, 10th Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Printed at Chennai Offset Printers, No. 19/1 & 21/2, Kitabath Khan Bahadur Street, Ellis Road, Chennai - 600 002, Editor Padmapriya L.